நவாலியூர்ச்

# சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்



# கும்பாபிஷேக மலர்.

30-3-71

University of Jaffna
235.4
NAV
249692(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு: ஸ்ரீ. சிவானந்தன் சங்கரத்தை
265 NAV AR
UNIVERSITY OF JAFFNA LIBRARY 2007

உ
சிவமயம்

நவாலியூர்

# சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயக்

235.4 NAV AR
இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் நூலகம்

# கும்பாபிடேக மலர்

ARCHIVES
University of Jaffna
249692
Library
249692

சாதாரண ஆண்டு பங்குனித்திங்கள் 16ஆம் நாள்.

249692

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தலம் நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே.

— திருப்புகழ்.

அச்சுப் பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


ஆசியுரை — கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் ... i
ஆசியுரை — ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ...
கும்பாபிடேக மலர் சிறந்து வாழி — அருட்கவி சீ. விநாசித்தம்பி ... iv

1. நவாலியூர்ச் சிந்தாமணி விநாயகப் பெருமான்
சிவாசாரியார் சோமசுந்தரக் குருக்கள் ...
— சிவநெறிப்புரவலர், முதலியார் வை. மகேசன் 1

2. விநாயக சுவரூபம் — பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. (Hons.) 5

3. இறைவழிபாட்டின் பயனும், தோத்திரத்தின் வகைகளும் ...
— வித்துவான் ந. சுப்பையபிள்ளை ... 9

4. ''கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்''
— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 14

5. மதிகொண்டு விதிவெல்லும் வழி ...
— ஸ்ரீ ஞானசம்பந்ததேசிய பரமாசாரிய சுவாமிகள் 18

6. சைவசமயம் கூறும் பூரண வாழ்க்கைத் தத்துவம் ...
— பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் 21

7. வேதநாயகன் விநாயகன் ...
— வியாகரண சிரோமணி தி. கி. சீதாராமசாத்திரிகள் 26

8. மணிவாசகர் காட்டுஞ் சமயநெறி ...
— பண்டிதர், சைவப்புலவர் மு. சின்னத்தம்பி B. A. (Hons.) Dip-in-Ed. 29

9. வி-நாயகன் — ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் ... 33

10. ''தும்பிக்கை உண்டே துணை'' ...
— செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் ...
க. கி. நடராஜன் B. O. L. Dip-in-Ed. 34

11. அன்பு சிவம் — வித்துவான் பொன் முத்துக்குமாரன் B. O. L. 36

12. மணி வார்த்தை ...
— சைவப்புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 38

13. விநாயக சட்டி விரதமும், கயமுகாசுரசம்காரமும் ...
— நியாயசிரோமணி சி. சுப்பிரமணியன் ... 42

15. அன்பும் அருளும் — புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை ... 45

16. பிள்ளையார் வணக்கம் ...
— பண்டிதை சதாசிவம் அமிர்தாம்பிகை B. A. (Hons.) 46

17. பிள்ளையார் சுழியும் சிவமயமும் — புலவர்மணி சோ. இளமுருகனார் 48

18. விநாயகர் பரத்துவம் ...
— பண்டித வித்துவான் சைவப்புலவர் இ. திருநாவுக்கரசு 51

19. விநாயகனே வேதசாரம், வேதசாரமே ஓங்காரம் ...
— பிரதமகுரு பிரதிட்டாசிரோமணி சாமி. விசுவநாதக் குருக்கள் 56


ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதி.

யாழ் / நவாலியூர்


# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## தோத்திரம்.

பூதவயி ருபோற்றி நாதநட ஞபோற்றி
பொங்குகலை விந்துவடிவாம்
புண்ணியா போற்றிசிவ வண்ணனே போற்றிஉமை
புத்திரா போற்றி வரதக்
கீதைதரு மாயவன் மருகனே போற்றிஒரு
கிம்புரிச் செல்வ போற்றி
கிரியிலே பாரதம் பெருமெழுத் தாலிட்ட
கிழவனே போற்றி அமரர்
நாதனே பிரணவச் சோதியே போற்றிமயில்
நடனமுரு கற்கண்ணனே
ஞானஞ் செறிந்தபர மோனங் கடந்தஓம்
நமசிவய மூல முதலே
வேதநிறை நின்பாத சேவைசெயு மாநந்த
மிகு சிந்தை தந்தருளுவாய்
விண்ணிகர் நவாலிமணி யாலயச்சிந் தாமணி
விநாயகா போற்றி போற்றி.

— அருட்கவி சீ. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசியுரை.

கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்.
(இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்.)

அவனருளாலே அவன் தாள் வணங்கும் மரபைக் கடைப்பிடிக்கும் பாரம்பரியத்தின் வழி, எம்பெருமான் திருவருளொன்றையே புணையாகக் கொண்டு தொடங்கப்பெற்ற 'புதுப்பிக்கும் திருப்பணி' சைவப் பெருமக்களின் வண்மையால் எதிர்பாராத அளவு விரைவாக நிறைவுறும் பொற்பைக் கண்டோம். அதைத் தொடர்ந்து புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் அவனருளாலேயே நம்மனைவரின் கண்குளிரும் வண்ணம் இனிது நிறைவேறிய அற்புதக்கோலங் கண்டு நிற்கின்றோம். இவ்வேளையில், எம்பிரான் திருமுன் சிவாசாரியர் என்ற நிலையில், சைவப் பெருமக்களுக்கு ஆசியுரை வழங்கல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். கும்பாபிஷேக வைபவ அற்புதக் காட்சியில் திளைத்துத் தன் வயமிழந்து பரவசமுற்று நிற்கும் நிலையில் நின்று பேசுகிறேன். இது பேசுவதற்கு ஏற்ற நேரம் அன்று. ஆனந்தப் பிரவாகத்தில் அழுந்தி அபூர்வமான அநுபவத்தில் திளைத்திருக்கும் இவ்வேளை சொற்கள் வாயிலிருந்து வெளியே வரா. மனம் ஒரு விஷயத்தையும் நாடாது. ஆனந்தானுபவம் மட்டுமே பெருகும். இந்நிலை தேனுண்ட வண்டின் நிலை. ஆனந்தம் பெருக அது மட்டும் அநுபவத்தில் நிற்பதனால் சிறிதேனும் பயன் இல்லாத நிலை இந்நிலை. உபநிடதங்கள், "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா சஹ" எனக் கூறும் பிரமானந்த நிலை. இந்நிலை நின்று நான் கூறும் வார்த்தைகள் அநுபவம் வார்த்தை வடிவங்கொண்டு வருவதே.

கும்பாபிஷேகம் அருட்பெருங் கோலத்தினை இப்பிறவியெடுத்துக் கண்கள் பெற்ற பயன் நிறைவுறக் கண்டோம். எங்கும் வியாபித்துள்ள எம்பெருமானை தேவாலயத்தில் கருவறைக்குள் புகுத்தி, அங்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவத்தில் எழுந்தருளி இன்றுமுதல் என்றும் சாந்நித்தியமாக இருக்கும் கிரியைகளை நிறைவேற்றிப் பெருமிதம் அடைந்து நிற்கின்றோம். எங்கும் நிறைந்தவன் இறைவன் என்ற உண்மைக்கு முரணாவதன்றோ அவனைக் கட்டுப்படுத்தி ஓர் இடத்திற புகுத்தி நிறுவியதான இக்கும்பாபிஷேகக் கிரியை? என்னுங் கேள்வி எழுவது இயற்கையே. இச்சந்தேகம் எழக்கூடும் என்று இதை நீக்குவதற்காகவே ஆகமங்களுஞ் சித்தாந்த சாஸ்திரங்களும் இவ்விஷயத்தில் ஐயங்களைந்து தெளிவைப் பிறப்பிக்கின்றன. விறகு முழுவதும் தீ பரந்து இருக்கின்றது. ஆனால், கடையும் இடத்தில் மட்டுமே அது நாம் கண்ணால் கண்டுணரக்கூடிய வகை விசேடமாகப் புலனாகின்றது. வெளிவராது எஞ்சிய மற்ற இடத்தில் தீ இல்லை என்பது இல்லை. அங்கெல்லாம் இருந்தும் கண்ணுக்குத் தெரியும்படி வெளியே வருவதில்லை. கடையும் இடத்தில் மட்டும் வெளியாகின்றது. அதே போன்று எங்கும் வியாபித்துள்ள இறைவன் எல்லா இடங்களிலும் வெளிப்பட்டு நாம் உணரக்கூடிய வகை சாந்நித்தியம் கொள்வதில்லை. சர்வவியாபியாகிய அவன் திருக்கோவிலில் நிறுவப்பட்டுள்ள திருவுருவத்தில் தான் விசேஷமாகத் தோற்றியருளி எமக்கு அருளுகின்றான். எனவே, ஓர் இடத்தில் அடக்கிக் கட்டுப்படுத்தி நிறுவும் பிரதிட்டைக் கிரியை இவ்வுயரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே எழுந்தது என்பதை வேத சிவாகமங்களுஞ் சமய சாஸ்திரங்களும் அறைந்து கூறுகின்றன. பசுவின் உடலில் சூக்குமவடிவில் பரந்து சுவறியுள்ள பால் முலைகளின் ஊடாக மட்டுமே வெளியாவது போல் எங்கும் நுண்ணிதாக வியாபித்து நிற்கும் இறைவன் திருக்கோவில் திருவுருவத்தில் மட்டுமே வெளியாகின்றான் என இன்னொரு உவமையுங் கூறப்பட்டுள்ளது. இந்நவாலியில் வதியும் சைவப் பெருமக்கள் செய்த பெருந்தவப் பயனாக எம்பெருமான் இப்புனராவர்த்தன கும்பாபிஷேகக் கிரியைகளைத் தொடர்ந்து விசேட சாந்நித்தியங் கொண்டு மீண்டும், இச்சுபவேளையில் நாட்டு மக்களனைவருக்கும், ஏன் உலகனைத்துமே உய்யும் வண்ணம் எழுந்தருளிய இவ்வைபவத்தைக் கண்களிரண்டுங் குளிர இதோ காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழிபாடுகளிலுஞ் சுகமானது.
விநாயகப் பெருமானின் வழிபாடு இதர
இலேசாகக் கடைப்பிடிக்கற்பாலது. இதனுலேயே சிவாகமங்கள் விநாயகருக்குத்
தனி ஆலயம் நிறுவி வழிபடும் முறையை அருளியுள்ளன. சிவோபாசனை கடின
மானது. பல நியமங்கள் உண்டு. வழிபடும் முறையில் தவறுகள் ஏற்படின்
பெருஞ்சிவாபராதத்துக்கு ஆளாக நேரிடும். விநாயகோபாசனையோ அவ்வா
றன்று. உலக அநுபவத்தில், வீட்டில் பெரியவனுன தலைவனை அணுக அஞ்சு
கின்றேம். அவனது உயர்ந்த அந்தஸ்து அவனை அணுகும் வேளை தயக்கம்,
அச்சம், நடுக்கம் ஆகியவற்றைப் பெருக்கும். அதே தலைவனின் பிள்ளையை அணு
கும்பொழுது தயக்கம், அச்சம், நடுக்கம் ஆகியன அவ்வளவு ஏற்படுவதில்லை
சிறிது உரிமையையும் பாராட்டிக் கொண்டு நெருங்கிப் பழகுகின்றேம். இதை
நிகர்ப்பதே இறைவன் பிள்ளையாகிய விநாயகனை வழிபடும்முறை. அன்றும் இன்
றும் என்றும் பிள்ளையாகவே விளங்கியருளும் பிள்ளையாரை வழிபடும் முறையில்
தயக்கம், அச்சம், நடுக்கம் எள்ளளவேனும் ஏற்படுவதில்லை மனம் இலேசாகி.
தயக்கம் எதுவுமின்றி உபாசனை வேளை நெருங்கி அளவளாவி வழிபடுகின்றேம்.
வாழ்க்கையில் சிறுபிள்ளைகளாகவே இருக்கும் நாம் பிள்ளையார் தெய்வத்துடன்
கலந்து வழிபடும் வழியைக் காட்டிய பெருமை சைவத்திற்கே சிறப்பாக அமை
கிறது. இவ்வடிப்படையிற் போலும் சிவவழிபாட்டைக் காட்டிலும் இறைவன்
மைந்தர்களான விநாயக வழிபாடும் முருக வழிபாடும் எளிதாகின்றன. இவ்வேறு
பாடு நாங்கள் கற்பிப்பது ஒன்றே. சிவபிரானுக்கும் மைந்தர்களுக்கும் வேறு
பாடில்லை. சிவபிரான் உயர்ந்த அந்தஸ்திஞல் எமக்குக் காட்டாதனவற்றை
யெல்லாம் எம்நிலைக்கேற்ப அவன் குமரர்கள் எங்களோடு நெருங்கி உறவாடுஞ்
சிறுவர்கள் ஆனமையாற் போலும் காட்டியருளுகின்றுர்கள். இந்த உண்மையை
இன்று இங்கு கண்டு உணர முடிகின்றது. சிவபிரானுக்கு ஐந்து முகங்கள் உண்டு
என்பதை ஆகமங்கள் கூறக் கேட்டிருக்கிறேம். ஆனுல், 25 மூர்த்தி பேதங்களை
நிறுவி வழிபடும் எந்தச் சிவாலயத்திலாவது ஐந்து முகங்களை வெளியே காட்டி
யருளும் திருவுருவம் நிறுவி வழிபடப்பட்டுவருவதைக் காண்கிறேம். சிவபிரானி
னும் அபின்னமான அவன் பிளளையாகிய பிள்ளையார் ஐந்து முகங்களையும் வெளிப்
படையாகக் காட்டியருளும் இக்கருணை மிக்க அருளின் பெருமையை இங்கு
எழுந்தருளியுள்ள பஞ்சமுக விநாயகமூர்த்தியின் அருட்கோலங் காட்டுகின்றது.
விநாயக வழிபாடு இலகுவாக்கப்பட்ட சிவவழிபாடே என்பதை உணருகின்றேம்.

சிவாசாரியர் என்ற ஸ்தானத்தில் இருந்து சைவப் பெருமக்களுக்கு இவ்வேளை நினைவூட்டற்குரிய ஆகம உண்மை ஒன்று உள்ளது. பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்கி திருவுருவத்தில் விசேட சாந்நித்தியங் கொண்ட மூர்த்தியை நெறிபிறழாது நித்திய நைமத்திகங்கள் செவ்வனே நடைபெற எம்கடமைகளைச் செய்தல் மிக அவசியம். உரு ஏறத் திருவேறும் என்பது மூதுரை. நித்திய நைமித்திகங்கள் நிறைவுற நடைபெறின் உருவேறும். அதனுல் இன்று சாந்நித்தியமாகி அனுக்கிரகிக்கும் முறையில் பெரும் அபிவிருத்தியை நாம் காணலாம். நித்திய நைமித்திகங்களைப் பேணல் சைவப் பெருமக்கள் கடமை. இக்கடமைகளை உணர்ந்து அவற்றை முறையாக நிறைவேற்ற ஆக்கத்தையும் ஊக்கத்தையும் எல்லோர் மனத்திலும் புகுந்து அளிக்கும் வண்ணம் அருளும்படி விநாயகப் பெருமானை வேண்டி நீங்கள் எல்லோரும் அதற்குப் பாத்திரமாகும் வண்ணம் ஆசி கூறுகின்றேன்.

தேவாலயத்தில் நித்திய நைமித்திகங்கள் குறைவற நடைபெறின்,
வான்முகில் வழாஅது பெய்யும். மலிவளம் சுரக்கும்; கோன்முறை அரசு செய்வான். குறைவிலாது உயிர்கள் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவாலி சிந்தாமணி விநாயகப் பெருமானுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை ஒட்டி, சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவது மிகச் சிறந்த பணியாகும். இம்மலர் விநாயகப் பெருமான் திருவடி மலருக்கு அர்ப்பணமாகும் சிறப்பு மலர். பக்திமணம் கமழும் சிறப்பு மலராக, சிவானந்தத் தேன் செறியும் அன்பு மலராகத் திகழ, சங்கத் தமிழ் மூன்றுந் தந்தருளுஞ் சிந்தாமணி விநாயகப் பெருமான் திருவடிகளை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கும்பாபிஷேக மலர் சிறந்துவாழி.

புவனங்கள் எங்கும் விபூதிதரு மொளிமலர,
புண்ணிய வரம்பு மலர,
போற்றுநால் வேதநெறி ஏற்றுமா கமமெலாம்
பொங்குநெறி என்று மலர,
பவவினை யடுக்காது பரசுக மனைக்கேகும்
பக்திவயல் முற்றி மலர,
பாடுதிரு முறை மலர, பரவுமந் தணர் மலர,
பசுவினம் பெருகி மலர,
தவமருவு மடியாரின் தொகை மலர, அக்குமணி
தழுவுமெழுத் தைந்து மலர,
"தத்வமசி" யுட்பொருளை வைத்துணர மெய்த்தநலம்
தாங்குபிர ணவ சோதியின்
சிவமலர, அருண்மலர, கலைமலர, **இதழ் மலரும்**
சீரார் நவாலி யூர்வாழ்
செல்வச்சிந் தாமணி விநாயகரின் கும்பாபி
ஷேகமலர் சிறந்துவாழி.

— அருட்கவி சீ. வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Don 49/91



சிந்தாமணி விநாயகப்பெருமான் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளியமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட வைரவ சுவாமி ஆலயம்.



திருவடி சேர்ந்த சிவாசாரியார் வி. சோமசுந்தரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# நவாலியூர்ச் சிந்தாமணி விநாயகப் பெருமான் சிவாசாரியார் சோமசுந்தரக் குருக்கள்.

**சிவநெறிப் புரவலர், முதலியார் வை. மகேசன்.**

ஈழத்தின் கேந்திரமாய் விளங்குகின்ற யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நவாலியூரில் மன்னுயிர்களில் மேற்கொண்ட பெருங்கருணையினால் முழுமுதற் கடவுளாகிய சிந்தாமணி விநாயகப் பெருமான், நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்து வருகின்றனர். இவ்வாலயம் அமைப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே புளிய மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட கற்கட்டு வைரவர் கோயில் உளது. சிவாசாரியார் **கணபதீசுவரக் குருக்களே** இதன் உரிமையாளராவர்.

இவர் மெய்யன்போடு பாரத நாட்டுத் தீர்த்த யாத்திரை செய்து காசி விசுவநாதப் பெருமானை வணங்கி நிற்கும்பொழுது கைமேற் கண்ட பலனாக ஒரு பிராமணப் பெரியார் இங்குத் தாபிக்கப் பெற்ற விநாயகப் பெருமானின் சிலையைக் கொடுத்துப் பூசிக்குமாறு கூறினர். இவரது இளைய புதல்வர் **விசுவநாதக் குருக்கள்** ஆலயம் அமைத்து, முன்னேசுவரக் குமாரசாமிக் குருக்களாற் பிரதிட்டை செய்வித்தனர். இவ்விசுவநாதக் குருக்கள் நல்லூரிற் புகழ்மிக்க தம்பையாக் குருக்களெனப் பெயர்பூண்ட **கார்த்திகேயக் குருக்களின்** சகோதரியாகிய பதிவிரதா சிரோமணி **விசாலாட்சி** அம்மையாரைக் கடிமணஞ் செய்து, முறை தவறாது ஆலயத்தையும், இல்லறத்தையுஞ் செவ்வனே நடத்தி வர, விக்கினங்களைத் தீர்க்கும் எம்பிரானது திருக்கருணையினாலே தவப் புதல்வராகிய **சோமசுந்தரக் குருக்கள்** உதித்தனர்.

இவர் சகல கலைகளையுங் கலைவிற்பன்னராகிய இவரது மாமனார் சிவாசாரியார் கார்த்திகேயக் குருக்களிடந் திறம்படக் கற்றார். கற்றதைச் செயற்படுத்தும் அரிய திறன் இவரிலிருந்தது. இவர் ஆலயத்தை நாளடைவிற் சைவாபிமானிகளின் உதவியுடன் எல்லா வகையிலும் வளரச் செய்து, 1921ஆம் ஆண்டில் நா. சிவசுப்பிரமணியக் குருக்கள், நல்லூர்க் கார்த்திகேயக் குருக்கள் ஆகியோராற் கும்பாபிடேகஞ் செய்வித்தனர். வருடந்தோறும் பத்து நாள்களுக்கலங்காரத் திருவிழா நடத்திப் பின் 1940ஆம் ஆண்டு தொடக்கங் கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக்கள், மகேசுவரபூசை, புராணபடனங்கள், கயமுக சூரசங்காரம் முதலியனவற்றை நடைபெறச் செய்தனர். தாம் கண்ட காட்சிக்கமைய 1950ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் ஐந்து முக விநாயகப் பெருமானது திருவுருவத்தை முதன் முதலாக இலங்கையில் வண்ணை இராமகிருட்டிண ஆசாரியைக் கொண்டமைத்து இவரது மைத்துனர் பல்கலைக் கழக விரிவுரையாளர் **கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களாற்** கும்பாபிடேகஞ் செய்வித்தும், விநாயக சட்டிவரை 21 நாள்களும் ஐந்து சிவாசாரியார்களைக் கொண்டு இலட்சார்ச்சனை வருடந்தோறும் நிகழ்த்துவித்தும் வந்தனர்.

இவருக்கேற்ற கற்புக்கரசி மீனுட்சி அம்மையாரைத் திருமணஞ் செய்து
பற்றில்லாத இல்லறத்தைத் திருவள்ளுவரைப் போல் நடத்தி வந்தார். எல்லாமா
யுள்ள எம்பெருமானின் உண்மைப் பத்தனுகிய சோமசுந்தரக் குருக்களிற் சகல
விசேடித்த நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றன. ''தனக்கெனவாளாப்
பிறர்க்குரியாளன்'' என இவர் தனக்கோ, தன்குடும்பத்தவர்க்கோ பொருளை
ஈட்டாது, வருபனவற்றைப் பூரண திருத்தியோடும், அகமகிழ்வோடும், பரிபூரண
ஆசீர்வாதத்தோடும் பெற்றுத் தம் ஆலயத்தின் நித்திய நைமித்திக கடமை
களைச் சரிவரச் செய்தும், பசித்து வந்தோருக்கு மனமுவந்து அன்னமிட்டும்,
எஞ்சியதை இவர், இவரது தாயார், மனையாள் ஆகியோர் உண்டு ஒரு குறைவு
மின்றி ஆனந்தமாக வாழ்ந்தனர். இவர் சாதாரணமாக அணியும் உடை ஒரு
நாலுமுழ வேட்டியும், நலமுண்டுத் துண்டுமே. இவரை இல்லறத் துறவியென்று
கூறுவது மிகையன்று. இவரது தந்தையார் சிவபதமடையத் தமது தாயாரையே
தந்தை, தாய், குரு, தெய்வம் எனப் பேணி நடந்தனர். ''தந்தை சொன்மிக்க
மந்திரமில்லை, தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை, தந்தை தாய் பேண், குரு
நிந்தை செய்யேல், தெய்வமிகழேல்,'' என்பனவற்றைத் தனித்துத் தாய்க்கும்,
குரு, தெய்வம் ஆகியோருக்குஞ் செய்து வரலாயினர். உலக வழக்குக்குக் குழந்தை
யில்லாதிருந்தும், இவர் எல்லா சீவான்மாக்களையுந் தம் குழந்தைகள், தாய்,
தந்தையர் போலவே பாவித்து வந்தார்கள். ஒருவர் பிழைவிடுமிடத்தும் இன்
சொல்லாலேயே திருத்துந் தன்மை வாய்ந்தவர். அவ்வாறு கண்டிக்கப் பட்டோ
ரிற் பலர் மிகவும் பயபத்தியுடன் உணர்ந்து திருந்தியுள்ளனர்.

நன்மாணுக்கர்களுக்குத் தமக்குத் தெரிந்தனவற்றை எடுத்துரைத்தும், தமது பொருளைச் செலவிட்டு விலையுயர்ந்த சோதிட, வானசாத்திர நூல்களைப் பெற்று இன்முகத்தோடு விளக்கித் தேர்ச்சியடையவுஞ் செய்வர். தெரிந்தெடுத்த சிலரைத் தமது செலவிலே ஆலயங்களில் நடக்குஞ் சிறந்த கிரியைகளைக் காண்பித்து விளக்கஞ் செய்வதற்காகக் கூட்டிச் செல்லுஞ் சிறந்த பண்பாடும் பெற்றவர். மதிநுட்பம், வாக்குத்திறன், நுண்ணறிவு ஆகியவற்றை இருப்பிடமாகக் கொண்டவர். "நினைத்த காரியஞ் சொல்லுகின்றீர்களே! எவ்வித''மென்று கேட்டவிடத்து, மக்கள் நம்பிக்கையுடன் கேட்க வருகின்றூர்கள்; ஆகவே, விநாயகப் பெருமானே அவர்களது குறையை நீக்க, உண்மையைக் கூறி நிவாரணங் கொடுக்க வேண்டுமென்று திரிகரணசுத்தியுடன் பிரார்த்தித்து அவர் சித்தப்படியே சொல்வதுதான் நிகழ்வது.'' என்று கூறிவர்.

இவர் கூறிய ஒரு நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு சிறுவன் இன்னுமொரு சிறுவனுடன் விளையாடின இடத்து வாக்குவாதம் ஏற்பட்டதால் மற்றவன் தனது தந்தையைக் கொண்டு பெல்லி விட்டு இவன் திறனைப் பார்ப்பதாகக் கூறவே, இச்சிறுவன் மௌனமாகத் தமது வீட்டில் தனித்த ஓர் அறைக்குட் சென்று கதவைத் தாழிட்டபின் ஓர் இடத்திலிருந்து சுவரில் ஒரு வட்டமிட்டுத் தான் உட்செல்லும்போது எடுத்துச் சென்ற பூவரசமிலைகளை ''ஓம்'' என்று ஒவ்வொருமுறை சொல்லும்போதும் ஒவ்வொரு இலையாக அவ்வட்டத்திலிட்டுப் பூசித்துத் துயிலின்றி அன்றைய முழு இரவையுங் கழித்ததாகவும், அவனது பெற்றோர் தம் சிறுவனை எங்குத்தேடியுங் காணுது விசனித்திருந்ததாகவும், மறுநாட்காலை சிறுவன் வெளிவந்தவிடத்து, மற்றைச் சிறுவனின் தந்தை இறந்துவிட்டதை அறிந்து வருந்தியதாகவுங் கூறி, நாம் மனத்தைச் சிதறவிடாது ஒரே சிந்தனையாகத் தியானிப்பது அவசியமெனக் குருக்களவர்கள் வற்புறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். குறைபாடு காரணமாக நோயுற்ரோருக்கு விபூதியிட்டும், நூல் மந்திரித்துக் கட்டியும், யந்திரத்தைப் பூசையில் வைத்து அணியச் செய்துந் திருவருட் கடாட்சத்தாற் சுகமடையச் செய்தனர்.

சில ஆலயங்களில் ஆவாகனஞ் செய்த யந்திரத் தகடுகளை எடுத்து வந்த காலங்களில், இரண்டொருமுறை இவ்வாலயத்துட் திருடர் செல்ல முயன்றும், இவரது மதிநுட்பத்தால் செய்வித்தமைத்த பூட்டைத் திறக்க முடியாமையாலும், அங்குள்ள விசேடித்த மூர்த்திகரத்தால் இவரது சொப்பனத்திற் தோன்றி இவரை ஆலயத்திற்குச் செல்லும்படி பணிக்க, இவர் அவ்வாறு செய்தமையாலுங் கள்வர்கள் படுதோல்வியடைந்தனர்.

இவருக்குக் குழந்தைகள் இல்லாத வகையில் இவரது ஒரே சகோதரி நீலாம்பிகை அம்மாவின் மருகர் சுப்பிரமணியக் குருக்களை அன்புடன் வளர்த்து, நன்கு கல்வி பயிலச் செய்து, சாமி விசுவநாதக் குருக்களின் மேற்பார்வையில் இவ்வாலய முழுப் பொறுப்பையும் ஒப்படைத்து 1957-ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் விநாயகப் பெருமானது திருப்பாதங்களை அடைந்தனர்.

சுப்பிரமணியக் குருக்கள் கீர்த்திமிக்க சாமி விசுவநாதக் குருக்களின் மூத்த புதல்வி சிறீ வரமங்கை அம்மையைத் திருமணஞ் செய்து, ஆலய பரிபாலனத்தில் எதுவித குறைவுமின்றித் திறம்பட நடத்தி வருகின்ருர். ஆலயக் கட்டிடங்கள் பழுதடையாமல் திருத்தி அமைக்க வேண்டிய வகையில், சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் 22-ஆம் நாள் பாலத்தாபனஞ் செய்து, பெருமக்களின் பேருதவி கொண்டு கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிர்த்த மண்டபம், சபை, யாகசாலை, மடைப்பள்ளி, மூசிகம், பலிபீடம், தம்பம் ஆகியவற்றின் தளங்கள், மதில் முதலியனவற்றை அத்திவாரந் தொடக்கம் மிகவுமலங்காரமான அமிசங்களையுடைய இரட்டைப் பஞ்சாங்க இரு தள விமானம், விக்கிரகங்கள் வரை உறுதியாயும் எல்லோரது மனங்களையுங் கவரக் கூடியதாயும் விநாயகப் பெருமானின் திவ்விய கடாட்சத்தாலும் அவரது திருவடிகளைச் சேர்ந்த சோமசுந்தரக் குருக்களது ஆன்மசத்தியாலும் விரைவில் இனிது நிறைவேறியுள்ளன. அராலியைச் சேர்ந்த திருவாளர்கள் மார்க்கண்டுவும், இராசரத்தினமும் தளங்கள், விமானங்கள் முதலியனவற்றைப் பாரத நாட்டுச் சிறந்த சிற்பிகளுக்கு நிகராக, மற்றும் ஆலயங்களின் அமைப்பிலும் பார்க்கத் திறனுக, ஒரு சிலரின் குறிப்புக்களை அனுசரித்து அழகுறச் செய்தமை பாராட்டுக்குரியதே. விக்கிரகங்களையும், சபையின் மாநாசியையும், அவற்றினதும் விமானங்களினதும் வண்ண வேலைகளையும் மிகவுந் திறம்படச் செய்த தென்னிந்திய சிற்ப விற்பன்னராகிய நாகலிங்க ஆசாரியின் திறன் மிகவும் பாராட்டத்தக்கது. ஒவ்வோர் விக்கிரகமும் ஒப்புயர்வற்றுச் சுயமாகச் சோபித்திருப்பதைக் காணலாம்.

சாதாரணவருடம் பங்குனிமாதம் 17-ஆந் தேதி விமரிசையாக வேத முறைப்படி இனிது நிறைவேறிய மகா கும்பாபிடேகத்திற்குரிய யாகசாலைகள், வேதிகைகள் ஆகிய எல்லாவற்றையும் முறைப்படி அலங்காரமாக அமைத்து, கிரியைகளை ஆகம விதிப்படி வழுவின்றிச் செய்ய ஏழு நாள்களுக்கு அவற்றைப் பிரித்து வைத்தும், வியாகரண சிரோமணி வேத விற்பன்னர் பிரமசிறீ சீதாராம சாத்திரிகளின் ஒழுங்கின்படியும், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைப்படியும், பத்தி, தூய்மை, அறிவு ஆகியவை அமையப்பெற்ற சிவா சாரியார் சாமி விசுவநாதக் குருக்கள் பிரதம குருவாகவும், வேறு சிறந்த எட்டுக் குருக்கள்மார் அவருக்குதவியாகவும், வேத உபாத்தியாயர் பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாத்திரிகளும் மற்றுந் தகைமை வாய்ந்த குருமார்களும் வேத பத்ததி வாசிக்க வும், வேதபாராயணஞ் செய்யவும், பல அந்தணர்கள் துணைபுரியவும், சைவப் பெரியார்கள் திருமுறை ஓதவும், நடைபெற்ற கிரியைகளும், காட்சிகளுங் கண் கொள்ளாக் காட்சிகளே. இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மருக்கொழுந்து, செவ்வந்தி, மரு, தாழம்பூ, அலரிமலர், நுவரெலியாச் செவ்வந்தி, உள்ளூர்ச் செங்கழுநீர், நீலோற்பலம், செந்தாமரை, உரோசா ஆகிய மலர்களால் ஆக்கப் பட்ட ஆரங்களைச் சூடிய ஐந்து கும்பங்களும், விசிறி, சாமரை, குடை, கொடி, ஆலவட்டம், மகரதோரணம், கற்பூரதீபம், சாம்பிராணித் தூபம், நறுமணங் கமழும் பன்னீர், வேதபாராயணம், திருமுறையோதல், உயர்தர மேளவாத்தி யம், சங்குநாதம் ஆகிய வரிசைகளுடன் வீதிவலம் வந்த காட்சி வருணனைக்கு அப்பாற்பட்டதே. இவ்வித வேதமுறைப்படி நடக்குங் கும்பாபிடேகங்கள் அரி திலும் அரியவே. அன்றைய மாலைத் திருவூஞ்சலும் தண்டிகையில் எழுந்தருளிய திருவுலாக் காட்சியும் தனிப்பெருமையுடையன. முறைப்படி கும்பாபிடேகம் நடந்தேறியதென்பதற்கறிகுறியாக "வான்முகில் வழாது பெய்க" என்பதற் கமைய மழை பொழிந்தது.

சைவம் ஓங்குக! சைவக்கலை பெருகுக!! சைவநெறி விளங்குக!!!


சிவம்.

---

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றுடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிர்த்த மண்டபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவிக்கிரகம், உற்சவமூர்த்திகள்.



ஆலய விமானத் தென்புறக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கணேசாய நம:

# விநாயக சுவரூபம்

பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் (B. A. Hons.)

கணேச பூசை அல்லது பிள்ளையார் வழிபாடு பரத கண்டத்திலே தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. வேதத்தை முதனூலாகக் கொண்ட அறு வகைச் சமயங்களுட் காணபதமும் ஒன்று. "காணபதம்" என்றும் கணபதியை முழுமுதற்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயமாம். இக் கடவுளைப் பற்றிய முதன்முதல் வரலாறுகள் வேதங்களிலே காணப்படுகின்றன. புராணங் களில் விக்கினங்களை நீக்கும் தெய்வமாக விநாயகக் கடவுள் விளங்கும் இடங்கள் பலப்பல உள. சேது நிர்மாணப் பெரும்பணியில் ஈடுபடுவதற்கு முன் ஸ்ரீராமர் முதலிற் கணபதியை வணங்கியதாக இராமாயணம் கூறும். வியாச பகவான் ஸ்ரீ மகாபாரதம் என்னும் இதிகாசத்தை எழுதுவதற்கு விக்கினேசுவரருடைய உதவியை நாடினுர் என்று அறிகிறோம். நாட்டியங்களைத் தொடங்குவதற்கு முன் விநாயகப் பெருமான் முதலில் வணங்கப்பட வேண்டியவரென்றும் அவரே மகாக்கிரமணி (Mahagramani) என்றும் தமது நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் குறிப்பிடுகின்றுர்.

## கணபதி என்றுல் என்ன?

கணபதி என்றுல் எல்லாவற்றிலும் உயர்ந்தது என்பது பொருள். 'க' என்றுல் (அறிவுலகிற்) புகுதல் என்றும், 'ண' என்றுல் (அறிவின்) அந்தம் என் றும், 'பதி' என்றுல் பாதைக்கும் அந்தத்துக்கும் தலைவன் என்றும் பொருள். எனவே, ஞானமாகிய பாதைக்கும் அதன் அந்தத்துக்கும் தலைவனுயுள்ளவன் என்பது பொருள்.

ஓங்காரமாகிய நாத பிந்து கலாதியே கணபதியாம்.

உயிர் 16 உம், மெய் 35 உம் ஆகிய 51 எழுத்துக்களும் பிரணவத்துள் அடங்கும் (அகராதி க்ஷகாராந்த மஹாசரஸ்வதிமய) மாக விளங்குபவரே கண பதியாவர். அவற்றுள் 16 மூர்த்தங்கள் மிக விசேடமாகக் கொள்ளப்படுபவை. அவை: 1. பால கணபதி 2. தருண கணபதி 3. பக்த கணபதி 4. வீர கணபதி 5. சக்தி கணபதி 6. த்வஜ கணபதி 7. சித்தி கணபதி 8. உச்சிஷ்ட கணபதி 9. விக்கினராஜ கணபதி 10. க்ஷிப்ர கணபதி 11. ஹேரம்ப கணபதி 12. லக்ஷ்மி கணபதி 13. மஹா கணபதி 14. விஜய (புவனேச) கணபதி 15. நிருத்த கணபதி 16. ஊர்த்வ கணபதி என்பனவாம்.

விநாயகர் முதலில் விக்கினங்களை உண்டாக்கும் விக்ன — கர்த்தாவாக விளங்கினுர். பின்னர் விக்கினங்களைப் பரிகரிக்கும் விக்ன — ஹர்த்தாவாக விளங் கினுர். விக்ன கர்த்தாவும், விக்ன ஹர்த்தாவும் ஒருவரே என்பதை கணேச உபநிஷத்தில் வரும் வரிகள் காட்டும். (த்வமேவ கேவலம் கர்த்தாஸி 1 த்வமேவ கேவலம் தர்த்தாஸி 1 த்வமேவ கேவலம் ஹர்த்தாஸி 1) இங்ஙனம்



கு — 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னங்களுக்கு கர்த்தாவாக விளங்கியவரே விக்னங்களுக்கு ஹர்த்தாவாகவும் விளங்கியமையே விநாயக வணக்கம் மேன்மேல் வளர்ந்தோங்கியமையைக் காட்டும். எனவே, ஒரு வாஸ்த்து சாந்தியோ புண்ணியாகவாசனமோ, கிருகப்பிரவேசமோ எந்தச் சுபகருமமாயினும் கணேசபூசையின்றி நடப்பதில்லை. எனவேதான் நாம் எந்தக்கருமத்தைச் செய்யினும்அத் தரும சக்கரத்தில் இடையூறு நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளும்படி அவரை வேண்டுகின்றோம்.

## வடக்கிலும் தெற்கிலும் கணேசர் பற்றிய வரலாறு.

கணபதியைப் பற்றி வடக்கிலும் தென்னாட்டிலும் உள்ள வேறுபாடுகள் ருசிகரமானவை. கிருஷ்ணா நதிக்கு வடக்கே கார்த்திகேயன் அல்லது சுப்பிரமணியருக்கு கணேசன் தம்பியாகக் கொள்ளப்படுகிறான். கிருஷ்ணா நதிக்குத் தெற்கே கணேசன் தமையனாக விளங்குகிறார். "ஸ்கந்தாக்ரஜ" என்னும் சொல் இதைக் குறிக்கும். "குமாரசம்பவம்" போன்ற சில இலக்கிய நூல்கள் சிவ குமாரர்களுக்குள் கணபதியை இளைய பிள்ளையாகவே கூறுகின்றன.

சகோதரர்களுடைய வரலாறுகளில் இன்னுமொரு முக்கிய விசித்திரமுமுண்டு. கிருஷ்ணா நதிக்கு வடக்கே கார்த்திகேயன் நைட்டிய பிரமசாரியாகவும் தெற்கே இரு சக்திகளோடு கூடியவராகவும் வழங்கப்படுகிறார். ஆனால், கணபதியோ தமயன் பிரமசாரியாக விளங்கும் பகுதிகளில் இரு சக்திகளோடும் தம்பியாகிய ஸ்கந்தன் இரு சக்திகளோடு விளங்கும் தென்னாட்டில் பிரமசாரியாகவும் விளங்குகிறார். இச் சிறு வேறுபாடுகள் புராணக் கதைகளோடு நோக்கின் துரும்பாகும். உதாரணமாகப் பார்வதி சிவனைத் தன் பதியாக அடைவதற்கு விநாயகரைக் குறித்துத் தவஞ் செய்தாள் என்பது புராணம். இன்னும் நேபாளத்தில் கன்னியர் நல்ல கணவரை அடைவதற்கு செவ்வாய்க்கிழமை தோறும் கணேசவிரதமும்............ நோன்பும் அனுட்டிப்பர். நேபாளத்தில் சூர்யவிநாயகர், ரக்த விநாயகர், சந்திர விநாயகர், அசோக விநாயகர், சித்தி விநாயகர் என்னும் பெயர்கள் பிரசித்தமானவை. "நாதுராம் விநாயக" என்னும் பெயரும் நோக்கற்பாலது.

நேபாளத்தில் அசோகன் மகளாகிய சாருமதி என்பாள் விநாயக வழிபாட்டைப் புகுத்தினாள் என்பது சரித்திரம். அங்கு சைவர்கள் பௌத்தர்கள் என்னும் இருசாரரும் விநாயக வழிபாடு செய்வதுண்டு. நேபாளத்தில் பின்வரும் வரி விநாயக வணக்கத்தைக் குறிக்கும். "நமோ பகவதே ஆர்ய கணபதி ஹ்ருதயாய". இதில் 'ஆர்ய' என்னும் சொல் விசேடமானது. நேபாளத்திலும் தீபேத்திலும் இந்துசமயமும் புத்தசமயமும் பின்னிப் பிணைந்த ஒரு விசித்திர நிலை காணப்படுகிறது. இங்ஙனமே தென்கிழக்காசியாவிலும் விநாயகரைப் பற்றிய பல வரலாறுகள் உள. விரிப்பிற் பெருகும்.

## விநாயக தத்துவம்

விநாயகர் பூமி தத்துவத்தை உடையவர். பூமி தத்துவமான மூலாதாரத்தில் வ, ஶ, ஷ, ஸ என்னும் நான்கு எழுத்துக்களையுடைய தாமரை மலரில் வசிப்பவர். பஞ்சாயதன தேவதைகள் பஞ்சபூதமயமானவை. சிவ : கம், அனில : ஶக்தி : ரவிரக்னி : ஜலம்ஹரி : மஹீ கணேஶ :, ஸம்ப்ரோக்த : விஸ்வமே தன்மயம் நும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் — ஆகாயம்; வாயு — அம்பாள்; சூரியன் — அக்கினி; ஜலம் — விஷ்ணு; பூமி — கணேசன்.

கணேசன் என்னும் விநாயகர் பூமிதத்துவத்தையுடையவராக இருப்பதாற்ருன் விநாயக சதுர்த்தி, விநாயக ஷஷ்டித் திதிகளில் களிமண்ணுற் செய்த பிள்ளையாரைப் பெரியோர் சிறியோர் யாவரும் பூஜை செய்து வருகின்றனர்.

**மோதக தத்துவம்.**

மோதகம் — பூர்ணம்

விநாயகருக்கு மிகப் பிரியமானது "மோதகம்" என்னும் கொழுக்கட்டை. இது "முத்" 'மகிழ்' என்னும் வினையடியாகப் பிறந்தது. மோதம் என்பதுதான் மோதகம். இது ஆனந்தத்தைக் கொடுப்பது "ஆநந்தோ மோத : ப்ரமோத :" என்று வேதம் கூறும்.

இம்மோதகம் அரிசிமாவினுலாய கவசத்தையும் தேங்காய், பருப்பு, வெல்லம் என்பவற்ருலாய பூர்ணத்தையுமுடையது. கவசம் என்ருல் மறைத்தல் (coating) அதாவது பூர்ணத்தைக் கவசம் மறைத்துக் கொண்டிருக்கின்றது. மோதகம் பிரபஞ்சத்தைக் குறிப்பது. இந்தப் பிரபஞ்சம் சத்து, சித்து, ஆனந்தம், நாமம், ரூபம் என்னும் ஐந்தம்சங்களையுடையது.

பூர்ணம் என்ருல் ஸத், சித் ஆனந்தம் என்று கூறப்படும் பிரமமே,. 'இப்பிரமம் அக்ஷரமானது. அஃதாவது அழிவில்லாதது. அக்ஷரம் என்ருல் ஐம்பத்தோரக்ஷரங்களையும் குறிக்கும். பூர்ணம் என்ருலும் கடபயாதி ஸங்க்யாரீதியாக 51 என்ற எண்ணைக் குறிக்கின்றது.

பூர்ணமத : பூர்ணமிதம் பூர்ணுத் பூர்ண முதச்யதே !

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே !!

என்பது உபநிடதம்.

இப்பூர்ணமான சச்சிதானந்தத்தை நாமம், ரூபம் என்பவைகள் மறைத்திருப்பதுபோல் கொழுக்கட்டைக்குள் இருக்கும் பூர்ணத்தைக் கவசம் மறைத்திருக்கின்றது.

ஆனுல் வெளியே தெரிவது நாமமும் ரூபமும் தான். புறத்தே தெரியும் நாமமும் ரூபமும் கொழுத்துப் போய்ப் பளபளப்பாக இருந்து கொண்டு உள்ளிருக்கும் சச்சிதானந்தமான பிரும்மத்தை மறைத்திருப்பது போல அரிசிமாவாற் செய்த கவசமும் கொழுத்துப் பளபளப்பாக இருந்து கொண்டு உள்ளிருக்கும் பூர்ணத்தை மறைத்திருக்கின்றது. இதனுற்ருன் மோதகத்துக்குக் கொழுக்கட்டை என்று பெயர் வந்தது. அஃதாவது கொழுத்துக் கட்டையாக இருக்கின்றது.

இக்கொழுக்கட்டை என்னும் மோதகத்தை விநாயகர் கையில் வைத்துக் கொண்டிருப்பது தன்னை அண்டினேர்கள் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து கொண்டே பிரும்மானந்தத்தை அடையலாம். அதாவது இப்பிரபஞ்சத்திலிருப்பவர்கள் என்னை ஆச்ரயித்தால் நான் அவர்களுக்கு பிரும்மானந்தத்தை அளிப்பேன் என்பதைத் தான் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயக பரத்துவம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்.

(பொழிப்புரை)

ஐந்து திருக்கரங்களையும், யானை முகத்தையும், அம்முகத்தின்கண் சந்திரனது மூன்றும் பிறையையொத்துத் துலங்குகின்ற ஒற்றைக் கொம்பினையுமுடையவரும், பரசிவமூர்த்தியின் மூத்த குமாரரும், ஞானத்தினது கொழுந்துபோல விளங்கும் திருமேனியையுடையவருமாகிய விநாயகக் கடவுளினது திருவடிகளை எனது சித்தத்தின் குடியாக வைத்துத் துதிக்கின்றேன்.

இது 'மந்திர மாலிகா' என்னுந் திருமந்திரத்தில் திருமூலநாயனர் அருளிச் செய்த காப்புச் செய்யுளாகும். கணங்களுக்குத் தலைவனுகிய விநாயகப்பெருமானின் பரத்துவத்தை விளக்குவதாக இக்காப்புச் செய்யுள் அமைவது மகிழ்ந்து உவக்கத்தக்கது. சிவானந்தானுபவ முதிர்ச்சி எய்திய நாயனர் ஏனைய மாந்தர்க்கு வழிகாட்டியாக இச்செய்யுளை அருளினர்.

மறையவர் குலத்து மாதவப்பயனய் அவதரித்த கௌணியர் திலகமாகிய காழிப்பிரானர் காயத்திரிப் பிரவணப் பிரதமாக்ஷரத்தை தமது தேவாரத் திருப்பாசுரத் தொடக்கத்தில் மங்கலமாக அமைத்தருளினர். திருஞானசம்பந்தப்பிள்ளையார் தமது காயத்திரி உபதேச காலத்திலே ''கணநாம்திவா'' என்ற மந்திரத்தால் சம்ஸ்காரம் பெறும் மரபினர். ஆதலின் விநாயகரின் காப்பாகக் காயத்திரி முதலெழுத்தையும் 'ஸதாசிவோம்' என்னும் ஈசானதி மந்திரங்களிற் குறித்தவாறு பரசிவத்தின் காப்பாகப் பிரணவ முதலெழுத்தையும் சேர்த்துக் காப்புச் செய்தருளினர். அவ்வாறே திருமூலநாயனரும் நான்முகத்தில் விநாயகரையும் பின்பு பரசிவத்தையும் காப்பாக அமைத்துத் துதித்தார் என்க. அன்றியும் தமது யோகநிலையில் ஆறுதாரங்களிலுமெழுந்தருளியிருந்த ஈசன் திருமேனிகளை முறை பிறழாது கண்டு உபாசித்தவராதலால் ஆறுதாரங்களுள் முதலாதாரமாகிய மூலாதாரத்தில் எழுந்தருளிய கஜாநநரையும் ஆதாரமாறுங்கடந்த பிரமரந்திரத்தின்மேல் துவாதசாந்தத்தலத்திலெழுந்தருளிய பரமானந்த தாண்டவமூர்த்தியையும் துதித்தார்.

'ஐந்து கரத்தனை' என்றது ஐந்தாவது கரமெனப்படும் துதிக்கை பிரணவாகாரமாதலால் அதனைச் சிறப்பித்தற்கே. ஐந்து கரத்தன் என்பது ஐங்கரன் எனவும்படும். படவே ஐந்தாகிய பஞ்சகிருத்தியத்தைச் செய்பவன் என்றும் பொருள்படும். பஞ்சகிருத்தியபரனுகிய ஐந்துகரனைத் தந்தையாகப் பெற்றவன் ஐந்துகரத்தான் என அன்மொழித் தொகையாகக் கொண்டு கூறினுமாம். அன்றியும் தேவீபஞ்சப் பிரணவங்களில் முதன்மை பெற்ற மஹாஸாரஸ்வத பீஜமாகிய ஐங்காரத்தை முன்னரமைத்த முறையும் சிறப்புடையது.

''இந்து இளம்பிறை போலு மெயிற்றனை'' என்பதில் இந்து மஹாசக்தி சொரூபம். ஆதலின், முதலிற் குறிக்கப்பட்ட ஈசனரூட்சக்தி ஈண்டு விளக்கப்பட்டது. 'இளம்பிறை' என்றது ''ஞானசந்திர கலாசூடம்'' என்று புராணம் கூறியவாறு சுத்த சிவதத்துவத்தைக் குறித்தது. சிவாபின்னமாகச் சிறப்பித்துக் கூறிய சரித்திரங்களை உணர்ந்து விநாயகப்பெருமானை முழுமுதற்கடவுளாகக் கருதி வழிபட்டு இம்மை மறுமைப் பயனைப் பெற்றுய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய மேற்குப்புறக் காட்சி.




ஆலயச் சித்திரவேலைகளின் வடபுறக் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசேடசந்தி, பூதசுத்தி.



பிரதான யாகசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை.

# இறைவழிபாட்டின் பயனும், தோத்திரத்தின் வகைகளும்.

வித்துவான், ந. சுப்பையபிள்ளை
இளைப்பாறிய தலைமை ஆசிரியர், ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை.

"ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்."

— ஔவையார்: நல்வழி — செய். 27.

'சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய ஆன்மாக்களாகிய நாம், இயற்கைப் பேரறிவும் பேராற்றலும் பெருங்கருணையும் உடைய முழுமுதற் கடவுள் எங்கள் மீது கொண்ட கைம்மாறு கருதாத பெருங்கருணையால், எமது பாசபந்தம் நீங்கி உய்தி பெறுதற்பொருட்டு எமக்கு இச்சாஞானக் கிரியாசக்திகளைத் தந்து உதவப் பெற்றும் அக்கருத்துக்கு மாறாக உலகச் சிற்றின்ப வாழ்க்கைக்குரிய தொழில்களையே செய்து வாழ்கின்றோம். அதனால், அப்பொழுது நாம் ஈட்டிய நல்வினை தீவினைகளுக்கு ஈடாக அக்கடவுளின் நியமனப்படி இன்பதுன்பங்களாகிய பயன்களைப் பெற்று வாழ்கின்றோம் என்பது சுருதி யுக்தி அனுபவங்களால் நிச்சயித்து உணரப்படும் உண்மையாகும். இக்கருத்தினையே ஔவை மூதாட்டியார் இச் செய்யுளால் உலகர்க்குச் செவியறிவுறுத்தியருளினார். இன்னும் அவர்,

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு."

— மூதுரை — காப்பு.

என்றும் உபதேசஞ் செய்துளர்.

'விநாயகக் கடவுளைப் பூசித்துப் பக்தியுடன் வழிபடுவார்க்கு வேதாகமாதி சகலகலை ஞானங்களும் (உலகியலறிவும் வீட்டியலறிவும்) கைவரும்; அன்பு அருளாதி அறவழிச் சிந்தையும் விருப்புஞ் செயலும் கைகூடும்; இலட்சுமி கடாட்சமாகிய அஷ்ட ஐசுவரியப் பேறும் உண்டாகும்; போக போக்கியங்களால் நோயற்ற நீண்டகால இன்ப வாழ்வும் உண்டாகும்' என்பது இச் செய்யுளாற் குறிக்கப்பட்டது.

மேலும், ஔவைப் பிராட்டியார் தமது நல்வழியில்,

"சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க் (கு)
அபாயம் ஒருநாளும் இல்லை; — உபாயம்
இதுவே மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்."

— நல்வழி — செய். 15.

எனவும் போதித்துளர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பல பிறவிகளிற் செய்து ஈட்டிய புண்ணிய விசேடத்தால் மேலான பரிபக்குவமெய்திச் சத்திநிபாதநிலை வாய்க்கப்பெற்றவர்கள் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் ஆகிய தத்தம் பரிபக்குவ பேதங்களுக்கு ஏற்ப, சிவதீட்சைகளைப் பெற்றுச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாத நெறிகளில் முறையே நின்று ஒழுகிச் சிவபெருமானைப் பூசித்துப் பக்தியுடன் வழிபடுவார்கள்; அவர்கள் அந்நிலைமையில் 'சிவாய நம' என்று சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தை ஓதி, தியானம், செபம், பூசையாதி வழிபாடுகளைச் செய்துகொண்டு, 'யான், எனது' (அகந்தை மமதை) என்னும் இருவகைப் பற்றும் அற்ற கருத்துடன் தம் வாழ்க்கையை நடத்துவரேல், அவர்க்கு ஆணவம் முதலிய மும்மலங்களின் பந்தத்தால் எய்தும் தீங்குகள் ஒரு நாளும் உயிரைப் பற்றி வாதை செய்தல் இல்லை. பிறவித் துன்பங்களை நீங்கி உய்வதற்கு இதுவே உபாயமும் புத்தியுமாகும்; இதற்கு மாறான கருத்துள்ளவிடத்தெல்லாம் விதியின்படியே மதி சென்று துன்பத்துக்கு இடமாம்" என்பது இப்பாட்டில் விளக்கப்பட்டது. இதன் உண்மையை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமணரை வாதில் வெல்லச் சென்றமை தொடக்கம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், சூலை நோயால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின் திருநாவுக்கரசு நாயனார் சமணரிழைத்த அதிபாதகக் கொடுஞ் செயல்களினால் வாதைப்படாமல் தப்பி இனிது வாழ்ந்தமை போல்வனவுமாகிய பல நிகழ்ச்சிகள் நன்கு விளக்குவனவாகும்.

பரமபதியாகிய சிவபெருமான் தமது பக்தர்களாகிய தேவர் முனிவர் மனுடராதியர்க்கு எய்தும் சகல விக்கினங்களையும் (இடர்களையும்) நீக்கி அவர்களை உய்வித்தற் பொருட்டு, தேவர்கள் வேண்டிக்கொண்டமைக்கு இசைந்து தோற்றுவித்த தம்மின் வேறல்லாத மூர்த்த பேதமே விநாயக மூர்த்தம் என்பதை உட்கொண்டு, "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்......" என உபதேசித்தனர் ஔவையார்; அக்கருத்தினால் தாம் விநாயகரைப் பூசித்து மெய்ஞ்ஞானமும் சிவபதமும் எய்தியவருமாவர்; இக்கருத்து அவர் பாடியருளிய 'விநாயகர் அகவல்' என்ற நூலால் அறியலாம்.

கடவுளைப் பக்தி சிரத்தையுடன் மனத்தால் தியானித்தல், வாக்கினால் தோத்திரஞ் செய்தல், காயத்தினால் பூசித்தல், வணங்குதல், வலம் வருதல் போன்றவை சாதரணமாக யாவரும் செய்து வருகின்ற வழிபாட்டு முறைகளாகும். கடவுளை வழிபடுதற்கு உரிய ஆலயங்களைக் கட்டுதல், பழைய ஆலயங்களைத் திருத்திப் புதுக்குதல், அவ்வாலயங்களிலே கடவுளின் திருவுருவங்கள் முதலியவற்றைப் பிரதிட்டை செய்வித்தல், திருக்குளங் கிணறுகளை வெட்டுவித்தல், திருநந்தவனம் அமைத்தல், நித்திய நைமித்திக பூசைகளுக்கு உரிய நிபந்தங்கள் அமைத்து நடாத்துதல், பூமாலை கட்டிக் கொடுத்தல், தூப தீபமிடுதல் முதலிய கோயில் தொண்டுகள், இறைவனடியார்களைப் பூசித்து மாகேசுர பூசை செய்தல், திருமடங் கட்டுவித்தல், குருவழிபாடு என்னும் இவைபோல்வனவும் இறைவழிபாட்டின் பாற்பட்ட 'பதிபுண்ணியங்கள் — சிவபுண்ணியங்கள்' எனப்படும். (பதி - இறைவன்)

பிற உயிர்களுக்கும் ஏனையோர்க்கும் செய்யும் தான தருமங்களெல்லாம் பசு புணியங்கள் எனப்படும். (பசு — உயிர்)

பிற உயிர்களைக் குறித்துச் செய்யும் பசு புண்ணியங்களினும் இறைவழிபாட்டைக் குறித்துச் செய்யும் அல்லது இறைவனைக் குறித்துச் செய்யும் சிவபுண்ணியங்கள் மேம்பட்டனவாகும். பசுபுண்ணியங்கள் மறுமையில் சுவர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய மேலுலக இன்பங்களைக் கொடுத்து, அவ்வனுபவம் முடிந்த பின்னர் அழிந்து மீண்டும் பிறவிக்கு ஏதுவாவன. சரியை, கிரியை, யோக, ஞான பாத நெறிகளில் நின்று செய்யப்படுவனவாகிய மேற் குறித்த சிவபுண்ணியங்களோவெனில், இம்மையிலும் இடர் நீக்குதல், இஷ்ட சித்திகளை எய்துவித்தலாகிய பயன்களைக் கொடுப்பதுடன் மறுமையிலும் சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய பதமுத்திகளையும் கொடுத்து, அதன்மேல் மெய்ஞ்ஞானம் வாயிலாகப் பரமுத்தி எனப்படும் பிறவாநெறிப் பேரின்ப வாழ்வையும் எய்துவதற்கு ஏதுகரமாவன.

இத்தகைய சிவபுண்ணியங்கள் இல்லறநெறி வாழ்க்கையில் உள்ளவர்களும் துறவறநெறி வாழ்க்கையில் உள்ளவர்களும் கைக்கொண்டு செய்யத்தக்க முறையில் படிமுறைகளாய் அமைந்துள்ளன. வியாக்கிரபாத முனிவர், திருவள்ளுவர், வரகுணபாண்டியன், பெரிய புராணத்திற் கூறப்பட்ட பல அடியார்கள் போன்றவர்கள் இல்லறநெறியில் நின்று சிவபுண்ணியங்களைச் செய்தொழுகி இறைவனடி சேர்ந்தவர்கள். பட்டினத்தடிகள், திருநாவுக்கரசு நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் போன்றவர் துறவறநெறியில் நின்று சிவபுண்ணியங்களைச் செய்து இறைவனடி சேர்ந்தவராவர்.

கடவுள் வழிபாட்டின்கண்ணே தேவார திருவாசகமாதி பன்னிரு திருமுறைத் தோத்திரப் பாடல்களையும் திருவருட் செல்வர்களாகிய அருணகிரிநாதர், தாயுமானசுவாமிகள் போன்ற பெரியார்கள் பாடிய தோத்திரப் பாடல்களையும் பாடித் துதித்தல் விசேட அம்சமாயுள்ளது. சந்தியாவந்தனம், ஆன்மார்த்தபூசை, பரார்த்த பூசையாகிய கோயிற்பூசை, ஆலயவழிபாடு, காலைமாலை செய்யும் கடவுட் பிரார்த்தனை முதலிய நியமங்களை நிகழ்த்தும்பொழுது தோத்திரப் பாடல்கள் பாடித் துதித்தல் பண்டு தொட்டுள்ள நெறிமுறையாகும். வட மொழியில் ஸ்ரீருத்ரம் முதலிய வேதப் பகுதிகளும், புராணேதிகாசங்களிலுள்ள சிவகவசம், சக்தி கவசம், சௌந்தரிய லகரி முதலியனவும், தமிழிலே தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்கள், திருமுருகாற்றுப்படை, கந்தசஷ்டி கவசம், கந்தர்கலிவெண்பா, அபிராமியந்தாதி, சகலகலாவல்லிமாலை, சக்திகவசமாதிகவசப் பாடல்கள் போன்றவையும் பாராயண நியமஸ்தோத்திரங்களாகவும் போற்றி அனுசரிக்கப்பட்டு வருகின்றன. அவற்ருல் இஷ்டசித்திகளும், இம்மை மறுமையின்பங்களும் எய்தும் என்பது ஆன்ருேர் கொள்கையும் அனுபவசித்தமுமாகும்.

தோத்திர லட்சணங் குறித்து வழங்கும் வடமொழிச் சுலோகம் பின்வருவது:

" நமஸ்காரஸ் - ததாசீச்ச ஸித்தாந்தோக்தி : பராக்ரம : |
விபூதி : ப்ரார்த்தநா சேதி ஷட்விதம் ஸ்தோத்ரலக்ஷணம் ||

நமஸ்கார ரூபத்துதி (வணக்கரூபமாயுள்ள தோத்திரம்), வாழ்த்து ரூபத்துதி (ஆசீர்வாத ரூபத் தோத்திரம்), சித்தாந்தபரமான கூற்றுத்துதி (முடிந்த முடிபு ரூபமான துதி), பராக்கிரமப் புகழ்ச்சித்துதி, மகிமைகளைக் கூறித்துதித்தல், பிரார்த்தனைக் கூற்றுத்துதி (வேண்டிக் கோடற் கூற்றுத்துதி) என ஆறு வகையினவாகும் தோத்திரத்தின் இயல்பு.

இவற்றிற்கு முறையே உதாரணங் காட்டுவாம்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நமஸ்கார ரூபத் தோத்திரம்.

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணஅற் புதமலர் தலைக்கணி வோமே.

— வெற்றிவேற்கை; காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. — திருமூலர் திருமந்திரம்.

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம" எனவும், "வேதநா யகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி" எனவும் தொடங்குஞ் செய்யுட்கள் போல்வனவும் இவ்வகையிலக்ஷணத்தில் அடங்கும்.

## 2. ஆசி (வாழ்த்து) ரூபத் தோத்திரம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

— கந்தபுராணம்; வள்ளியம்மை திருமணப்படலம். செய். 261.

" அருணவிக சிதகமல மலரை நிகர் தருவதனம்
ஆறும்அறு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவன்
அருண்முருகர் சரணம் வாழி."

என்று தொடங்கும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பாடிய **வாழி விருத்தமும்,**

"சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொருப
செகதீச திருமங்களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
திகழீச திருமங்களம்."

என்று தொடங்கும் பிள்ளையார் **மங்கள விருத்தமும்** இவ்வகை இலக்ஷணத்தின வாகும். 9-ஆம் திருமுறையிலுள்ள திருப்பல்லாண்டுப் பதிகமும் இத்தகையதே.

## 3. சித்தாந்த பர விஷய ரூபத் தோத்திரம்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கலந்து.**

— கபிலதேவநாயனார்; 11-ஆம் திருமுறை.

(வேட்கை தணிவிப்பான் — விரும்பிய பேறுகளைக் கொடுத்துத் திருப்திப் படுத்துவன். கண்ணிற் கலந்து — மன ஒருமைப்பாட்டுடன் அவரைத் தியானித்து) "வேழ முகத்து விநாய கனைத்தொழ, வாழ்வு மிகுத்து வரும்" என்றுற் போல் வனவும் இத்தகைய தோத்திரங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பராக்கிரமப் புகழ்ச்சித் தோத்திரம்.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். — கந்தபுராணம்.

## 5. மகிமைகளைக் கூறும் தோத்திரம்.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

— திருவாசகம்.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்,............ எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யானிதற் கிலனொர்கைம் மாறே" என்ற திருவாசகப் பாடலும், மேலைய பாடலும் ஆகியவற்றில், திருவாதவூரடிகள் தம்மை ஆட்கொண்டு தம்முடைய பாசபந்தங்களை அறுத்துச் சிவானந்தப் பெருவாழ்வாகிய பேரின்ப வாழ்வைத் தமக்கு ஈந்தருளிய ஈசனது கைம்மாறற்ற பெருங்கருணைத் திறமாகிய மகிமையைக் கூறித் துதித்தமை அறிய வரும்.

## 6 பிரார்த்தனைத் (வரம் வேண்டுதல்) தோத்திரம்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

— அப்பர் திருவிருத்தம்.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும்பொய் யாகி விழுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

— பட்டினத்தார் பாடல்.

இந்த அறுவகை இலக்ஷணங்களும் ஒரு செய்யுளில் தனித்தனி வரவேண்டும் என்ற நியதியில்லை; ஆறும் ஒருங்கே அமைந்து வரவேண்டும் என்ற நியதியுமில்லை; தனித்தும், இரண்டோ பலவோ கலந்தும் ஒரு செய்யுளில் வரக் காணலாம். கந்தர் கலிவெண்பா, கந்தசட்டி கவசம் போன்ற தோத்திரப் பாடல்கள் பலவகை இலக்ஷணங்கள் பொருந்திய தோத்திரங்களாயிருத்தலைக் காணலாகும்.

பெரும்பாலும் இலௌகிக வாழ்க்கைக்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள எம் போன்றவர்கள் நித்திய நியமகருமமாகிய கடவுள் வழிபாட்டு நேரங்கள், விரத காலங்கள், புண்ணிய காலங்கள், ஆலய சேவைகள், பஞ்சம் பகை பிணி கடன் முதலிய கஷ்டங்களுக்கு ஏதுவான உற்பாத காலங்கள் ஆகிய காலங்களிலே அவரவருடைய அந்தந்த நோக்கங்களுக்கு உகந்தனவாய் மந்திர சக்தி வரப்பிரசாதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகள் வாய்ந்த தேவ தோத்திரங்களை மன ஒருமைப்பாட்டுடன் படித்து பக்தி சிரத்தையுடன் கடவுள் வழிபாடியற்றிஞல், அவர்களுக்கு இஷ்ட சித்திகளும் இம்மை மறுமையின்பங்களும் கைகூடும் என்பது துணிபு.

சிலகாலத்துக்கு முன் அஷ்டக் கிரகக் கூட்டுச் சேர்க்கையால் நேரக்கூடிய உற்பாதத் தீங்குகளைத் தடுத்தற்குச் சாதனமாக, பகவத் பாதாள் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மக்களுக்கு ஆணையிட்டருளியபடி தமிழ் வேதமாகிய (மந்திரச் செய்யுளாகிய) தேவாரத்தில் "வேயுறு தோளிபங்கன்" என்ற தொடக்கத்தையுடைய கோளறு பதிகத்தையும், "சொற்றுணை வேதியன்" என்ற நமச்சிவாயப் பதிகத்தையும் மக்கள் எல்லாரும் பக்தியுடன் பாராயணஞ் செய்து இறைவனை வழிபட்டு நன்மை பெற்றதை யாவரும் அறிவர்.

---

உ

# "கிரியை யென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்"

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

**போத**ம் சித்தி பிரகாசம் என்பன சைவசித்தாந்தப் பிரஸ்தானத்திரயங்கள்; சித்தாந்த மும்மணிகள்.

போதம் — சிவஞான போதம். சித்தி — சிவஞான சித்தியார். பிரகாசம் — சிவப்பிரகாசம். தலையங்கத்திற் குறிப்பிட்ட வாக்கியம் சிவப்பிரகாசத்திலுள்ளது. சிவப்பிரகாசம் தில்லைவாழ் அந்தணரான உமாபதி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பட்டது.

* * * *

நமது சமயம் வைதிக சைவம். வைதிகம் — வேதநெறி. வைதிகம் சென்று முற்றுமிடம் சைவம். சைவம் சிவசம்பந்தம். அது வைதிகத்தின் வழி வருவது. வைதிகத்தின் வழி வாராத சைவம் சைவப் பிறழ்வு.

* * * *

வேதம் கர்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகைத்து. கர்ம சுத்தியால் ஞானம் உதயமாகும் என்பர். கர்ம சுத்தியாவது பற்றுக்களைக் களையும் முறையிற் களைதலாம். அதனால், அந்தக்கரணங்கள் தூய்மை எய்தி ஞானத்துக்குப் பாத்திரமாம்.

வேதகர்மங்களிற் பிரசித்தமானது யாககர்மம். இந்திரனுக்குச் சதமகன் என்றொரு பெயர் உண்டு. சதம் — நூறு. மகம் — யாகம். நூறுயாகம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திர போகத்தைப் பெற்றவன் இந்திரன். போகங்கள் நிலையற்றவை: அதனால், அவற்றில் வெறுப்பெய்தி நிலையாய இன்பத்தை ஒரு சமயம் அவன் நாடலாம். இந்த நாட்டம் நிலையாய இன்பத்தின் பெருமையை உணராத வழி நில்லாது.

ஒருமுறை இந்திரனுக்கு இந்திரபோகம் இடையீடு படுகின்றதே என்பதனால், துறவு பிறந்தது. உடனே தேவ குருவாகிய வியாழ பகவான் தோன்றி உலகாயதம் போதித்து அவனைப் போகத்தில் மூழ்கச் செய்தார். இந்திரனுக்குத் துறவு மனப்பான்மை அசுரர்க்கஞ்சி வந்ததன்றி, பற்றறுதி பிறந்து அந்தக்கரணங்கள் தூய்மை எய்தி வந்ததன்று. அதனாலேதான் குரு அவ்வாறு செய்தார்.

அருச்சுனனுக்குப் போர் முனையில், பாட்டன் குரு நண்பர் என்றிவர்களை நோக்கிப் பற்றெழுந்து போராடியது. குருவான கண்ணன் விடுபாணம் என்றான். அருச்சுனன் மனம் வெந்து கொண்டே — அமைதி பிறவாமலே — குருவாக்கிய பரிபாலனஞ் செய்தான். யுத்த முடிவில் "பகையார் நட்பார்" என்ற நிலை பிறந்தது. பற்றறுதி முளை கொண்டது. அருச்சுனன் விட்ட பாணங்கள், அவன் தன் பற்றுக்களுக்கு விட்ட பாணங்களாயின.

அடுத்த பிறப்பில் அருச்சுனர் கண்ணப்பர் ஆயினர் என்பர்.

* * *

இந்திரனுக்கு வியாழ பகவான் உலகாயதம் போதித்ததும் கண்ணன் அருச்சுனனுக்குக் கொல்லச் செப்பியதும் பற்றுக்களைக் களைவதற்கு உபகாரமான கர்ம சுத்தி செய்யும் உபதேசங்களாம்.

* * * *

வேதத்திற் சொல்லும் ஞானத்துக்கு, கர்மம் நேர்நிமித்தமாகாதாயினும், சுத்தி செய்யும் முறையில், ஒருவாற்றால் வேதகர்மமும் ஞானநிமித்தமேயாம்.

* * * *

தலையங்கத்திற் குறிப்பிட்ட கிரியை வேதகர்மம் போலாகாது, ஞானத்துக்கு நேர் நிமித்தமாம். வேத கர்மங்களினாற் சுத்தி பிறந்து அந்தக் கரணங்கள் தூய்மை எய்தியவர்களாற் செய்யப்படுவது ஈண்டுக் குறிப்பிட்ட கிரியை. வைதிக கர்மத்துக்கும் சைவத்தில் வரும் கிரியைக்கும் தம்முள் வேற்றுமையும் ஒற்றுமையும் சிந்திக்க வேண்டியவை. வைதிககர்மம் சைவக் கிரியைக்கு இன்றியமையாத பூர்வாங்கமாம்.

* * * *

இனி ஞானம் ஒன்றே. வைதிகத்தில் கர்ம சுத்தியால் பெறுவதாகிய ஞானந்தானே, பூர்வ தவ விசேடத்தால் லபிக்குமாயின் அஃதாவது கிடைக்குமாயின், சைவத்தில் பேசும் ஞானமாம்.

வேதம் வல்ல முனிவர்கள் கர்மசுத்தியால் தூய்மை எய்தித் தம் முயற்சி விசேடத்தால் ஞானத்தை அடைகின்றார்கள். அஃதாவது ஞானத்தைப் பெறுகின்றார்கள். ஞானத்தைப் பெற அவர்கள் முயன்ற பெருமுயற்சிகளை உபநிடதங்களிற் பரக்கக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் முயன்று பெறும் ஞானந்தானே, பூர்வதவ விசேடத்தால் கிடைக்கும்போது சைவ ஞானம் ஆகின்றது. முனிவர்கள் செய்த பக்த விலாசங்களில் சைவ ஞானத்தினியல்பு அறியத்தக்கது.

அருச்சுனன் வைதிகஞானி. கண்ணப்பர் முழுமையான சைவ ஞானி. வேத சமுத்திரமான சங்கரர் கண்ணப்பரைத் துதிக்கின்றார்.

* * * *

சைவத்தில் ஞானவான்கள் சத்திநிபாதர் எனப்படுவர். சத்தி — ஞானம். "சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்" என்பது சித்தியார். நிபாதம் — பதிதல்.

* * * *

சத்திநிபாதர்களாதற்குச் செய்யும் கிரியைகளே, ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என்று சிவப்பிரகாசத்திற் பேசப்பட்ட கிரியைகள்.

'கிரியையென மருவுமவை யாவும்' என்பதில், ஆலயக் கிரியைகள் தீக்ஷைக் கிரியைகள் யாவும் இவற்றுக்குச் சார்பான பிறவும் அடங்கும்.

* * * *

கணித விடை படிப்படியே கிரியைகள் செய்து செல்வதால் கிடைக்கின்றது. கணித விடைக்கும் அதன் பொருட்டுச் செய்யுங் கிரியைக்கும் உள்ள தொடர்பில் வைத்து, ஞானத்துக்கும் அது கிடைத்தற் பொருட்டுச் செய்யுங் கிரியைக்கும் உள்ள தொடர்பு சிந்திக்கப்படும்.

கணித விடைக்குக் கணிதக் கிரியைகள் எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமானவை ஞானத்துக்கு நிமித்தமாகிய சைவக்கிரியைகள்.

* * * *

திருவலகிடுதல் முதல் — சிவார்ச்சனை பரியந்தமானவைகள் — திருநந்தவனம் வைத்தல் — பூக்கள் பத்திரங்கள் எடுத்தல், மாலை தொடுத்தல், சாத்துதல் என்றின்னோரன்னவைகள் — பூஜோபகரணங்கள், அவற்றை ஆளும் முறைகள் — நிவேதனங்கள் — ஆலய அமைப்பு — பிரதிட்டை யாவும் ஞானநிமித்தமாமென்பது ஆழ்ந்து சிந்தித்து உணரற்பாலதாம்.

கோயிலிற் பணி செய்யும் பரிசனர்களும், வழிபடுவோரும் தாம் மேற்கொண்ட பணிகளும் வழிபாடும் பயன்படும் பொருட்டுத் தம் சிந்தனை, சொல், செயல்களைத் தூய்மை செய்து, தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியவர்கள்.

கோயில் வீதியை எவ்வாறு அணுகுவது, மூர்த்திகளை வழிபடும் முறை எனை. சிறப்பாகச் சுவாமி சந்நிதி விசேஷம் எப்படிப்பட்டது என்றிங்ஙனம் வினவியறிய வேண்டியவைகள் பல. அவைகள் வழிபடுவோரும் பணியாளரும் அறிய வேண்டியவைகள்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார சேமிப்பு நிலையங்களில் 'அபாயம்' என்ருெருவார்த்தை எழுதியிருக்கிறது. உரியதகுதியில்லாதவிடத்து, அபாயத்தினும் மிக்க அபாயத்தை விளைவிப்பதொரு இடம் இருந்தால் அது மந்திர சக்தி பரவும் சுவாமி சந்நிதானமேயாமென்பது சம்பந்தப்பட்டவர்கள் அறிந்திருக்க வேண்டியது; அது பெரிதும் இன்றியமையாதது.

விசேட தலங்களில் சூக்கும தேகத்தோடு சித்தபுருஷர்கள் சுவாமி சந்நிதியில் உபாசனை செய்து கொண்டிருப்பார்கள் என்றும், சந்நிதிக்குத் தகுதி அற்றவர்கள் அணுகிஞல் அவர்கள் சாபத்துக்காளாய், எரியும் விளக்கை அணுகிய விட்டிற்பூச்சியின் நிலையை எய்துவார்கள் என்றும் அறிந்தோர் கூறுவர்.

* * * *

மந்திர சக்தி பரவிக் கொண்டிருப்பதும் சித்த புருஷர்களின் உபாசனைக்கு ஏற்றதுமான சுவாமி சந்நிதான இயல்பை உள்ளவாறுணர்ந்த — காரியந் தெரிந்த — குருக்கண்மார், சந்நிதானத்தை அணுகப் பெரிதும் அஞ்சுவார்கள் என்று பெரியார் ஒருவர் சொல்லக் கேட்டதுண்டு.

இங்கே,

'புகவேதகேன்'

என்ற திருவாசகம் சிந்திக்கற்பாலது.

* * * *

விசேடமான திருக்கோயில்களுக்கண்மையில் உபதேசமண்டபம் ஒன்று இன்றியமையாதது. அங்கே தகுதி வாய்ந்தவர்கள்,

"கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பதை, கோயிற் பரிசனர்களும் வழிபடுவோரும் மனத்திற் பதிக்கத்தக்கவகையிற் போதித்துக் கொண்டேயிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் கோயிலதிகாரிகளும் அர்ச்சகர்களும் ஒத்துழைப்போடு மிக்க சிரத்தை உடையவர்களாயிருக்க வேண்டுமென்பதைப் பலவாறு பலமுறை வற்புறுத்தியிருக்கின்ருர்கள் நாவலர் அவர்கள்.

---

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர வருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதி கொண்டு விதி வெல்லும் வழி.

[ ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்.]

**வி**தியும் மதியும் என்பதில் விதி பெரிதா? மதி பெரிதா? விதியை மதியால் வெல்லலாமா? என்பன சிந்தனைக்குரிய விஷயங்களாகும். அதில் விதி என்பது என்ன? விதிக்கு மூலம் யாது? விதி விதிப்பது யார்? என்பனவற்றை அறிவது தான் மதியுடையவனது முதலாவது கடமை. நமது மதியைக் கொண்டு நாம் செய்யும் நல்வினை, தீவினைகளால் உண்டாகின்ற புண்ணிய பாவத்திற்கேற்பக் கருணையுடைய ஆண்டவன் அதற்கு இன்ன இன்பம், இன்ன துன்பம் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கும் அத்தீர்ப்பே விதியாகும். அதனாலேயே — "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்றார் வள்ளுவர். அதில் ஒருவன் எவ்வளவுதான் முயற்சி செய்து கோடியாகத் தேடிக்கொண்டாலும் ஆண்டவன் விதித்த விதியின்படியல்லாமல் இன்பம் அனுபவிக்கமுடியாது என்று விதியின் வலிமையையும் அதை விதிக்கின்ற ஆண்டவனது வலிமையையும் உணர்த்துகின்றார்.

## நல்வினை, தீவினை.

ஒரு மனிதன் அவனது அறியாமையினால் தீவினைகளையும், நல்வினைகளையுஞ் செய்கிறான். அவற்றை நியாயமுள்ள, கருணையுள்ள ஆண்டவன் பார்த்து அவற்றைப் பதிவு செய்து அவ்வினைக்குரிய புண்ணிய பாவம் இவ்வளவு என்று தீர்மானிக்கிறான். அது சஞ்சிதவினை என்ற பெயருடன் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகப் பதிவு செய்யப் பெறுகின்றது. அப்புண்ணிய பாவத்திற்குத் தகுந்தபடி நாம் இன்ப துன்பம் அநுபவித்தால்தானே நாம் செய்த நல்வினை தீவினைகளின் தன்மை நமக்குப் புலப்படும். ஆகவே, விதியின்படி நாம் அநுபவிக்கும் ஒவ்வொரு இன்பத்திற்கும், துன்பத்திற்கும் நாம், நமது மதியினால் செய்த செயல்களே மூலகாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் விதித்த விதியைமீறி நாம் எவ்வளவு வசதியுடையவர்களா யிருந்தாலும், எவ்வளவு இன்பமும் அநுபவிக்க முடியாது. ஏராளமான பொருள் இருந்து விட்டால், அல்லது உடல் வசதி இருந்து விட்டால் இன்பம் துய்க்கலாம் என்று சிலர் கருதலாம். அது பணவசதியுடைவர்களும் இன்பம் துய்க்க முடியா மல் திண்டாடுவதைத் தெரியாத, அநுபவம் இல்லாதவரது கூற்றாகும்.

நாம் செய்த வினைப்பயனை நாம் அநுபவிக்கும்படி ஏன் ஆண்டவன் செய்ய வேண்டும் என்று கேட்கலாம். உதாரணமாக ஒரு சிறு குழந்தை மற்றொரு குழந் தையை அடித்து விட்டது என்று வைத்துக் கொள்வோம், அடிபட்ட குழந் தைக்கு வலி இருப்பதால் அது அழும். அடித்த குழந்தைக்குத் தான் அடித்ததும் அது அழுவதுந்தான் தெரியுமே யொழிய அந்த அடி அக்குழந்தைக்கு எப்படி இருந்தது? எவ்வளவு வேதனையைக் கொடுத்தது? என்றெல்லாந் தெரிய முடியாதல்லவா? அடித்து விட்டுச் சிரிக்கும், அடித்த குழந்தையைப் பார்த்து இனிமேல் அடிக்கக் கூடாது. அடித்தால் அவளுக்கு வலிக்கும் என்று வாயினால் சொன்னால் "வலி என்றால் என்ன? எப்படி இருக்கும்?" என்று கேட்கத் துணிந்துவிடும். அதை அவள் உணரு மாறு செய்ய வேண்டும். அவளுக்கு அதைப் படமெழுதி விளக்குவதா? அல்லது வேறு என்ன செய்வது? அவள் மற்றக் குழந்தையை அடித்தது போல் நாம் அவளை அடித்தால்தானே அதனால் தனக்கு ஏற்பட்ட வேதனையும் துன்பமும் விளங்கும்! நாம் பிறரை அடித்தால் பிறர் இன்னவிதமாக வேதனைப்பட வேண்டிவரும் என்னும் அநுபவ அறிவு அப்பொழுதுதான் ஏற்படும். இதுதான் அநுபவ அறிவு பெறும்படி ஆண்டவன் செய்வதின் அடிப்படை.

## தகுதிக்குத் தக்கபடி..

நாம் பிறர்க்குத் தீங்கு செய்தால் அத் தீங்கின் விளைவு இன்னதென்று நமக்கு அறிவுறுத்த வேண்டும் என்ற கருணையினால் நாம் செய்த நன்மைகளை யும், தீமைகளையும் பிறரைக்கொண்டு செய்கிறார். நாம் செய்யும் நன்மையும், தீமையும், செய்த அளவைப் பொறுத்தல்லாமல் அவற்றை யாருக்குச் செய் தோமோ அவர்களின் தகுதிக்குத்தக்க புண்ணிய பாவம் கூடவும் குறையவும் ஏற்படும்.

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து." — திருக்குறள்.

ஒரு வைத்தியர் நமக்குள்ள வியாதி தீர மருந்து கொடுத்தால் கசப்பு மருந்து கொடுக்க வேண்டிய வியாதிக்குக் கசப்பு மருந்தும், அக்கசப்புத் தெரியாம லிருக்கச் சிறிது சர்க்கரையும், கசப்பையும், இனிப்பையும் மாறிமாறிக் கொடுத் துத்தான் நமது நோயைத் தீர்ப்பார். அது போலவே, ஆண்டவனும் நம்மிடம் உள்ள அறியாமை என்னும் நோய் நீங்க அநுபவ பாடம் போதிப்பதற்காகத் துன்பத்தை ஊட்டினாலும், அத்துன்பத்தில் சலிப்பும், மனச்சோர்வும் வராதி ருக்க, இடையிடையே சிறுசிறு இன்பத்தையுந் தந்து நோயைக் குணப்படுத்தும் வைத்திய நாதனாக விளங்குகிறார்.

நாம் நம்மைப்போல் பிறரையும் எண்ணவேண்டும். அதற்குரிய அநுபவ அறிவு பெறவேண்டும் என்று கருதிய கருணையினாலேயே, நமக்கு அவர் விதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதை விதிக்கிறார் என்பதை நன்றாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அந்த விதியே ஊழ், தலையெழுத்து, பிராரத்தம், தெய்வநியதி, நசீபு என்றெல்லாஞ் சொல்லப்படுகிறது. இனி அவ்விதியை மதியால் வெல்லலாமா? என்று கேட்கலாம். பொதுவாக ஆண்டவன் விதித்த விதிக்கு உட்பட்டுத்தான் மதி தொழிற்பட வேண்டியதாயிருக்கிறது.

## சிறை.

உதாரணமாக சிறைச்சாலைக்குச் சென்ற ஒருவன் சுய அறிவும் சுய இச்சையும், சுய ஆற்றலும் உடையவனாகத்தான் இருக்கிறான். ஆனால், அவன் சிறைச்சாலைக்கு வெளியில் வாழும்பொழுது செய்த தீய செயலுக்குத் தக்கபடி, அரசாங்கத்தாரால் விதிக்கப்பெற்ற தண்டனைப்படி உள்ளே சென்றிருப்பவன் அரசாங்கம் விதித்த அவ்விதிக்கு உட்பட்டுத்தான் அவன் மதியைச் செலுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய சுயேச்சையாக நடப்பேன் என்று எண்ணவோ, சொல்லவோ, நடக்கவோ முடியாதல்லவா? அதுபோல், நாமெல்லாம் நமது மனம், வாக்கு, காயங்களால் முன்செய்த வினைகளுக்குத் தக்கபடி ஆண்டவனால் ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பெற்று, அவன் விதித்த கட்டளைப்படி, பூலோகமாகிய இச் சிறையினுள் வந்திருக்கின்றோம். நமக்கு விதித்த விதிக்கு உட்பட்டே நாம் நடக்கவேண்டும். நாம் எவ்வளவு மதியுடையவர்களாய் இருந்தாலும், அவ்விதிக்கு மாறாக நடக்க முடியாது. எப்பொழுதும் உணவை ஊட்டுகிறவர்கள் அவ்வுணவை உண்பவர்களைவிட வலிமையுடையவர்களாயிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் உணவை ஊட்ட முடியும். அந்த முறையில் பார்க்கும்பொழுது நாமெல்லாம் உண்பவர்கள், ஆண்டவன் ஊட்டுபவன். அவன் ஊட்ட நாம் உண்கிறோமே தவிர நாமாக உண்பதில்லை. அப்படி அவன் ஊட்டும் உணவாகிய இன்பதுன்பமும் நாம் செய்த செயலினாலேயே என்பதை மறந்துவிடக்கூடாது.

## நகைப்புக்கிடம்.

இந்த உண்மை சதாவும் மனதில் பதிந்திருந்தால் நமக்குத் தீங்கு செய்யும் ஆணையோ, பெண்ணையோ நோகமாட்டோம். யாராவது நம்மீது கல்லை எறிந்தால் அக்கல்லை எறிந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று நாம் பார்ப்போமே தவிர, நம்மீது விழுந்த கல்லைக் கடிக்கவோ, அடிக்கவோ நோகவோ மாட்டோமல்லவா? அதுபோல ஆண்டவன் நாம் துன்பம் அநுபவித்து அறிவு பெறவேண்டு மென்று எண்ணி அத்துன்பத்தை ஆட்கள் மூலமோ, பூதங்கள் மூலமோ, வியாதி மூலமோ அநுபவிக்கச் செய்தால் அதனை அறியாமல் நமக்குத் துன்பம் செய்த ஆட்கள் பேரில் சீறுதலும், நோகுதலும், கல்லை எறிந்தவனை நோகாமல், தன்மீது விழுந்த கல்லையே நாம் நோகுதலைப் போன்ற நகைப்புக்கிடமான செயலாகும். நம்மையே நாம் நொந்து, வந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

## விதியை வெல்லலாம்.

இதனையே வள்ளுவர் :-

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறு
கண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு"

என்று கூறியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியுடைய ஒருவன் தனது மதியினுல் செய்த செயல்களை அறிந்து அதற்குரிய பலாபலனை ஒரு நியதிப்படி விதிக்கின்ற ஆண்டவன் ஒருவன் உண்டு. அவர் நாம் பிறருக்குச் செய்யுஞ் செயலுக்கேற்பவே விதியை அவராகவே மாற்றக் கருதினுல் மாற்றலாமே தவிர, வேறுயாராலும் மாற்றவோ, குறைக்கவோ முடியாது. ஆனுல் அவ்வாறு நாம் நமது மதியினுல் விண்ணப்பஞ் செய்து கொள்ளவும், ஆண்டவனது இரக்கத்திற்குப் பாத்திரர்களாக்கிக் கொள்ளவும் முடியும். இதை வலியுறுத்தியே நமது ஒளவைப் பிராட்டியார்,

"சிவாய நம என்று சிந்தித்திருப் பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத பேர்க்கு
விதியே மதியாகி விடும்"

என்ருர்.

அவ்வம்மையார் விதியினுல் வரக்கூடிய அபாயம் இல்லாது காத்துக் கொள்ள உபாயம் ஒன்று சொல்லுகிருள். விதியை விதிக்கின்றவரது துணையை மதியினுல் அறிந்து பற்றிக் கொண்டால் ஒருவாறு விதியை வென்றுவிடலாம் என்கிருர். மார்க்கண்டேயர் சதாவும் பூஜை செய்து ஆண்டவனது துணைப்பற்றி விதியையே மாற்றியவர்.

---

# சைவசமயம் கூறும் பூரண வாழ்க்கைத் தத்துவம்.

[ பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் ]

உலகின் பல பாகங்களிலும் மானிட வாழ்க்கையானது சீர்குலைந்து சுருதி தப்பிய யாழிசை போன்று இனிமையற்றுக் காணப்படுகிறது. காரணம் வாழ்க்கைக் கலையின் அடிப்படைத் தத்துவங்கள், அதன் குறிக்கோள், வாழும் முறை ஆகியன மக்கள் மனதில் நன்ருகப் பதிக்கப்படாததும், பதிக்கப்பட்ட சில கருத்துக்களையும் நடைமுறையிற் செயற்படுத்த முயலாததுமாகும். பல்வேறு சமயங்களும், சமயத் தாபனங்களும் செயலாற்றியபோதிலும், மானிட வாழ்வு சிதைந்து, பகை, வெறுப்புணர்ச்சி, வன்செயல்கள் மலிந்துவரக் காரணம் யாது? இதுவே நம்முன் இன்றுள்ள பெருங் கேள்வியாகும்.

சமயம் என்பது வாழ்க்கையின் ஒரு அம்சம் என்ருே, பொழுதுபோக்குச் சாதனம் என்ருே நம் நாட்டிற் கருதப்பட்டதில்லை. சமயமே பூரண வாழ்க்கையிலும் வியாபித்து நிற்க வேண்டும் என்பது ஞானிகளின் கருத்து. வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் முரண்பாடின்றி ஒருங்கிணைப்பதும், வழி காட்டுவதும், அடிப்படைக் கருத்துக்களையும் குறிக்கோளையும் தெளிவுபடுத்துவதும் சமயம். மனிதன் சமயத்தை வளர்ப்பவன் என்பதன்றி சமயம் மனிதனை வளர்த்தெடுக்கின்றது என்ற மெய்க்கருத்து நம்முடையது. என்றென்றும் நிரந்தர உண்மைகளாகிய வேதவாக்குக்கள் இறைவன் வாக்குக்கள் என்றும், அவை எப்போதும் ஒலித்துக்கொண்டிருப்பவை என்றும், சாந்தமும் தகுதியும் வாய்ந்த ஞானிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குரலைக் கேட்கிறார்கள் என்றும், ஏனையோர் அதனைக் கேட்கத் தவறிவிடுகிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. உண்மைத் தத்துவங்களைப் பின்பற்றும் மனிதர் வாழ்வில் வெற்றி காண்பதோடு, தமக்கும் பிறருக்கும் இனிமையைத் தர, அவற்றைப் பின்பற்றாதவர்கள், வாழ்வில் தோல்வி காண்பதோடு தமக்கும் பிறர்க்கும் துன்பமாய் அமைகின்றனர்.

வாழ்வுக்கு வேண்டிய உண்மைகளை உலகிலுள்ள எல்லா மதங்களும் வகுத்துக் கூறியுள்ளன எனினும், தருக்கரீதியாகவும், பிறராற் குறை காணமுடியாத வகையிலும், வளரும் விஞ்ஞானத்துக்கு ஈடு கொடுக்கும் முறையிலும் அவற்றை எடுத்துக் கூறிய பெருமை சைவசமயத்துக்குண்டு. எல்லையற்ற பரம்பொருளிடம் கவர்ச்சி கொள்ளும்படி அது மனிதனைத் தூண்டுகின்றது. அப்பரம்பொருளிடம் கவர்ச்சிகொள்வதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுகிறது உயிரின் நிலையான தன்மையையும் மாண்பையும் எடுத்துக் காட்டுகிறது. அவ்வுயிர், பரம்பொருளால் வாழும் விதத்தை விளக்குகிறது. உயிரின் துயரத்துக்குக் காரணமாயுள்ள 'நான்', 'எனது' என்னுஞ் செருக்குக்களை அடையாளங் காண்பிக்கிறது. இச்செருக்குக்கள் உயிரை மீறிய உடற் பற்றைத் தூண்டுகின்றன என்றும், உடற்பற்றுக் காரணமாக மனிதன் தன்னைச் சுற்றிக் குறுகிய எல்லைகளை அமைத்துக் கொண்டு, பகையையும், வேற்றுமையையும் வளர்த்துச் சண்டையிடுகின்றான் என்றும் விளக்குகின்றது. இத்துயரிலிருந்து மீள்வதற்கு உடலுணர்வை வெல்வதும், உடலை மீறிய ஆத்மீக உணர்வினை வளர்ப்பதும் அவசியம். உடற்பற்று ஆத்மீக உணர்வினை அழித்தலாகாது என்பதால், உடல் இழித்திடத்தக்கதென்று சைவம் கூறவில்லை. பரம்பொருளை வழிபடவும், வாழ்க்கையின் சகல அம்சங்களையுந் திடமனதுடன் நிறைவேற்றவுங் கருவியாயுள்ளது உடம்பு. அத்துடன், உயிரும், உயிர்க்குயிராகிய பரம்பொருளும் கலந்துறையும் கோயிலாகவும் உடம்பு இருப்பதால் அதனைப் பரிசுத்தமாகப் பேணவேண்டிய கடமை மனிதனுக்குண்டு.

வாழ்வு சிறப்படைய மனிதன் கடவுளிடம் கவர்ச்சியுடையனாதல் அவசியம். தான் நினைத்ததெல்லாம் நிறைவேற வேண்டுமென்ற தணியா வேகத்துடன் செல்லும் மனிதன் தனக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி தன்னைத் தடுத்து நிறுத்துவதையும், தன்மேல் அதுஆதிக்கஞ் செலுத்துவதையுங் காணபான். கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும், கணிதரூபமாயமைந்த இப்பிரபஞ்ச சிருட்டியில் வைத்துப் பரமபொருளின் அளவிலா ஆற்றலை அவன் அறியமுடியுமென்பது சைவசமய முடிபாகும் பரந்த இப்பிரபஞ்சம் கடவுளின் அளவற்ற கருணையின் சின்னமாகும். எல்லா உயிர்களும் கூடிவாழ்வதற்குரிய முறையில் இது படைக்கப்பட்டது. சில மனிதர்களோ, சில சமுதாயங்களோ தமதென்று உரிமை கொண்டாட இறைவன் உலகைப் படைத்திலன். சர்வஜீவ தயாபரனாகிய **அவன்** 'அருக்கனிற் சோதி அமைத்'துள்ளான்; 'மதியிற் தண்மை வைத்'துள்ளான்; 'நீரில் இன்சுவை நிகழ்த்தியும்', 'காலில் (காற்றில்) ஊக்கங் கண்டும்', வானிற் கலப்பு வைத்தும்' உள்ளான். அந்தந்தத் தன்மைகளை அவ்வவற்றில் அமைத்தமை அனைத்துயிர்க்கும் வசதியும் வாய்ப்பும் வழங்கவேயாம். இங்ஙனம் புறவுலகைப் படைத்துள்ள பரம்பொருள், பஞ்சபூதங்களையும், பல்வேறு பொருள்களையும் பயன்படுத்தி வாழும் வகையில் பல்வேறு தரப்பட்ட உடல்களை உயிர்களுக்குக் கொடுத்து, அவ்வுயிர்களுக்கு உயிராயிருந்து அவற்றை வாழ்விக்கின்றது. உடல் உயிரால் வாழ்வதுபோல உயிர் இறைவனால் வாழ்வதால் எவ்வகையிலும் உயிர் இறைவனை இன்றியமையாததாகும். உயிர்களுக்கு இறைவன் உலகையும் உடலையும் தந்தது எதற்காக? உயிர்கள் தங்கள்மாட்டுள்ள குறைகளை நீக்கி நற்குணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் நிறைவெய்தி இறைவனின் திருவடிகளை அடைவதற்கேயாம். தந்தவன் கருத்தறிந்து அவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இறைவன் வாழ்வுக்குரிய எல்லாக் கருவிகரணங்களையும் தந்ததாலும், தானே உடனிருந்து வாழ்விப்பதாலும் அவனிடத்து நன்றியுடனிருப்பதும் பணிபுரிவதும், அன்பு செலுத்துவதும் நமது கடமையாகிறது. இறைவனிடத்தன்புள்ளவன் என்று தன்னைக்கருதும் ஒரு பக்தன், இவ்வுலகம் எல்லோருக்கும் பொதுவானது என்றும், தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தலே பக்தியின் உண்மைத்தன்மை என்றும் உணருவான். கடவுளை வணங்குவதென்பது, தனித்து அவருக்கு மாத்திரம் காணிக்கை செலுத்திவிட்டுப் பிறவுயிர்களுக்கு நேராகவோ மறைமுகமாகவோ இன்னல் செய்வதாகாது என்பதை அவன் தெளிவாகக் காண்பான். ஆன்ம கோடிகளுள் ஒன்றிற்கேனுந் தீங்குபுரிவது உயிர்க்குயிராகிய பரம்பொருளுக்கு இன்னல் தருவதாகும் என்பதையும் அவன் நன்கறிவான்.

எனவே, வாழ்வில் வெற்றிபெற விரும்பும் மனிதன், கடவுளிடம் அன்பு செலுத்துவதும், இறைவனும் அவன் படைத்த பிரபஞ்சமும் அனைத்துயிர்க்கும் சொந்தம் என்று கருதுவதும் அவசியம். இந்தநிலையை அவன் என்றே அடைய வேண்டும். எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் தன்மையே அந்தணர் நிலையென்றும், இவ்வந்தணர் நிலை நமது நாட்டுப் பண்பாட்டின் உச்சமாய நிலையென்றும், அவ்வுச்சநிலை சிலரால் மாத்திரம் அடையக்கூடியதன்று — எல்லோரும் அந்நிலையடைவதற்கு முயலவேண்டுமென்றும், அந்நிலையடைந்த அந்தணர், ஏனையோரையும் அந்நிலைக்கு அழைத்துச் செல்ல இடையறாது முயலவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இத்தத்துவத்தைத் திருக்கோவையார் என்னுந் திவ்வியப்பனுவலில் மணிவாசகப் பெருமான் அழகாகச் சித்திரிக்கிறார் :- தன் நாயகன் தன்னிடத்து மாத்திரம் அன்பு பாராட்ட வேண்டும்; அவனைத் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்று கருதுகின்றாள் ஒரு தலைமகள். பிறருடன் அவன் தொடர்பு கொள்வதையும் பிறர் அவனாற் பயனடைவதையும் அவள் விரும்பவில்லை; இதைத் தோழி உணருகின்றாள். தலைமகள் உள்ளத்தைத் தெளிவித்து, அவளை நல்வழிப்படுத்த முயலுகின்றாள். 'நமது தலைமகன் நமக்கு மாத்திரம் சொந்தமானவனல்லன்' அவன் யாவர்க்கும் உரியவன்; ஊருணி போன்றவன். எனவே, யாவர்க்கும் அவன் ஊதியம் ஆவான். அவனிடம் பிறர் பயன் பெறுவது குறித்து நாம் புலத்தலோ பொறாமை கொள்வதோ தகாது' எனத் தேற்றுகிறாள். இங்கு தலைமகளாகச் சித்திரிக்கப்பட்டது பக்குவமடையும் நிலையிலுள்ள ஆன்மா. தலைமகன் ஆன்மாக்களுக்கெல்லாம் நாயகனாகிய இறைவன். இறைவன் நமக்கே சொந்தமானவன் என்று ஒரு நிலையில் உயிர்களுட் சில கருதுகின்றன. ஏனைய உயிர்களையும் இறைவனிடத்து ஆற்றுப்படுத்த வேண்டும், அவைகளும் அவனிடம் பயன்பெறவேண்டுமென்று அவை கருதுவதில்லை. முதிர்ந்த பக்திநிலையில் திருவருள் காட்ட இறைவனின் பொதுமையை, யாவர்க்கும் அவனே ஊதியமாந்தன்மையை உயிர் உணருகிறது.

> காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
> சீரணி சிந்தாமணி யணிதில்லைச் சிவனடிக்குத்
> தாரணி கொன்றையன் தக்கோர்தஞ் சங்கநிதி விதிசேர்
> ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற்றியாவர்க்கும் ஊதியமே.

என்னுந் திருப்பாடல், இறைவனின் பெயராலும், மதங்களின் பெயராலும் சாதிகளின் பெயராலும் சண்டையிடும் இன்றைய மனித வர்க்கத்துக்கு நல்லுணர்வூட்டும் அருமருந்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திமகான், நேருஜீ போன்ற தலைவர்கள் உலகின்முன் வைத்த உடலிருந்து வாழ்தற் கொள்கையே சைவந்தந்த தத்துவக்கொள்கை என்றால் அது தவறாகாது.

வாழ்வின் வெற்றிக்கு அடுத்து வேண்டுவது, உடலை மீறிய ஆன்மீக உணர்வாகும் என்பதை மேலே குறிப்பிட்டோம். அஃதாவது உடலைவிட ஆன்மா மேலானது என்னும் எண்ணம் நிலைபெறுதல் வேண்டும் 'உடல் நிலையற்றது; அழியுந்தன்மையுள்ளது. ஆன்மாவோ நிலையானது. அழியுந்தன்மையற்றது. ஆன்மா தன்னை வளர்ப்பதற்குக் கருவியாகவே உடலைப் பெற்றிருக்கிறது. உடலை வளர்ப்பது மாத்திரம் ஆன்மாவின் வேலையன்று' என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் அவசியம். இவ்வுணர்வு உறுதிப்பட்டால் உலகிலுள்ள பல தீமைகள் அகன்றுவிடும். மனிதசமுதாயம் உடலுக்குச் செய்யும் பூசைகளுட் சிலவற்றையா வது குறைத்துக் கொண்டு உயிரை வளர்க்கவும், உயிர் வளர்ச்சிக்கான அன்பையும், அறத்தையும், நீதியையும் சாதிக்கவும் முயலும். அன்றியும் உடலை மெய் யென்று கருதி ஆன்மாவின் பெருமையை மறந்துவிடும்பொழுது, உடலோடு சம்பந்தமுடையவர்களே உறவினர் என்றும் ஏனையோரெல்லாம் அந்நியர் என்றும் எண்ணுகின்ற ஒரு பொய்மயக்கம் ஏற்படுகிறது. உடற்றொடர்புடையவர்களிடம் சென்றபற்று, நாட்டலும், மொழியாலும், இனத்தாலும், நிறத்தாலும், மதத்தாலும் தொடர்புடையவர் மாட்டும் படருகிறது.

சுற்றத்தொடர்பு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, மதப்பற்று முதலியன உலகியல் முன்னேற்றத்துக்குச் சிறிது அவசியமெனினும், அவை அதிகரித்து வெறியாகமாறும்பொழுது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்,' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த பண்பு நெறிகள் மறக்கப்படுகின்றன; வெறுப்பு வளருகிறது. அதன் விளைவாகப் பூவுலகு நரகவுலகமாக மாறுகிறது. இறைவன் படைத்த உலகமாகிய இவ்வழகிய மலர்ச்சோலை, நாய்க்கொட்டில் போன்று சண்டை சச்சரவுகளுக்காளாகிப் பாழடைவதற்கு, ஆன்மாவை மீறிய உடற்பற்றும், அதில்நின்று இளைக்கும் ஏனைய பற்றுக்களுமே காரணம்.

ஆன்மாவுக்கு உயர்வளித்து, உடலின் நிலையாமையை மனதிற் கொண்டு, குறுகிய பற்றுக்களைக் கடந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்த ஞானிகளை, ஒருமையாளர்களை, நமக்கு முன்னோடிகளாகக் கொள்ள வேண்டும். உதாரணமாகப் பெரியபுராண ஆசிரியர் கூறும் மெய்ப்பொருள்நாயனார் வரலாற்றை எடுத்துக்கொள்ளலாம். அவர், உடல் முதலியனவும் அவற்றால் வரும் தொடர்புகளும் பொய்யென்றும், உயிர்க்குயிராகிய இறைவனும் அவரால் வந்த தொடர்புகளுமே மெய்யென்றுங் கண்டவர். இறைவன் அனைத்துயிரிலும் கலந்திருத்தலால எல்லா உயிரும் ஓரினம் என்ற அகண்ட உணர்வு கைவந்தவர். அவரைப் பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையிற் குறிப்பிடும்பொழுது, 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' என்கின்றார். வெற்றி பெறுவதில் மிக வல்லவர் மெய்ப்பொருள்நாயனார் என்பது சுந்தரர் கருத்து. அவர் பெற்ற வெற்றி வாள் வெற்றியன்று. தம்மை வஞ்சனையாற் குத்திக்கொல்ல முயன்ற முத்திநாதனைக்கூட, சிவசின்னந் தரித்தவன் என்ற காரணத்தால், தமக்கு வேண்டியவன் — தம்மவன் — என்று கருதினார். இறைவனால் வந்த தொடர்பு தவிர்த்திடற்குரியதன்று. வாயில் காவலனும், தமக்கு நெருங்கிய அன்பினனுமாகிய தத்தனை எங்ஙனம் அன்புரிமையுடன் நேசித்தாரோ, அதேயன்புரிமையுடன் பகைவனாகிய முத்திநாதனையும் நேசித்தார். முத்திநாதனை வெட்டத் தத்தன் உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளை உருவியபொழுது மெய்ப்பொருள்நாயனுர், 'தத்தா, நமர் எனத் தடுத்து வென்ருர்' எனச் சேக்கிழார் நாயனுர் அழகாகக் கூறுகிருர். 'அவரும் நம்மவர்; நமக்குறவினர். அவரை ஒன்றுஞ் செய்யவேண்டாம்' என்று தடுத்துப் பெரு வெற்றியை ஈட்டிக் கொண்டார் மெய்ப்பொருள்நாயனுர். முத்திநாதன் படு தோல்வியடைந்தான். தன்னுயிரைக் கொடுத்தும் பிறரை வாழ்விப்பவன் என் றென்றும் நிலைத்த வாழ்வைப் பெற்றுவிடுகிருன். உண்மை வெற்றியின் இரகசி யம் நம் சமயத் திருநூல்களில் பரக்கக் கூறப்படுகிறது. பகைவனையும் நேசிக்கும் ஆற்றல், பேதமற்ற அன்பு ஆகியன நாம் பெறவேண்டிய கடவுட் குணங்களாம்.

உடலின் வேருக ஆன்மாவைப் பிரித்துணரவும், ஆன்மநாயகனுகிய இறை வனை நேசிக்கவும் பழகிவிட்டால் உடலின் தொடர்புகளை அதிகரித்துக் காட்டும் 'நான்', 'எனது' என்ற தீய உணர்வுகள் படிப்படியாய் நலிந்து போகின்றன. இறைவனையும், சக உயிர்களையும் மதிக்காது, தன்னைப் பெரிதாக மதிக்கும் அகந்தையுணர்வு 'நான்' என்னும் செருக்காகும். இறைவன் தந்த தனு கரண புவன போகங்களை அவனுடையனவென்றும் அனைவர்க்கும் பொதுவானவையென் றுங் கருதாது தன்னுடையன என்று கருதும் மமதையே 'எனது' என்னுஞ் செருக்காகும். இவ்வுணர்ச்சிகளுக்காளாகும் மனிதன் தனக்கும் பிறர்க்குந் தீங்கு செய்கிருன். இவற்ருல் துயரக்கடல எல்லையின்றி வளருகிறது.

இன்று சைவர்கள் மத்தியிலும் பிறமதத்தவர் மத்தியிலும் நாம் காண்ப தென்ன? கட்சிகளும், கோஷ்டிகளும் நாளுக்குநாட்பெருகி வருகின்றனவேயன் றிக் குறைவடைவதைக் காணேம். நாம் செய்யுங் காரியங்களில் இறைவன் பங்கு அதிகமாதலால், நாம் பெற்ற செல்வம், அதிகாரம் முதலிய அனைத்திலும் அகந்தை கொள்ளக் காரணமேயில்லை. மேலும் மேலும் அடக்கமும் பணிவும் பெற்றுப் பக்தியென்னும் நீரால் எல்லா மாசுகளையும் கழுவிவிட வேண்டும்.

அசைக்கமுடியாத கடவுள் நம்பிக்கையுள்ள உள்ளும் புறமும் பரிசுத்த மான. பேதமற்ற அன்பினையுடைய, பணிவும் அடக்கமுங் கொண்ட இளைஞர்களை யும் பெண்களையும் உருவாக்க முடியவில்லையாஞல் சமயபோதனைகளும் கிரியை நெறிகளும் மனித வாழ்விற் கலக்கவில்லையென்பது கருத்தாகும். சைவசமயக் கோட்பாடுகளை விரிவுபடுத்திச் சிந்தித்துச் செயலாற்றுவதை விட்டுக் கிளிப்பிள்ளை கள்போல ஆண்டுதோறும் திருப்பித் திருப்பிக் கதைகள் கூறுவதால் மாத்திரம் பயன் விளையுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

---

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசும்போதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம்.

— திருவிளையாடற் புராணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருக.

# வேதநாயகன் விநாயகன்.

[ வியாகரண சிரோன்மணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள். ]

## வேதம்.

**வே**தங்களுக்குத் தலைவன் விநாயகப்பெருமான் என்று கருத்தாகும். வேதம் என்ற சொல் வித் என்ற வினையடியிலிருந்து வந்தது. வித் - அறிதல் என்று கருத்தாகும். வேதம் என்ற சொல் ஒரு நூலைக் குறிப்பதாக அமைந்துள்ளது. ஆகவே, வேதம் என்பது அறிவு நூல் என்ற கருத்தைத் தருகின்றது. நல்லவை எவை தீயவை எவை என்பதை அறிந்து தீயவற்றை நீக்கி, நல்லவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு பெற்று அனுபவிக்கச் செய்தல் அறிவு நூலின் பயனாகும். அறிவு நூலின் துணைகொண்டு உடல் ஒழுக்கத்தையும், உள்ள ஒழுக்கத்தையும் பெறலாம். அப்பொழுது ஆன்ம குணங்கள் வளர்ச்சியடையும். செய்யும் செயல்கள் யாவும் இறைவனுக்கே அர்ப்பணிக்குந் தன்மை உண்டாகும். அதனால் இருவினை ஒப்பு உண்டாகும். அவனருளுக்குப் பாத்திரமாகி ஆன்மா பேரின்ப சுகத்தைப்பெறும். இவ்வாறு படிமுறையாக (ஸோபாந மார்க்கம்) அறிவு நூலில் விளக்கப்பட்டுள்ளது. பிற உயிரைத் துன்புறுத்தாமை, பிறர் பொருளைக் கவராமை, பிறர் மனைவியைத் தீண்டாமை இம்மூன்று தர்மங்களை அனுஷ்டிப்பதால் உடல் தூய்மை உண்டாகின்றது என்றும். தகாத வார்த்தை பேசுதல், வன் சொல் பேசுதல், கோள் சொல்லல், பொய் பேசுதல் இவை நான்கும் சொற்குற்றமாகும். இவைகளை விட்டு இன்சொல், உண்மை பேசி வாழ்வதால் சொல் தூய்மை உண்டாகின்றது என்றும், பிறர் பொருளைக் கவர எண்ணாமை, பிற உயிர்களிடம் அன்பு வைத்தல், நாம் செய்யும் செயல்களுக்குப் பயன் உண்டு எனத் தெய்வ நம்பிக்கையுடன் வாழ்தல் இவைகளை அநுட்டித்து வருவதால் உளத் தூய்மை உண்டாகின்றது என அறிவு நூல் இயம்பியுள்ளது. இந்த அறிவு நூல் மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை இருக்கு வேதம், யசுர் வேதம், சாமவேதமாகும். இம் மூன்று வேதங்களின் சாரமாக எடுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் மூன்றாகும். அவை **அ, உ, ம்** என்பனவாகும். மூன்றும் சேர்ந்து ஓம் என்னும் பிரணவ எழுத்தாக அமைகின்றது. அந்தப் பிரணவ எழுத்தை அறிவு நூல் கற்பவர்கள் ஆரம்பத்திலும் முடிவிலும் ஓத வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் ஓதாவிட்டால் கற்கப்படும் அறிவு நூல் உள்ளத்தில் தங்காது ஒழுகிவிடும் என்றும், முடிவில் ஓதாவிட்டால் கற்ற வேதம் சிதறுண்டு பயன் பெறாது போகும் என்றும் விளக்கப்பட்டுள்ளது. பிரணவப் பொருளான விநாயகப் பெருமானை வேதம் தொடங்கும்பொழுதும் முடிக்கும்பொழுதும் சிந்தித்து ஓத வேண்டுமென்று விதித்த பெருமையால் வேதநாயகன் என உலகத்தோரால் போற்றப்பட்டுள்ளார். திருமண வைபவத்தில் தொடக்கத்தில் விநாயகரைப் பூசிப்பதும், முடிவில் தம்பதிகளிடம் விநாயக பிரசாதத்தைக் கொடுத்துக் குருக்கள் ஆசி கூறுவதையும் காண்கின்றோம். தொடக்கத்தில் விநாயகரைப் பூசிப்பது தொடங்கிய காரியம் இடையூறு இல்லாமல் நிறைவேறுவதற்காகவும், முடிவில் விநாயகப் பெருமானின் பிரசாதத்தை அளித்துச் சிந்திக்கச் செய்தல், செய்த காரியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.4 NAV AR

முழுப்பயனையும் பெறுவதற்காகவேயாகும். வேத நூலுக்குத் தலைவராக இருப்பதால் வேதநாயகன் என்ற பெயர் கருத்துடையதாக அமைந்துள்ளது. நாயகன் என்ற சொல்லுக்கு, கொண்டு செலுத்துகின்றவன் என்பது கருத்தாகும். கற்பவர் உள்ளத்தில் அறிவு நூலைப் பதிய வைப்பவன் என்ற கருத்து விளக்கம் கிடைக்கின்றது. அப்படிப்பட்ட வேதநாயகன் விநாயகப் பெருமான் ஆவர்.

விநாயகன் வேதங்களுக்குத் தலைவராக விளங்கும் இறைவன் பல காரணப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுபவராயிருந்தும் விநாயகன் என்ற பெயர் இறைவனின் சிறந்த பெருமையை எடுத்து விளக்குவதாக அமைந்துள்ளது. வி — அல்லாத, நாயகர் — தலைவன். தலைவரல்லாதவர். தனக்கொரு தலைவன் இல்லாதவர். விமலன் — மலமற்றவன் என்பன போன்று கருத்தமைகின்றது.

சைவ சமயத்தவர்க்குச் சிவம் பரம்பொருளாகும். சொரூப லக்கணம், தடத்த லக்கணம் என இரு பிரிவாக சிவத்திற்கு இலக்கணங் கூறப்பட்டுள்ளது. உருவமற்றவர், குணமற்றவர், பெயரற்றவர் என சொரூப லக்கணம் விவரிக்கப்படுகின்றது. ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக ஈசானம் முதலாக ஐந்து முகங்கள் பொருந்த நின்று ஐந்தொழிலைப் புரிகின்றார் என, பதி லக்கணத்திற் கூறப்பட்டுள்ளது. பதி லக்கணம் தாங்கிய சிவன் தேவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி முப்புரங்களை எரிக்கப் புறப்படும்பொழுது அவருடைய தேரின் அச்சுப் பொடியானது என்ற வரலாற்றை நாம் அறிவோம். பதி லக்கணம் தாங்கிய சிவம் அருவமான சிவத்தை வணங்க இயலாது. அருவுருவமாகக் காட்சி தருகின்ற (மனிதருமல்ல, பிராணியுமல்ல) விநாயகரை வணங்கி முப்புரத்தை எரிக்கின்றார் என்ற சரித்திரத்தைக் காண்கின்றோம். ஆன்மாக்கள் யாவும் எக்காரியத்தைச் செய்யத் தொடங்கும்போதும், இறைவனை முதலில் வணங்கிச் செய்ய வேண்டும் என்ற உண்மையைத் தானே செய்து காட்டினார். பதி லக்கணம் தாங்கிய சிவத்திற்கு, சொரூப லக்கணம் தாங்கிய ஆதிசிவம் உருவ அருவமாக நின்று தானே ஒரு நாயகராக விளங்கினார்.

> "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
> பின்னமிலான் எங்கள் பிரான்."

என்பது திருவருட்பயன் சூத்திரம்.

சொரூபலக்கணம் வாய்ந்த சிவத்திடம் பிரிக்கமுடியாது விளங்கிய சக்தி, பதிலக்கணம் பொருந்திய சிவத்துடன் பெண் வடிவமாக நின்று ஆன்மாக்களுக்கு அருள்புரிந்து லலிதாபரமேஸ்வரி என்ற பெயர் தாங்கி பண்டாசுரனை அழிக்கச் சென்றபோது அவ்வசுரன் விக்நயந்திராஸ்திரத்தை உபயோகிக்க, தேவியின் படைகள் யாவும் செயல் இழந்து மயங்கிக் கிடந்தன. லலிதாபரமேஸ்வரி சொரூப லட்சணம் அமைந்து சிவரூபமாகிய விநாயகரை வணங்கி அவனருளால் விக்நயந்திராஸ்திரம் பிளக்கப்பட்டுப் படைகள் மயக்கந் தெளிந்து எழும்பி அசுரனையும் அழித்தருளினார்.

(மகாகணேச நிர்பின்ன விக்நயந்திர பிரஹர் ஷிதாயைய நம:)

என்று தேவியைச் சிறப்பித்துக் கூறுகின்றது. தாய் தந்தையர் என்று போற்றப்படும் பார்வதி பரமேஸ்வரர் பதிலக்கணந் தாங்கிநின்று ஆதி சிவஸ்வரூபமாகிய விநாயகப் பெருமானை வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றார் என்றால், தேவரும்



ARCHIVES
249692
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவரும் வழிபட்டுச் சித்திகளைப் பெற்றனர் என்று கூறுவது மிகையல்ல. தான் ஒரு நாயகனை வணங்கி ஒரு காரியம் செய்ததாக எங்கும் கூறப்படவில்லை. ஆகவே, தனக்கு ஒரு நாயகரில்லாதவர் என்ற கருத்துப் பொருத்தமாக அமைந்துள்ளது. வேதத்தில் விநாயகரைக் குறிக்கும் "கணநாம் த்வா" என்ற மந்திரத்தில் "ஜேஷ்டராஜம்" என்ற சொல் உள்ளது. ஜேஷ்ட — முதலாவதான, ராஜ — ஒளி என்ற கருத்தாகும். மிகப் பெரிய ஒளி பொருந்தியவர் என்பது கருத்தாகும். அவ்வொளியின் முன் சூரியன் பிரகாசிக்கமாட்டான். சந்திரன் நட்சத்திரம் இவைகள் எம்மட்டு. கணப்பொழுதில் தோன்றி மறையும் மின்னல் ஒளி எவ்வாறு பிரகாசிக்கும். இவ்வாறிருக்க மாநிலத்தில் ஒளி தருவதாகக் கருதப்படும் (அக்னி) தீ எந்த அளவுக்குப் பிரகாசமடையும். மேலே குறிப்பிட்டவைகள் யாவுமே பேரொளியிடமிருந்து சுய ஒளி பெற்று உலகப்பொருளைக் காணச் செய்கின்றன என்று "ந. தத்ரசூரயோபாதி" என்ற உபநிடத வாக்கியம் விளக்கியுள்ளது. ஆகவே, எல்லாவற்றிலும் தனக்கு ஒரு நாயகன் இல்லாதவன் என்ற கருத்தை வேத வசனங்களாலும், புராணக் கதைகளாலும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

வி — சிறந்த, நாயகன் — தலைவன் என்றுங் கருத்து விளக்கஞ் செய்யலாம். ஒரு காலத்தில் ஆதிசிவம் முத்தொழில் புரிய மூவரைப் படைத்தருளியது. மூவரும் முத்தொழிலையும் செய்யத்தொடங்கினர். ஒரு தொழிலும் ஒழுங்காக நடைபெறவில்லை. அப்பொழுது மூவரும் "நாம் யார்? நாம் ஏன் தோன்றினோம்? நம்மைத் தோற்றுவித்தவர் யார்?" என சிந்தித்தனர். அப்பொழுது அம்மூவரும் அருவ உருவக் காட்சியைக் கண்டனர். வெண்மை ஆடை அணிந்து சத்துவ குணம் பொருந்தி நான்கு புஜங்களுடனும் எங்கும் காணக் காட்சிதரும் யானைமுகத்தானைக் கண்டனர். உடன் அவரை வணங்கிப் பிரார்த்தித்தனர். "எங்கள் தொழில் இடையூறு இல்லாமல் முற்றுப் பெறவேண்டும். மேலும், உம்மை வணங்கித் தொழிலை ஆரம்பிக்கும் எல்லோருடைய இடர்களையும் நீக்கியருள வேண்டும். எல்லாவகையான இடையூறுகளையும் நீக்கியருளல்வேண்டும்" என வேண்டினர். அன்று முதல் நாம் யாவரும் எக்காரியத்தைத் தொடங்கும் பொழுதும் "சுக்லாம் பரதரம்" என்று தொடங்கி பிரார்த்தித்து வருகின்றோம். தம்மை வணங்காது தொழிலை ஆரம்பித்த மும்மூர்த்திகளுக்கும் இடையூறுகளைக் கொடுத்து, பின் அவ்விடையூறுகளை நீக்கியருளிய பெருமானின் திருப்பெயர் "வக்ரதுண்டர்" என்பதாகும். வக்ர — மறைவாக நின்று, துண்டயதி — தொழிலை முற்றுப் பெறவிடாமல் துன்புறுத்தியவர் என்பது கருத்தாகும். ஆகவே, மும்மூர்த்திகளுக்கும் தலைவராக விளங்கியமையால் சிறந்த நாயகராகப் போற்றப்பட்டுள்ளார். வி — சிறந்த, பக்தி — அன்பு, விபக்தி — சிறந்த பக்தி என்பது கருத்தாகும். இதைச் சான்றோர் உபயோகித்திருக்கின்றனர்.

"விபக்தி : யத்திர ஆஸ்தே ஸ்வயமபி நிஷ்டதி ஸதா கண :"

விநாயகப் பெருமானிடம் எவருக்குச் சிறந்த பக்தி அமைகின்றதோ அவர் தானே ஒரு கணமாக அமைகின்றார். முக்தி பெற்ற சிவனாகின்றார் என்பது கருத்தாகும். வி - என்ற சொல்லுக்குச் சிறந்த என்ற கருத்தையும் கூறலாம் என்பதற்குப் பிரமாணம் காட்டப்பட்டுள்ளது. விகீர்ய: வி - எங்கும் பரவலாக, கீர்ய - தூவி என்பது கருத்தாகும். அதுபோல, வி - எங்கும்பரவலாகப் பரந்து நிற்கும் நாயகன் தலைவன் என்ற கருத்தும் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் இருவகை. மும்மலத்தால் கட்டுண்டவர்கள், பசுக்கள் ஆவார்கள். அவர்களுக்குத் தலைவர் பசுபதியாவார். மல பந்தம் நீங்கிப் பேரின்ப நிலை அடைந்த ஆன்மாக்கள் கணங்கள் ஆவார். அவர்களுக்குத் தலைவர் கண பதியாவர். இரண்டையும் வேத மந்திரம் குறிப்பிடுகின்றது.

"நம : சர்வாயச பசுபதயேச"

"கணேப்யோ கணபதிப்யச்ச வோ நம :"

இறைவன் ஒருவன், ஆன்மாக்கள் பல. அவை இரு பிரிவாகக் காட்டப் பட்டுள்ளன. பேரின்பம் அடைந்தோர் ஒரு பகுதியினர். அடையப்போகின்ற வர் மற்றப்பகுதியினர்.

"பிறந்த நாள் போலும் பிறக்கும் நாள் மேலும்
துறந்தோர் துறப்போர் தொகை."

இக்கருத்தை விவரிக்கின்றது. ஆகவே, கணபதி என்று வேதத்தில் கூறப்பட்ட சொல் ஆதி சிவத்தைக் குறிப்பதாக அமைகின்றது. சகல ஆன்மாக்களிடத்தும் சார்ந்தும், சாராமலும் நின்று அறிவைத் தூண்டிக்கொண்டிருக்கின்றார் என்ற சாஸ்திர உண்மையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, எங்கும் பரந்து நின்று ஆன்மாக்களுக்கு நாயகராக விளங்குகின்றார் என்ற கருத்து அமைவதாகின்றது. இவ்வாறு அளவிட முடியாத பெருமை வாய்ந்த, சிந்தித்த வற்றை எல்லாம் கொடுத்தருளும் சிந்தாமணி விநாயகப் பெருமானை எப்போ தும் வணங்கிப் போக மோக்ஷங்களைப் பெற்று உய்வோமாக.

கணபதி துணை.

---

# மணிவாசகர் காட்டுஞ் சமயநெறி,

**பண்டிதர், சைவப் புலவர், திரு. மு சின்னத்தம்பி, B. A. (Hons.) Dip. in Ed., கொக்குவில்.**

சைவசமயாச்சாரியராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாச கர் ஆகிய நால்வருஞ் சிவாநுபூதிச் செல்வர்கள். அவர்கள் அருளிய தெய்வப் பாடல்கள் சைவ சித்தாந்த உட்பொருள்களை எமக்கு எடுத்துச் சொல்லும் பனு வல்களாக அமைவன. அச்செய்யுள்களிற் சிலவற்றைத் திருவாசகத்தினின்றும் தெரிந்துகொண்டு, அவற்றிலிருந்து, "மணிவாசகர் காட்டும் சமயநெறி" என்ற பொருள் பற்றிச் சில குறிப்புகளை மட்டும் இங்கே ஆராய்வாம்.

மணிவாசகருக்கு: இறையடி வணக்கம், அன்பின் விசித்திரம், அழுகையின் மகத்துவம், தாழ்மையின் பெருமை, இறவாத இன்ப நுகர்ச்சி, இறையோடு இரண்டறக் கலத்தல், சுத்தமுத்தி நிலையில் அடியார்க்கு ஏற்படும் விறல் என்ற அநுபவங்கள் உண்டென்பதை அவரருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எமக்கு எடுத்துக் காட்டுவனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகர் "இறைவன் இணையடியைப் போற்றுதலே பிறவியை அழிக்கும் மருந்தாம்" என்ற உண்மையை அறிந்து, அவன் மலர்ப்பாதங்களைப் பற்றிப் பற்றறுத்தார் என்பதனை அவரருளிய நூல்கள் வலியுறுத்துகின்றன. "சிவபுராண" ஆரம்பத்தில் அவர் பதினைந்து இடங்களில் இறைவன் பாதத்தைப் பரவிப் போற்றுகிறார். பின்னுமவர், வேறிடங்களிலும் இறைவன் மலர்ப்பாதங்களை — "மாலயற்கும் எய்தற்கரிய திருவடி";— 'எவ்வுயிர்க்கும் ஈடாம் இணையடி";— "தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும் வான்வார் கழல்" என்றும் வழுத்துகின்றார். இத்தகைய சிறந்த இறையடியைத் தானடைய வேண்டுமென்றும், "வாரா உலக நெறியின்றேற" அது வழிகாட்ட வேண்டுமென்றும் மணிவாசகர் ஆசைப்படுகிறார். "எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்"; "செல்வர், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவனடிக்கீழ்ப் பல்லோரு மேத்தப் பணிந்து"; — "உன்குரை கழற்கே......கசிந்துருக வேண்டுவனே"; "போவோம் காலம் வந்ததுகாண், பொய்விட்டு உடையான் கழல் புகவே"; "உன்திருமலர்ப் பாதம் அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்"; — "தருக நின் பாதம் போற்றி"; — "நின்பாதம் நாயேற்கு அருளிட வேண்டும்!"; — "நினது திருவடிக்காம் பவமே அருளு கண்டாய்!" என்றும் மணிவாசகர் அருளுந் திருவாக்குகளினின்றும் அவர் சிவன்பதாம்புஜங்களை மருவும் விழைவை நாம் தெரிந்து கொள்கின்றோம்.

அன்பு ஒன்றே தெய்வ அநுபூதியைப் பெற்றுத் தரத்தக்கதென்பது "அழுது அழுது, அரனடி அடைந்த அடியார்தம்" கருத்து. "அன்பும் சிவமும் ஒன்று" என்ற திருமூலர் கருத்தை உண்மையில் கண்டு, அநுபவித்தவர் மணிவாசகப் பெருந்தகை! பரீட்சையில் மிகத் திறமையாகத் தேறும் ஆற்றல்சால் மாணவன் ஒருவன் தான் கற்றுக்கொண்டவை தான் சித்தியடைவதற்குச் சிறிதும் காணுதவை என்றேங்கி நிற்றல்போல, மாணிக்கவாசகரும், தன்னிடம் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இல்லாமைக்காக" வருந்திப் பெரிதும் அழுங்குகிறார்.

இறைவன்றன் இன்னருளைப் பெறுவதற்கு அழுகையும் ஒரு சாதனமாகக் கொள்ளக்கூடியது என்பதனை அடிகளார் பல இடங்களிலுஞ் சொல்லி வலியுறுத்துகிறார்.

"யானே பொய், என் நெஞ்சும் பொய். என் அன்பும் பொய்;
ஆனால், வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"; என்றும்;

"முழுமுத லேஐம்புல னுக்கும் மூவர்க்கும் என்றனுக்கும்
வழிமுத லேநின்பழ வடியார் திரள்வான் குழுமிக்
கொழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொலோவென்
றழுமது லேயன்றி மற்றென்செய் கேன்பொன்னம் பலத்தரசே!

என்றும் கூறும் பகுதிகள் அடிகளின் அழுகைக்கு எடுத்துக் காட்டுகளாம்.

தன் சிறுமையையும், தன் ஆண்டானது பெருமையையும் ஒப்பிட்டுணர்ந்து, பயனடைதலையே தன் குறிக்கோளாகக் கொண்டார் மணிவாசகர். சிறியவனுந் தன்னை விட்டுவிடாமல் இறைவன் ஆட்கொண்டருள வேண்டும் என்ற கருத்தமைய அவர் அருளும்:—

"இருந்து என்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்; ஒற்றிவை" என்ற வரிகள் இறைவன் மேலாந் தன்மையை விளக்குவனவாகின்றன. "நான் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களிலும் கடைப்பட்டவன்; கடையவனேனை.........விட்டிடுதி கண்டாய்;'' நாணது அழிந்து நாடவர் பழித்துரை பூணதுவாகக் கோணிதலுற்றவன். நான்,—

" உத்தமன் அத்தன் உடையான் அடிநினைந் துருகி
மத்தம னத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும்
தத்தம னத்தன பேச எஞ்ஞான்றுகொல் சாவதுவே''

என்று அடிகளார் தன்னைத் தாழ்த்துகின்றார். மேலுமவர் :—

" யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையோன்
யாவர்க்குங் கீழாம் அடியேனை — யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
பற்றறியேன் செய்யும் வகை''

என்றும், " யாவரினுங் கடையேனுய நாயினேன் '' என்றுந் தன்னைத் தாழ்த்தி இறைவனை உயர்த்தும் பகுதி, சிவஞானசித்தியாரின் :

" வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பி
தாழ்வுறுந் தன்மையோடு............'' என்ற வரிகளை எமக்கு ஞாபக மூட்டுகின்றன. இத்தாழ்வு எம் சமயத்தின் உயிர்நாடியாகப் பேசப்படுகின்றது.

மேலுமவர், இறைவன்பால் தனக்கு இடையறுத பேரன்பு வேண்டுமென்று பெருகிய காதலில் வேண்டுகின்றார். அவர் விண்ணப்பம் இறவாத இன்பத்தை வேண்டிய காரைக்காலம்மையாரின் விண்ணப்பத்தினை யொத்தது. " பொரு ளுடைக் கலையே! யோகத்தின் பொலிவே! தெருளிடத்தடியார் சிந்தையுட் புகுந்த செல்வமே! நான் புகழ்வேண்டேன்; செல்வம் வேண்டேன்; மண்ணும் விண் ணும் வேண்டேன்; பிறப்பு இறப்பு வேண்டேன்; நாளும் வேண்டாதனவற் றைத் தீண்டேன்: சென்று சேர்ந்தேன்; மன்னுதிருப்பெருந்துறை இறைதாள் பூண்டேன்; புறம்போகேன்; இனிப்புறம்போக வொட்டேனே '' என்றும்,

" உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்;
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் பசுப்போலக் கசிந்துருக வேண்டுவனே! ''

என்றும்; ''நின்றன் வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமாய் அருள்வாய்; இடை யறு அன்புனக்கு என் ஊடகத்தே நின்றுருகத் தந்திடுவாய்'' என்றும் அவர் இற வாத அன்பினை இறைவனிடம் யாசிக்கின்றார்.

" தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன்உண்ணுதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றுதாய் கோத்தும்பி! ''

என்ற பாடலினுல் இறவாத இன்பம் எது என்பதையும் அவர் புலப்படுத்துகிறார்.

அன்பு நிலையில் நின்று, இறைவனை அன்பினுற் பெற்று, அவனை அன்பி னுலே ஆராதித்து, அவனடியைச் சென்று சேர்தலே இரண்டறக் கலத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திநிலையில் சத்தாகிய சிவத்தைச் சார்ந்து, சிவத்தை அனுபவித்துக்கொண்டு, சிவமே தானும் நிலையை அத்துவித நிலை என்று சைவ சித்தாந்தம் கூறும். "இருவர் ஆகத்துள் ஒருயிர்கண்டனம்; தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்களே!" என்ற "திருக்கோவையார்" அடிகள் அந்த அத்துவித நிலையையே விளக்குவனவாம்.

மாணிக்கவாசகர் கவிதைகள் உயிருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு களைப் பலபடப்பேசிப் போற்றுகின்றன. திருவாசகம், திருக்கோவையார் என்ற இருநூல்களும் சைவசித்தாந்த இலக்கண நூல்களாக மிளிர்கின்றன. "எ.நிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடைய அன்பே! அன்பினால் ஆவி யோடாக்கை கசிந்துருக என்பரமல்லா இன்னருள் தந்தாய், நான் இதற்கு இலன்ஓர் கைம்மாறு" என்றும்; "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவனே, ஒன்றுநீயல்லை, அன்றி ஒன் றில்லை;" என்றும் வரும் வரிகள் அத்துவித நிலையை விளக்கும் பகுதிகளாம்.

மாணிக்கவாசகருக்குச் "சிவானுப" ஆசையுண்டு என்பதனைப் "பாவியேற்கும் உண்டோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி, ஆக்கை, யான், எனது என்று யாதுமின்றி அறுதலே" எனும் வரிகளினால் தெரிந்து கொள்ளுகிறோம். அவ்விருப்பத்தை அவர்:

"சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே."

என்ற அழகிய பாடலினாற் தெரிவிக்கின்றார்.

இறைவனிடம் தாம்பெற்ற இன்பப்பேறு பெரிதென்றும்; இறைவன் தன் னிடமிருந்து எதனைப் பெற்றுக்கொண்டான் என்றும் இறைவனை வினவுவதாக வரும்:

"தந்த துன்தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்?
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்,"

என்ற வரிகள் அவரின் விறலை விளக்குவனவாம். சுத்தமுத்திநிலையில் — இறை வனும் உயிரும் இரண்டறக் கலந்துநிற்கும்போது இத்தகைய விறல் ஏற்படுவதில் யாதொரு ஐயமுமில்லையே!

சுபம்.


---

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணரிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.


— கந்தபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிரந்தர யாகசாலையும், தூபி அபிடேக கும்பங்களும்.



குருமார்களுக்கு அலங்காரப் பொருள்கள் கொடுத்துபசரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாகசாலைக்கு முன் வேதபாராயணம் நடைபெறுதல்.



சிவனடியார்கள் திருமுறை ஓதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வி — நாயகன்.

[ ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள் ]

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்."

குணங்களின்பதி, கண-பதி, கணங்களுக்கு ஈசன், கணேசன், விக்கினம் போக்கும் ஈஸ்வரன் விக்கினேஸ்வரன்; நாயகனில்லாதவன் வி-நாயகன். தாலிப் பாக்கியம் இல்லாத பெண்ணை வி-தந்து என்கிறார்கள். தந்து என்றால் நூல், "மாங்கல்யம் தந்துநாநேற" நூலிலே தான் மாங்கல்யம் கோக்கப்படுவது, ஆகவே தந்து இல்லாதவன் வி-தந்து. மலம் இல்லாதவன், வி-மலன். அது போல் நாயகனில்லாதவன் வி-நாயகன்.

காணுபத்யம், சௌரம், சைவம், சாக்தம், கௌமாரம், வைணவம் ஆகிய ஷண்மதத்திலும் விநாயகருக்கு முதலிடம் உண்டு, விநாயகப்பெருமானை வணங்குபவர்க்கு, சித்தியுண்டு, நல்ல புத்தியுண்டு. அப்பெருமானைத் தவறாது சார்ந்து வணங்குபவர்க்கு, நாலு விதமான நன்மையுண்டென்பது ஔவையார் வாக்கு. எப்படி வணங்க வேண்டும்? தும்பிக்கையானிடம் நம்பிக்கையோடு போகும் போது, வெறுங்கையோடு போகலாகாதாம், ஒன்றுமில்லாவிட்டால் ஒரு "பூ", ஆவது கொண்டு செல்ல வேண்டும் என்கின்றார் முத்தமிழ் மூதாட்டி.

"தப்பாமல் பூக்கொண்டு சார்வார் தமக்கு" என்பது அவர் வாக்கு, அப்படிச் சார்ந்தால் வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலராள் நோக் குண்டாம், மேனிநுடங்காது என்கின்றார். அருணகிரிப் பெருமானும் இதை வலி யுறுத்தி "மட்டு அவிழ் மலர்கொடு பணிவேனே" என்று பாடுகின்றார். வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வுமிகுத்து வரும்.

சட்டத்தில் அதிபதி விநாயகர். தந்தையென்றாலும், தம்பி என்றாலும் சட்டம் சட்டந்தான். இதை அருணகிரிப் பெருமான்,

முப்புரம் எரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரன்,

என்றும்.

அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
    அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
    அக்கணம் மணமருள் பெருமாளே.

என்பதிலிருந்து அறியலாம்.

ஆகவே, சிந்தாமணி விநாயகப் பெருமானைத் தப்பாமல் பூக்கொண்டு சார்ந்து, வாக்கும், நல்லமனமும், மாமலராள் நோக்கும் நுடங்காத மேனியும் பெறுவீராக.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "தும்பிக்கை உண்டே துணை".

செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன், B. O. L., Dip. Ed.

"நம்பிக்கை யுண்டேல் நமக்கு விநாயகனார்
தும்பிக்கை யுண்டே துணை."

நம்பிக்கையிலேயே உலகம் நடைபெறுகின்றது என்று கூறின் மிகையாகாது. எதையும் நம்பக்கூடாது என்போர்தாமும் நம்பியே வாழ்கின்றனர். வழிப்போக்கன் தான்போகும் இடத்தை நன்கறியாதிருந்தாலும் — முன் அறியாதிருந்தாலும் — வழியில், தான் சந்திக்கும் மக்கள் கூறும் அடையாளங்கள், அடையும் வகைகள் ஆதியனவற்றை நம்பிக்கொண்டே, தான் அடையக் கருதிய இடத்தை அடைகிறான். இப்படியே பல காரியங்களுக்கும் நம்பிக்கை அடிப்படையாக விளங்குவதைக் காண்கின்றோம். சாதாரண காரியங்களிற் சித்தியடைதற்குத்தானும் முதலில் நம்பிக்கை வேண்டும். தன்னில் நம்பிக்கை, தலைவனில் நம்பிக்கை என்றிவற்றைக் கொண்டாலேயன்றிப் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது என்றே சமய நூல்களுங் கூறுகின்றன. சமயப் பெரியோர்களுங் கூறுகின்றனர். ஆகவே, செயற்கரிய காரியங்களைச் செய்து முடித்தற்கு நம்பிக்கை இன்றியமையாதது என்று காண்கின்றோம். மணிவாசகப்பெருமானும், எத்தனையோ ஆபத்துக்களினின்றும் பிழைத்து வந்ததன் பின்னரே, தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகின்றது என்கின்றார். அவ்வாறு சித்தம் உண்டாகிய பின்னரும், அதனைக் குலைக்க எத்தனை பொருள்கள் போர் தொடுக்கின்றன என்கின்றார். "ஆறு கோடி மாயாசக்திகள் வேறுவேறுதம் மாயைகள் தொடங்கின" என்பது முதலாக அவர் போற்றித் திருவகவலிற் கூறும் பகுதிகள் சைவ நன்மக்களால் நன்கறியப்பட்டனவேயாம். ஆகவே, தன்னில் நம்பிக்கை வேண்டும், தலைவனில் நம்பிக்கை வேண்டும். நமக்கொரு நாயகன் இருக்கின்றான். அவன் ஆட்ட நாம் ஆடுகின்றோம். அவன் அருளே திருமேனியாக உடையவன். அவனால் ஆகாததொன்றில்லை. அவன் சிவன், சத்தி, விநாயகன், முருகன் என்று வெவ்வேறு வகையாகப் பேசப்படினும் அவன் ஒருவனே. அஃது அவன் அருள் நாடகம். ஐந்து திருக்கரங்களும், மூன்று திருக்கண்களும், சந்திரனைத் தரித்த செவ்வானம் போலும் திருச்சடையும், யானை முகமும், மும்மதமும் உள்ளவராகிய விநாயகக் கடவுள் "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்று போற்றப்படுகின்றார். இதுபற்றியே கணபதியை முதலில் வழிபடும் மரபு ஏற்படலாயிற்று. விநாயகரும் சிவமும் சத்தியும் பிரணவ சொரூபியாவர். சிவனும் விநாயகரும் வேறல்லர். சிவபெருமானை ஓங்காரப் பொருள் என்று வேதம் கூறும். "ஓங்காரத்துட்பொருள்" என்றும், "ஓங்காரத்தொருவன்" என்றும் அப்பர் சுவாமிகளும் பாடுதல் காண்க. சிவனும் சத்தியும் சிவகுமாரரும் பூவும் பூவினது நிறமும் பூவினது மணமும் போன்றவர் என்பது சைவாகம நூற்றுணிபாம். ஆகவே, அவர் ஒருவரே. அவ்வொருவர் விநாயகராகத் தியானிக்கப்படுங்கால், அவர்தம் தும்பிக்கை சிறப்பாக எம்முன் நிற்கின்றது. அவன் விக்கினேசுவரன். தன்னை நினையாதவர்களுக்கு அவன் விக்கினங்களை உண்டுபண்ணி வழிப்படுத்துகின்றான். தன்னை நினைத்தவர்களுக்கு விக்கினங்களைப் போக்குகின்றான். இதனாலேயே அவனுக்கு விக்கினேசுவரன் என்னும் பெயர் உண்டாயிற்று. அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்து அவனில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். கொள்ளுவோமேல், அவன் தும்பிக்கை என்றும் துணையாக உண்டு. தும்பிக்கை எதனைக் குறிக்கின்றது? ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கின்றது. அதுவே பிள்ளையார் சுழி. ஊமையெழுத்து எனப்படுவதும் அதுவே. மூலமனு, மௌனக்கரம் என்னும் பெயர்களால் வழங்கப்படுவதும் அதுவே. அஃது எமக்குத் துணையாகும். அத் தும்பிக்கை நம்பிக்கையுள்ளார்க்கு அருள்பாலித்த வரலாறுகள் அநந்தம். நம்பிக்குத் திருமுறைகளைக் காட்டியருளியமை தொடக்கமாகத் தும்பிக்கை அளப்பருந் துணையை அளப்பரும் அடியார்களுக்குப் புரிந்துவந்த வரலாறுகளை நூல்களிற் படிக்கின்றோம். கயமுகாசுரனைச் சங்கரித்தமை, அநந்தசாப நிவாரணம் புரிந்துதவியமை, ஆபத்சகாயனாக அருளியமை, இந்திரனுக்கு அநுக்கிரகம் புரிந்துதவியமை, சித்தி விநாயகராய்த் திருமாலுக்குப் பகைவராகிய அவுணரை வெல்ல அருந்துணை புரிந்தமை, மெய்கண்டதேவர்க்குப் பரமாசாரிய மூர்த்தியா யெழுந்தருளியமை முதலாகக் கூறப்படும் வரலாறுகளையும் அவ்வக் காரணங்களால் அவ்வம் மூர்த்தங்களைத் தரித்தருளி, அவ்வம் மூர்த்திகளாக அடியார்களால் வணங்கப்படுவதையும் சைவப் புராணங்கள் எடுத்துக் கூறுநிற்கும். அந்நாயகனே இலௌகீகத்தில் மட்டுமல்ல, ஆத்மீகத்திலும் உறுதுணையாக நிற்பவன். பெத்தத்தில் மட்டுமல்ல முத்தியிலும் அவன் தும்பிக்கையே துணை. அது தனி வழிக்குத் துணை. வாழ்க்கையாகிய யாத்திரையில் உள்ள தனி வழிக்குந் துணை. பெருஞ் செல்வனொருவன் தனக்கு விருப்பமான ஒரு கறிப் பதார்த்தத்தை வாங்கி வந்தான். மனைவியிடங் கொடுத்து அதைச் சமைக்கச் செய்தான். அவளும் சுவை பொருந்தச் சமைத்தளித்தாள். அவளைப் பாராட்டு முகத்தால் இனிய வார்த்தைகளை இரகசியமாகச் சொன்னான். சற்றே இடப் பக்கம் நோகின்றது என்றான். சரிந்து படுத்தான். அந்தப் படுக்கையே படுக்கையாக, நெடுநித்திரையாகிய மரணத்தையே அடைந்தான் என்னும் பொருள்படத் திருமூலநாயனார்,

"அடப்பண்ணி வைத்தார்; அடிசிலும் கண்டார்;
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்;
இடப்பக்க மேஇறை நொந்ததே என்றார்;
கிடக்கப் படுத்தார்; கிடந்தொழிந் தாரே."

என்று உலக நிலையாமையைச் சொல்வதுபோல இறக்குங்கால், அத்தமும், வீடும், மாதரும், மைந்தரும் என்றெல்லாவற்றையும் எல்லாரையும் விட்டுச் செல்லும் தனிவழிக்கும் அத்தும்பிக்கையே துணையாதல் காண்க. ஆதலால், நிலையுள்ள அந்த ஒன்றிலே, மெய்த்துணையாகிய அந்த ஒன்றிலே, நம்பிக்கை வேண்டும். தந்தையின் தோளிலே, தாயின் ஒக்கலையிலே இருக்குங் குழந்தை அவர்கள் தம்மைக் கீழே தவறி விழவிட்டுவிடுவார்களோ என்ற ஐயமின்றிப் பூரண நம்பிக்கை கொண்டு மலர்ந்த முகத்தோடு விளங்குகின்றது. அதுபோலவே, நம்பிக்கை வேண்டும். எம்மைத் தாங்கும் நாயகன்மீது — விநாயகன்மீது — பூரண நம்பிக்கை வேண்டும். அந்நம்பிக்கை உண்டேல் என்றும் அவன் தும்பிக்கை உண்டே துணை.

நவாலியூர்ச் சிந்தாமணி விநாயகன் நம் குலதெய்வம். பஞ்சமுகங் கொண்ட விநாயகர் அருளின்மீதும் அவர்தம் தும்பிக்கையின்மீதும் நம்பிக்கை கொண்டு வாழ்வோமாக. அப்போது அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— கபிலதேவநாயனார் (11 ஆந் திருமுறை).

அறியுற் றிடுபா ரதமா னவெலாம்
குறியுற் றிடுதோல் முகர்குஞ் சரன்மேல்
எறியுற் றமருப் பினிலே டெனவாய்ப்
பொறியுற் றிடுமென் பதுபொய்த் திடுமோ?

— கச்சியப்பர்.

---

# அன்பு சிவம்

வித்துவான் பொன். முத்துக்குமாரன் B. O. L.

உயிர்களிடத்தில் எத்தனையோ குணங்கள் உள்ளன. அக்குணங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயது அன்பு. அது மனிதனிடத்தில் மாத்திரமே நன்கு விருத்தியடைந்துள்ளது. அது முற்றாக மனிதனிடத்தில் வளர்ச்சியடைந்தபொழுது அஃது அவனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துகின்றது. அன்பின் நிறைவினாலேயே அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமாக மதிக்கப்பட்டு, வணங்கப்படுகின்றனர். ஆணும் பெண்ணுமெனப் பெயர்பெற்ற இருவர் பிள்ளைப்பேற்றின் காரணமாகத் தந்தையும் தாயும் என அழைக்கப்பட்டு, அவ்விருவரும் தந்நலமிழந்து பிள்ளையின் நலம் ஒன்றினையே பேணுபவராய்ப் பேரன்பின்வயப்பட்டு நிற்கையில் அவர்கள் தெய்வமெனப் போற்றப்பட்டுப் பூசிக்கவும் படுகின்றனர்.

ஒருவர் அறிவினால் எத்துணை மேம்பட்டிருப்பினும், அவர் மேதை அவர் பேரறிஞர் எனப் போற்றப்படுதலேயன்றி, அவர் தெய்வம் எனத் துதிக்கப்படுதலில்லை. அன்பு, அறிவு என்னும் உயரிய குணங்கள் இரண்டனுள்ளும் அறிவைக் காட்டிலும் அன்பிற்கு மேன்மை அளிக்கக் காரணம் இல்லாமலில்லை. அறிவில் பலவகை உண்டு. நூலறிவு, நுண்ணிய புத்தியறிவு, அனுபவ அறிவு எனவும், பாசஞானம், பசுஞானம், பதிஞானம் எனவும் அது பலவகைப்படும். அவ்வெல்லாவற்றுள்ளும் பதிஞானமாகிய சிவஞானத்தைத் தவிர ஏனைய அறிவுகள் குற்றத்தின்பாற்படுவன; குற்றங்களின்பாற் படுத்துவன. பதிஞானமொன்றே குற்றமற்றதும் ஆன்மாவைக் குற்றத்தின்பாற்படுத்தாததுமாகும். அஃது அங்ஙனமாக, அன்பு அவ்வாறு பலவகைப்படுதலுமில்லை; அதனையுடைய உயிரைக் குற்றத்தின்பாற்படுத்துவதுமில்லை. அன்பின் வயப்பட்டவர் உயர்நிலையடைதலேயன்றி, இழிநிலை இழிகுணம் அடைதல் எக்காலுமில்லை. அஃது எவ்வாறு என்பது சிந்திக்கத்தக்கது.

அன்பு தன்னையுடைய ஒருவரை உயர்த்துவது என்பதை ஆராயுமுன் அன்பு, ஆசை என்னுமிரண்டற்குமுள்ள வேறுபாடு அறியத்தக்கது. பசுவின் பாலும் கள்ளிச் செடியின் பாலும் தோற்றத்தால் ஒத்தன. ஆயினும் குணஞ்செயல்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கொன்று அவை முற்றும் மாறுபட்டன. அது போல அன்பும் ஆசையும் தோற்றத்தால் ஒத்தன போலிருப்பினும் அவ்விரண்டும் குணஞ் செயல்களால் ஒன்றுக்கொன்று முற்றும் முரணானவையேயாம். அன்பு தன்னலத்தை இழக்கச் செய்து, அன்பு செய்யப்படும் பிறரது நலம் ஒன்றையே பேணச் செய்வது. ஆசை பிறர்நலத்தைத் மறப்பித்து தன்னலத்தையே பெருக்கச் செய்வது. அன்பு செய்பவரது உடல் பொருள் முதலியன நாளும் நாளும் நலிவடையும். ஆசை கொண்டவர் தமது உடல் பொருள் முதலியவற்றை நாளும் நாளும் வலிவடையச் செய்வர். அன்புடையார்க்கு இன்பமேயன்றி எந்நாளும் துன்பமில்லை. ஆசையுடையார்க்கு இன்பம் போலக் காட்டித் துன்பமே பெருகும். இவ்வாறு குணநலன்களால் அன்பும் ஆசையும் இருதுருவம் போல்வன.

அன்பினது தெய்வீகத் தன்மையை உணர்ந்தே தமிழ் மக்கள் இல்வாழ்க்கைக்கும் இறைவனை அடைந்துய்யும் ஈறிலாப் பெருவாழ்க்கைக்கும் அன்பொன்றே இன்றியமையாத சாதனமாவது எனத் தமது நூல்களில் மிகப் பழங்காலந் தொட்டே கூறியும், அக்கூற்றிற்கிலக்கியமாக வாழ்ந்தும் வந்துள்ளனர். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்னுந் **தமிழ் மறையும்**, "செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா, அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ, மாலறநேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்னும் **சிவாகமமும்** ஈண்டு நினைத்தற்குரியன.

அங்ஙனமாயின், அன்பானது வாழ்க்கையில் இன்பத்தையுதவுமாயினும் தெய்வத்தன்மையை எவ்வாறு தரும் என்பது ஆராய்தற்குரியது. ஆன்மா பிறத்தற்கும், துன்புறுதற்கும் காரணமாய் இருப்பவை நான் என்னும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றுமேயாகும். உடலினை அவ்வுடலினுள் வியாபகமாய் நிற்கும் உயிர் இயக்குவதுபோல உயிரினை அவ்வுயிரினுள்ளும் பிறவற்றுள்ளும் நீக்கமற வியாபித்து நிற்கும் இறைவன் இயக்குகின்றான் என்பதை உயிர் உணர்வதில்லை. அங்ஙனமுணராமையோடு இறைவனை மறந்து, தன்னை வேறாகப் பாவனை பண்ண, அதன் பயனாக 'நான்' என்னும் முனைப்பும், தன்னைச் சூழ்ந்துள்ளவற்றில் உரிமை பாராட்டும் 'எனது' என்னும் நினைப்பும் ஆன்மாவை எப்பொழுது பற்றியனவோ அப்பொழுதே அது பிறப்பிறப்பிற்கும் துன்பத்திற்கும் உள்ளாகிவிடுகின்றது. இவ்வித நினைப்பும் முனைப்பும் ஆன்மாவிடத்து அநாதியே உள்ளன. அங்ஙனம் அநாதியே பற்றியுள்ள பற்றுக்கள் குரு வாயிலாகப்பெறும் தீக்கை, உபதேசம், சாதனை முதலியவற்றாலன்றி எளிதில் நீங்கப்பெறா. அவ்வாறாய பற்றுக்கள், ஒருவரிடத்தில் அன்பு உதயமாகி அவரைப் பூரணமாக வசப்படுத்தியதும், இருந்த இடம் தெரியாமல் மெல்லமெல்ல நீங்கிவிடுகின்றன. உதாரணமாக, கணவனிடத்திலே மாசற்ற அன்பு கொண்டுள்ள மனைவியின் உள்ளத்தில் தன்னைப் பற்றிய நினைவு அற்றுப்போய் விடுகின்றது. 'நான்' என்பதற்று அதனிடத்தினை 'அவர்' என்பதே ஆட்கொண்டுவிடுகின்றது. என் சுகம், என் புகழ், என் நன்மை என்பனவின்றி அவரது சுகம், அவரது புகழ், அவரது நன்மை ஆகியனவே வேண்டப்படுகின்றன, 'தானே அவளே' என்னும் இறையனார் களவியற் சொற்றொடரும் அதற்கெழுதிய உரையும் இங்கு ஒப்புநோக்கத் தக்கன. இறைவனிடத்தில் உயரிய அன்பு கொண்டுள்ள உண்மையடியார்களது உள்ளத்திலும் அவ்வாறே தமது இன்பம், தமது வீடுபேறு, நமது தெய்வீகநிலை ஆகிய இலட்சியங்களின்றி இறைவன் அன்பு ஒன்றே இடம் பெற்றிருக்கும். "கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" எனத் திருக்கூட்டச் சிறப்பினைச் **சேக்கிழார் சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டியது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கணவனை அன்பு செய்யும் மனைவி தன்னை இழந்து தான் அவனாகிவிடுகிறாள். நாட்டுமக்களை நல்லன்பு செய்யும் ஒருவர் தம்மை இழந்து தாமே நாட்டுமக்களுள் ஒவ்வொருவருமாகி விடுகிறார். சிவனை மெய்யன்பு செய்யும் சீரிய தொண்டர் "அவனே தானேயாகிய அந்நெறியில்" தம்மை இழந்து தாமே சிவமாகி விடுகின்றனர்.

"அன்பு சிவமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே."

---

உ

# மணி வார்த்தை.

[சைவப்புலவர், பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.]

சமய குரவர்களில் ஒருவராகிய மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில் ஓர் இடத்தில் "வாக்கு உன் மணிவார்த்தைக் காக்கி" எனப் பாடியுள்ளார். குருமணியாகத் திருப்பெருந்துறைக் குருந்தமர நீழலிலே எழுந்தருளி, ஞான உபதேசம் போதித்து நின்ற எம்பெருமானைப் பற்றிய வார்த்தைகள் யாவும் மணிவார்த்தைகள் என்பதைப் பரஞ்சோதி முனிவரும் தமது பாடலொன்றில் விளக்கியுள்ளார். மணிவார்த்தைகளை அருளியபடியால் மாணிக்கவாசகர் எனப்பட்டார் என்பதை அப்பாடல் விளக்குகிறது.

"பழுதிலாதசொல் மணியினைப் பத்திசெய்து அன்பு
முழுதுமாகிய வடத்தினுல் முறைதொடுத்து அலங்கல்
அழுதுசாத்தும் மெய்யன்பருக்கு அகம்மகிழ்ந்து ஐயர்
வழுவிலாத பேர் மாணிக்கவாசகன் என்றார்."

அடிகளுக்கு எழுந்த அழுகை "இன்னும் சிலகாலம் இவ்வுலகத்தில் இருப்பாயாக" என்பதனைக் கேட்டதனுலேயே எழுந்தது என்க. குருமூர்த்தியைப் பிரிந்த நிலையில் ஆற்றுமை மீதூர அழுது அழுது புலம்பினர். அவருடைய அழுகை திருப்பெருந்துறையிலேயிருந்து மதுரைவரை சென்று பின்பு திருப்பெருந்துறைக்கு வந்து அங்கிருந்து சிதம்பரம் வரைசெனறு முடிகிறது அப்படியாகச் செய்த தெய்வீகப் பிரயாணத்திற் பாடிய பாடல்களின் தொகுதியே திருவாசகம். இதனை மணிவாசகம் என்றும், திருவாசகம் என்றும், தேன் என்றும் பலபடப் பாராட்டுவார்கள். திருவாசகம் எழுதுவதற்குக் குருமணியால் உணர்த்தப்பட்ட திருவைந்தெழுத்தின் விளக்கமே காரணமாகும். திருவாசகம் எட்டாந் திருமுறையாக அமைந்ததன் காரணமும் ஒன்றுண்டு. சிவஞான போதத்தில் எட்டாவது சூத்திரப் பாவாகிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே."

என்னும் பாடலுக்குத் திருவாசகம் இலக்கியமாக அமைந்துள்ளது. திருவாசகத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினல் அடையுமின்பத்தை இராமலிங்க சுவாமிகள் தமது அனுபவத்தில் விளக்குகிருர்.

"வான்கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

திருவாசகத்தைத் தேனுகவே அடியார்கள் சுவைத்தார்கள். உணவுமாகி மருந்துமாகி உதவும் தன்மை தேனுக்குண்டு. சுகதேகிகள் தேனைக் குடித்துத் தேகபலந் தேடிக் கொள்வார்கள். நோயாளிகள் தேனை மருந்துடன் உண்டு நோயை மாற்றிக்கொள்வார்கள். அதே போன்று, அருள் வயப்பட்டோர்க்கு நல்ல பாராயண நூலாகிறது. மருள் வயப்பட்டோர்க்கு அவர் மயக்கறுத்து உய்தி காட்டுகிறது. இன்னும் தேன் தூய மலரில் தோன்றி உண்ண வரும் வண்டுகளுக்கு இன்சுவையளிக்கிறது. வாதவூரடிகளின் திருவாசகம் அவரின் தூய இருதய கமலத்தில் தோன்றி ஓதுவார்க்குப் பேரானந்தப் பெருவாழ்வு அளிக்கிறது. தேன் உடல் நோயைத் தீர்க்கும். திருவாசகம் உயிர் நோயைத் தீர்க்கும். தேன் குடிப்பார்க்கேற்படும் பித்தும், திருவாசகம் படிப்பார்க்கு ஏற்படும் பித்தும் உணர்தற்குரியது. பின்னையது தெய்வீகப் பித்து. இந்தப் பித்திஞல் உலகச் சாயல் படிப்படியாக மறைந்து தெய்வச் சாயல் படிப்படியாகத் தோன்றுகிறது. இந்த நிலையிலேதான் "நான் யார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? என்னை யாரறிவார்?" என்ற கேள்விகள் எழுகின்றன. திருவாசகத்தேன் கொடுக்கும் இன்பத்தைச் சிவப்பிரகாச சுவாமிகள்

"திருவாசகமிங்கு ஒருகாலோதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடு மணற் கேணியில் சுரந்து நீர்பாய
மெய் மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
அன்பராகுனரன்றி
மன்பதை உலகில் மற்றையோரிலரே."

எனப் பாடியுள்ளார். மணிவாசகத்தின் சில பாடல்களைக் கவனிப்போம். முதலிலே வரும் சிவபுராணத்திலே இறைவன் தன்பொருட்டுச் செய்த அருட்டிறனைக் குறித்து, "நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று இறைவனைப் போற்றுகிருர். திருவாசகத்தில் வரும் திருச்சதகம் என்ற பகுதியே எம்போலியரை மையமாகக் வைத்துக் கொண்டு அடிகள் பாடிய பகுதியாகும். "சத்திய ஞானதேசிகர் மோகம் சதகமாகமாம்" என மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருச்சதகத்தைக் குறிப்பிடுகிருர். பக்திச் சுவை சொட்டும் பாங்கிலே உலகத்தவர் ஓதி உய்வடையும் வழியிலே பாடப்பட்டது இப்பகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து
நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக் கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்
எம் முடையானே."

இப்பாடல் அமைந்ததேயல்லாமல் மணிவாசகர் தன்மை இப்பாடல் நிலையில் அமைந்ததன்று. உலக மக்களின் வாழ்க்கை நிலையிலே இப்பாடல் அமைந்ததேயல்லாமல் மணி நாடகத்திற்கு உடுப்புப் போட்டவன் அந்த அந்தச் சந்தர்ப்பத்திற்கேற்ப எவ்வாறு நடிப்பானே, அதே போன்று தாமும் அடியார் வேடம் போட்டு நடிப்பதாகவும் உண்மையடியார்கள் வீடுபேற்றை விரும்புவதுபோலத் தாமும் விரும்புவதாகவும் கூறி, இப்படியான பொய் வேடத்தை விட்டு உள்ளம் உருகக்கூடிய வழியைக் காட்டும்படி இறைவனை வேண்டி நிற்கிறார். வீடுபேற்றைக் கேட்காது இடையறா அன்பையே கேட்கிறார். உண்மை அடியார்கள் கூடுமன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கியவர் என்பது சேக்கிழார் வாக்கு. இன்னும் தம்மை யாட்கொண்ட பெருங்கருணைத் திறத்தை விளக்குகின்றபொழுது மற்றைய அடியார்கள் நிலையையும் ஒப்புநோக்கிப் பார்க்கிறார். பெருமானுடைய நாமத்தைக் கேட்டவுடனேயே பள்ளத்தை நோக்கிப் புரண்டு செல்லும் நீரினியல்பு போன்று இறைவனை நோக்கிப் பதைத்துருகுபவர்கள் அவ்வடியார்கள் என்றும், அவர்கள் இருக்கத் தம்மை ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்டமைக்கு உள்ளந்தாள் தொடக்கம் உச்சிவரை பல நெஞ்சுகள் நின்று உருக வேண்டுமே என்றும், இங்கே ஒரு நெஞ்சுகூட உருகாமல் நிற்கிறதே என்றும், உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பொழிவதற்குப் பதிலாக இந்த இரண்டு கண்கூட மரத்துப்போய்விட்டதே என்றும், நெஞ்சு கல்லாகிவிட்டது என்றும் தமது நிலையை இழித்துக் கூறுகிறார். இறைவா உன்னால் ஆட்கொள்ளப்பட்டவனுடைய தீவினை இப்படியாகவா இருக்க வேண்டும் எனக் கவல்கிறார். பிறர் சொல்லக் கேட்ட மாத்திரத்தில் நெஞ்சமழிந்து நிலைகெட்ட பக்தர்களும் இருக்க, நேரே கண்டும் கல்லைப்போல் உருகாத தீவினையேனும் இருக்கிறேனே என்பது அவர் பாடற் பொருள்.

கோத்தும்பி என்பது அரசவண்டு இதனை விளித்துப் பாடுகின்ற பகுதி திருக்கோத்தும்பி என்று திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளது. இறைவன்பால் தூதாகச் சென்று ஊதுமாறு வண்டைப் பார்த்துப் பணிக்கிறார். அரசவண்டே, நீ விரும்பி உறைகின்ற பூவிலே தினையளவு தேன்தான் இருக்கிறது. அதற்காக நீ எத்தனை பூக்களுக்கு அலைந்து திரிகிறாய். இந்த ஆசையில் உன் வாழ்நாளெல்லாம் வீணளாய்க் கழிகிறது. நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும் இனிப்பவன் ஒருவன் இருக்கின்றான். அவன் திருவடி மலரில் அவ்வினிய தேனைப் பருகலாம். அது உடம்பில் உள்ள எல்லா எலும்புகளையும் உருக்குந் தன்மையது. ஆகவே, அப்பேரின்பத் தேனைப் பருகாது அழிகின்ற சிற்றின்பத் தேனில் நாட்டத்தை வையாதே. பிந்தியது உண்டால் மாத்திரம் இனிப்பது, முந்தியது கண்டாலும், நினைத்தாலும், பேசினாலும் இனிப்பது என்னுங் கருத்தை அமைத்துப் பாடிய பாடலைக் கவனிப்போம்.

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளுடைய மனக்கருத்துத் தம் பிறவி நீக்கப்பட வேண்டுமென்பதே. இக்கருத்தை அவர் பல இடங்களில் இறைவனிடம் விளக்கியுள்ளார். ''பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானு முன்னைப் பரவுவனே'' என்பது அவர் வேண்டுதலாகும். தேவர்களெல்லோரும் தாம் வாழ்வதற்காகவும் தம் பதவி நிலைப்பதற்காகவும் தம்மை மற்றவர்கள் தொழவேண்டுமென்பதற்காகவும் உன்னை வணங்குகிறார்கள். ஆனால், நான் என் பிறவி அறவேண்டும் என்பதற்காகவே உன்னை வணங்குகிறேன் என்பதை விளக்குகிறார். திருவாசகத்தில் இறுதிப் பகுதியில் இறைவன் தனக்கருளிய ஆக்கப் பாடல்களைக் குறித்து வியந்து பாடிய பாடல்கள் பலவுண்டு. உலக இன்பத்திலே மயங்கித் திரிகின்ற அறிவிலிகளுடன் கூடித் திரிந்த என்னை மும்மலங்களையும் அறும்படி செய்து நிலைபெற்ற பேற்றையளித்து நாய்க்குத் தவிசிட்டது போன்று, தமக்குத் தந்த பெருமையினை அச்சோப் பதிகத்தில் விளக்குகிறார்.

> "செம்மை நலமறியாத சிதடரொடுந் திரிவேனை
> மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்தான்
> நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
> அம்மையெனக் கருளியவாறு ஆர்பெறுவா ரச்சோவே"

என்று ஆனந்த மிகுதியால் களித்துப் பாடுகிறார். எனவே, மணிவாசகரின் வாயிலிருந்து வந்தவையனைத்தும் மணிவார்த்தைகள். அவை அவரின் தூய இருதய கமலத்திலிருந்து சொரிந்த தேன் துளிகள்; அவை ஓதுவோரின் உள்ளத்தை உருக்கும் பக்திப் பனுவல்கள். அதிலுள்ள ஒரு மொழியே எம்மையும் எம்மிறைவனையும் ஒன்றுவித்துத் தரும்மொழி என அனுபூதிச் செல்வர்கள் கூறுகிறார்கள். இந்த அனுபவத்தை நாமும் ஓரளவு அடைய வேண்டுமானால், மணிவாசகர் உள்ளத்தோடு ஒன்றுபட்டு நின்று, காலை மாலை ஓதி அதனைப் பாராயணம் பண்ணி உய்தியடைய வழி காண்போமாக.

---

> அகரமென அறிவாகி யுலக மெங்கும்
> அமர்ந்தகர வுகரமக ரங்கள் தம்மாற்
> பகருமொரு முதலாகி வேறு மாகிப்
> பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
> புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
> போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
> நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
> நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

— விநாயக புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை.
ஓம்.
கணேசாய மங்களம்.

# விநாயக ஷஷ்டி விரதமும், கஜமுகாசுர சம்ஹாரமும்.

[ நியாயசிரோமணி, கி. சுப்பிரமணியன். ]

"ஷஷ்டி" என்றால் சிவபெருமானுடைய குமாரர்களான விநாயகரையும், சுப்பிரமணியக் கடவுளையுந் தியானஞ் செய்யும் நாளாகும். ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணியரை வழிபடுவது "கந்த ஷஷ்டி" எனவும், திருக்கார்த்திகைக்கு மறுநாட் தொடங்கி இருபத்தொரு நாட்கள் கழிந்து வரும் ஷஷ்டியும் சதய நக்ஷத்திரமுங் கூடிய தினத்தன்றுவரை விநாயகரை வழிபடும் விரதம் "விநாயக ஷஷ்டி" விரதம் என்றுங் கூறப்படும். இக்காலங்களில் கோவில்களில் விநாயகருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், விநாயகர் அவதாரஞ் செய்த கதை படிப்பதும் இருபத்தோராவது நாள் கஜமுகாசுர சம்ஹாரம் நடைபெறுதலும், மறுநாள் இரவு குருட்டுப் பாம்பான விஷ்ணுவினது சாபவிமோசனம் அளித்தலுமாகிய கிரியைகள் நடைபெறும்.

## விநாயகப்பெருமானின் திருவவதாரம் :—

ஒருசமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் இந்திரன் அசுரர் தலைவனை வென்றான். அதனால் மனவருத்தமடைந்த அசுரேந்திரன் தனது குருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் தேவர்களை வெல்லுவதற்கு உபாயம் கேட்டபொழுது, சுக்கிராச்சாரியார் மாகதமுனிவரிடம் விபுதை என்னும் அசுரப் பெண்ணை அனுப்பச் சொல்ல, அவளுக்கும் முனிவருக்கும் பிறந்த பிள்ளையே கஜமுகாசுரனாவான். அவன் மேரு மலையிலிருந்து சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து, எப்படையினாலும், தேவர், மனிதர் என்பவராலும் இறவா வரம் பெற்றுக்கொள்கிறான். வரம்பெற்ற கஜமுகாசுரன் மதங்கமாபுரியெனும் பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு மூவுலகங்களையுங் கொடுங்கோலாட்சி புரிகின்றான்.

இச்சமயத்தில் தேவர்கள் அவனுடைய கொடுங்கோலாட்சியைச் சகிக்கமுடியாமல் சிவபெருமானிடம் முறையிடுகின்றனர். சிவபெருமானும் அவர்களுக்கு அபயமளித்து, விநாயகர் மூலம் அவனை அழிப்பதாகத் திருவாய் மலர்ந்தருளுகிறார்.

இது இவ்வாறாக, ஒருநாள் சிவபெருமான் உமாதேவியாரோடு கைலையங்கிரியிலுள்ள நந்தவனத்தில் ஓவியங்களைப் பார்த்துக்கொண்டிருந்த சமயம், உமாதேவியார் அங்கு வரையப்பட்டிருந்த ஓங்காரத்தை அன்புடன் பார்த்தபொழுது, சிவபெருமானுடைய அருளினால் அவ் ஓங்காரத்தினின்றும் விநாயகர் தோன்றினார். சிவபெருமான் விநாயகரை நோக்கி, "நீ எனக்கு முன் எல்லோராலும் வணங்கப்பெற்று, கணங்களுக்குத் தலைவனாக இருந்துகொண்டு கஜமுகாசுரனைச் சம்ஹாரித்து விஷ்ணுவினுடைய சாபத்தையும் நீக்குவாயாக!" என்று கூறியருளி, கைலையங்கிரி வாசலில் அவரை நாயகனாக இருத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு குருட்டுப் பாம்பாகச் சாபம் பெறுதல் :—

இப்படியிருக்கும்போது ஒருசமயம் விஷ்ணு கைலயங்கிரியை அடைந்து வாசலில் வீற்றிருக்கும் கணபதியை வணங்காது உள்ளே சென்று உமாதேவியாருடனிருக்கும் சிவபெருமானை வணங்கினுர். அப்பொழுது விஷ்ணுவின் கர்வத்தை அடக்க எண்ணிய சிவபெருமான், "உமாதேவியாரும் நாமும் சூதாட, நீ சாட்சியாக இருப்பாயாக!" என்று விஷ்ணுவிடம் கூறினுர். பின் சூதாட்டத்தில் தான் தோற்றுப்போக, உமையிடம் "நீ வெல்லவில்லை" என்று கூறிக் கொண்டே, விஷ்ணுவை நோக்கி, "யார் வென்ருர்கள்?" என்று வினவ, விஷ்ணு "சிவபெருமானே வென்ருர்" என்று பொய் கூறினுர். உடனே உமாதேவியார் கோபமடைந்து "நீ குருட்டுப் பாம்பாக ஆவாய்" எனச் சபித்துவிட்டார். பின் விஷ்ணு சிவபெருமானுடைய காலில் விழுந்து சாபம் நீங்கும் வழியை அருளுமாறு பிரார்த்தித்தார். அதற்குச் சிவபெருமான் "தென்தேசத்திலே ஆலவனமென்ற காட்டிலே ஓர் ஆலமரப் பொந்தில் இருந்து தவம் செய்துவா. அவ்வழியாகக் கஜமுகாசுரனை சம்ஹரித்த பின்பு விநாயகப்பெருமான் வருவான். அச்சமயம் அவனது கருணைகடாட்சத்தினுல் நீ சாப விமோசனமடைவாய்" எனக் கூறியருளினுர். உமாதேவியார் விஷ்ணுவைக் குருட்டுப் பாம்பாகச் சபித்த காரணம், "சூதாடுவதைக் கண்ணுல் பார்த்தும், காய்களை உருட்டும் சத்தத்தைக் காதால் கேட்டும் பொய் கூறியமையால் கண், காது இரண்டுமே பயனற்றதாக ஆகும்படி குருட்டுப் பாம்பாகச் சபித்தார்." பாம்புக்குக் கண், காது இரண்டும் ஒன்றேதான்!

## கஜமுகாசுர சம்ஹாரம் :—

விநாயகப்பெருமான் கைலயங்கிரியின் சிவாலய வாயிலிலும், விஷ்ணு குருட்டுப் பாம்பாகத் திருவாலங்காட்டு மரப்பொந்திலும், கஜமுகாசுரன் மதங்கமாபுரியிலும் வசித்துவருங் காலத்திலே, கஜமுகாசுரனது துன்பத்தைத் தாங்க முடியாத தேவர்கள் விநாயகப்பெருமானிடம் சென்று "உமது தந்தையின் கட்டளைப்படி கஜமுகாசுரனைக் கொன்று, எமது துன்பத்தை நீக்கியருள வேண்டும்!" என்று பிரார்த்தித்தனர். அவர்களது பிரார்த்தனைக் கிணங்கி விநாயகப்பெருமான் பூதகணங்கள் சூழ கஜமுகாசுரனேடு யுத்தத்திற்குப் புறப்பட்டார். விநாயகப்பெருமானின் வருகையைக் கேள்வியுற்ற கஜமுகாசுரன் விநாயகப்பெருமானிடம் வந்து "உன் தந்தையிடம் இறவா வரம் பெற்ற என்னை நீ அழிக்க முடியாது" என்று செருக்குடன் கூறிக்கொண்டு அவருடன் போர் புரிந்தான். அப்போது விநாயகர் தமது வலது கொம்பை முறித்து அவனது மார்பில் செலுத்தினுர். அதனுல் தாக்குண்ட அசுரன் மயங்கி வீழ்ந்து, பின்பு மயக்கம் தீர்ந்து பெருச்சாளி வடிவெடுத்துக்கொண்டு விநாயகரைத் தாக்கச் செல்ல விநாயகர் அவனது ஆணவத்தை அடக்கி அவனைத் தனது வாகனமாக்கிக் கொண்டார்.

## கஜமுகாசுர சம்ஹாரக் கிரியைகள் :—

விநாயக ஷஷ்டி கடைசி நாளான இருபத்தோராவது நாள் சாயங்காலம் விநாயகப் பெருமானது ஆலயத்தில் வடக்கு வீதியில் இக்கிரியைகள் நடைபெற்று, அங்கு போடப்பட்டிருக்கும் பந்தலில் வீதிவலம் வந்த வாகனத்தை விட்டு எலி வாகனத்தில் வைத்துக்கட்டி சோடசோபசார பூஜைகள் நடத்தி ஆலயத்தினுட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்வதைக் காணலாம். கஜமுகாசுர சம்ஹாரம் என்ருல் அவனைக் கொல்லுதல் என்ற கருத்தல்ல. சிவனது வரத்திஞல் அவன் இறவா வரம் பெற்றவன். அதனுல் அவன் சிரஞ்சீவியேயாதலினுல் விநாயகப் பெருமான் அவனது ஆணவத்தை அடக்கி அவனைத் தமது வாகனமாக்கிக் கொண்டார். அவன் என்றுஞ் சிரஞ்சீவியேயாவான்.

## குருட்டுப் பாம்பான விஷ்ணுவின் சாப விமோசனம் : —

கஜமுகாசுரனது இரத்தம் பெருகி ஆருக ஓடி ஒரு வனத்துள் புகுந்தது. அவ்விடமே இன்றும் திருச்செங்காடு என்று வழங்கப்படுகின்றது. விநாயகப் பெருமான் கஜமுகாசுரனைச் சம்ஹரித்தபின் திருச்செங்காட்டில் சிவபெருமானைப் பூஜித்துப் பின்பு ஆலங்காட்டுக்குச் சென்று குருட்டுப் பாம்பாக இருந்த விஷ்ணுவின் சாபத்தை நீக்கியருளினர். ஆலங்காடு இன்றும் திருவாலங்காடு என்று அழைக்கப்படுகிறது.

## விஷ்ணுவின் சாப விமோசனக் கிரியைகள் :—

கஜமுகாசுரசம்ஹாரம் நடந்த மறுநாள் இரவு விநாயகருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து, ஒரு சிறிய பீடத்தில் ஆலமரக் கிளையொன்றை நாட்டி அதனடியில் பஞ்சலோகத்தாலான ஒரு சர்ப்ப உருவத்தை வைத்துச் சர்ப்ப வடிவாக உள்ள விஷ்ணுவுக்குப் பூஜை செய்து, அப்பாம்பு வடிவத்தைத் தூக்கி விநாயகரை மும்முறை வலம்வரச் செய்து அதற்குச் சாபவிமோசனம் அளிப்பதாகப் பாவனை செய்து, விநாயகப் பெருமானின் காலடியின் எதிரில் அவ்வுருவத்தை வைத்து அதன்பின் விநாயகப் பெருமானுக்குப் பூஜை செய்வதைக் காணலாம்.

## இருபத்தொருநாள் பூஜை செய்தவன் வரலாறு : —

ஒரு சமயம் அனலாசுரன் என்னுமோர் அசுரனை உலக நன்மைக்காக விநாயகர் விழுங்கிஞர். அவர் உடலில் எல்லா உலகங்களும் அடக்கமானபடியால் உலகங்கள் பொசுங்க ஆரம்பித்தன. இதைக் கண்ட முனிவர்கள் இருபத்தொரு அறுகம்புற்களால் விநாயகரை அருச்சித்து அவரைச் சாந்தப் படுத்திஞர்கள். அப்பொழுது விநாயகர், "பல யாகங்களால் என்னை வழிபடுவதைவிட அறுகம் புல்லால் என்னை அர்ச்சித்தால் எனதருளைப் பெறலாம்" என்று கூறியருளிஞர். அம்மகிமையை உணர்ந்து ஜனங்கள் அறுகம்புல்லிஞல் விநாயகரை அர்ச்சிக்கின்றனர். முனிவர்கள் இருபத்தொரு அறுகம்புற்களால் அர்ச்சித்தமையால் ஜனங்களும் இருபத்தொருநாள் விரதமிருந்து வழிபடுகின்றனர்.

மேலும், இவ்விரதத்தை மக்கள் அனுட்டிக்க வேண்டும் என்று பரப்ப எண்ணிய ஏழு தேவகன்னியர் இருபத்தொருநாள் விரதமிருந்தனரென்றும், அவர்களால் தெரிவிக்கப்பட்ட விஷ்ணுவும் பாம்பாகிக் கிடந்தபொழுது இவ் விரதத்தை அனுட்டித்து இருபத்தொருநாட்கள் விரதமிருந்து சாபவிமோசனம் பெற்ருர் என்றும், பிள்ளையார் கதை என்னுஞ் சிறு நூலில் :—

"கம்பமாமுகத்துக் கடவுள்தன் பெருமையை, அம்புவியோருக்கு அறிவிப்போமென
உம்பருலகத்து ஓரேழுகன்னியர், ஸ்தம்பநூலேணியில் தாரணிவந்து",

என்னும் பகுதியிஞலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாம்புருவாகிய பஞ்சாயுதனும்,
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன்"

என்னும் பகுதி மூலமும் இருபத்தொருநாள் விரதமிருந்ததாகத் தெரிகிறது.

**விநாயக ஷஷ்டி விரதத்தாலேற்படும் பயன்:—**

இவ்விரதத்தைப் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் அனுட்டிப்பார்களேயானுல், குருட்டுத் தன்மை, செவிட்டுத் தன்மை, சந்ததி யின்மை, குடும்பச் சச்சரவு, மக்களைப் பிரிந்திருக்கும் நிலை, நோய் முதலான யாவும் நீங்கிச் சுகம் பெறுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட விநாயகரது திருவடியை வணங்கி, விநாயக ஷஷ்டி விரத உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடி அவனருளைப் பெற்று வாழ கஜமுகனைப் பிரார்த்திப்போமாக.

"கணேசாய மங்களம்."

---

உ
சிவமயம்.

# அன்பும் அருளும்.

**புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை, கொக்குவில்.**

உலகம், உயிர் இவைகளின் இயல்பை மக்கள் உணர, வழி காட்டுபவர் கடவுள். அன்பு உள்ளத்தில் வளர, கடவுள் அருளும் வளரும்:

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றல் மரந்தளிர்த்தற்று." — திருக்குறள்.

அருளைப் பெறுவதே மனிதப் பிறவியின் நோக்கம். அதற்குத் துணைசெய்வது அன்பு. அன்பு எப்படி வளரும்? கல்வியால் அறிவு வளர, அறிவு நிலையுள்ளன நிலையில்லாதனவற்றை உணர்த்த உணர்வு நிலைப்பொருளாகிய கடவுளை நினைத்தற் கருவியாகிய மனத்தைச் சேர, மனம் கடவுளிடத்தில் பதிய மனத்தில் அன்பு வளரும்.

"ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி" —பெரியபுராணம். "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி, தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது மற்று முயர் சிவ ஞானத்தாலே, போழிள மதியினைரைப் போற்றுவாரருள் பெற்ருரே" —சித்தியார்.

"பரந்துபல்லாய் மலரிட்டு முட்டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல்லா மெமக்கேபெறலா மென்னும் அன்பருள்ளம்
கரந்துநில்லாக் கள்வனே நின்றன்வார் கழற்கன்பெனக்கு
நிரந்தரமா யருளாய் நின்னையேத்த முழுவதுமே." — திருவாசகம்.



249692
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒரு குணம் குறியில்லாத கடவுள் உயிர்களிடத்து வைத்த கருணையால் அருளுருக்கொண்டு ஆலயங்களில் எழுந்தருளியிருந்து அன்பினல் வழிபடுவாருக் கருள்புரிகின்ருர். உள்ளம் தூயராய் மனத்தில் வழிபடுவாருக்கு அங்கே வெளிப்பட்டு அருள் புரிகின்ருர்.

"எழுதரிய மறைச்சிலம்புகிடந்து புறத்தலம்ப அன்பரிதயமென்னும்
செழுமலரோடையில் மலர்ந்து சிவானந்தத்தேன் ததும்பும்தெய்வக்கஞ்சத்
தொழுதகுசிற்றடிப் பெரியவிரல்சுவைத்து மைக்கண்ணீர் துளும்பவாய்விட்
டழுதணையாடையிற் கிடந்தான் அனைத்துலகுமீன்று காத்தளிக்குமப்பன்."

— திருவிளையாடல்.

எனவே, அன்புடையார்க்கருள்பவன் இறைவன். நினைப்பவற்றை நினைத்தபடி கொடுப்பது சிந்தாமணி. அது இரத்தினங்களுள் தலையாயது. சிந்தாமணி விநாயகப் பெருமான் திருவடிகளை அன்பினல் அடைந்து வழிபட்டால் எல்லாம் பெறலாம். அன்பினலன்றி எவ்வித ஆடம்பரங்களினலோ, எவ்வித வேடங்களினலோ அவனருளைப் பெறல் அரிது என்பது.

---

உ

# பிள்ளையார் வணக்கம்

[பண்டிதை சதாசிவம் அமிர்தாம்பிகை B. A. Hons.]

திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரங்கள் பெரும்பான்மையும் சிவ வணக்கச் சார்புடையனவே. எனினும், முழுமுதற் கடவுளாகிய சிவபிராைேடு சேர்த்து திருக்குமாரர்களாகிய குமரப்பெருமான், விநாயகர் ஆகியோருடைய திருப்புகழ்களும் சொல்லப்படுகின்றன.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

உமாதேவியார் பிடியின் வடிவத்தையும் சிவபெருமான் ஆண்யானையினுருவத்தையும் எடுத்துக் கொள்ளத் தோன்றியவருளுருவமே கணபதிக் கடவுளாகும். அவர் தம்மை வழிபடுகின்றவருடைய இடர்களை நீக்குகின்றமையால் விக்கினேசுவரரென்றும், எல்லோருக்கும் தலைமை தாங்கி நடத்துகின்றமையால் விநாயகரென்றும் திருநாமங்களைப் பெறுகிருர். கஜானனர் (யானை முகத்தர்), வக்கிர துண்டர் (வளைந்த துதிக்கையர்), ஆகுரதர் (எலிவாகனர்) என்னும் மறுதிருநாமங்களையுடையவர். அடியார்களின் இடர்களை நீக்கிச் சித்தியைக் கொடுப்பவராகையால் எக்காரியமுந் தொடங்குமுன் பிள்ளையார் வணக்கஞ் செய்கிருர்கள். கடைக்கணக்கு, இலக்கியமெழுதுதல், கடிதம் வரைதல் முதலியன நடைபெறுமுன் பிள்ளையார் சுழியிட்டு வணங்குதல் சைவர்களின் பழக்கமாகும். அடிக்கல்விடுதல் விவாகம் முதலிய நற்கருமங்கள் செய்யுமுன் கணபதி வணக்கஞ் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்த சுவாமிகளுடைய தேவாரத்திற் சொல்லப்படும் கணபதி வரலாறு சுப்பிரபேதாகமத்திலுள்ளது. வராக புராணத்தில் சிவபிரானுடைய திருநுதலில் நின்றும் தோன்றியதாகவும், கந்தபுராணம், மச்ச புராணங்களில், உமாதேவியார் நீராட உபயோகித்த வாசனைத் திரவியங்களினின்றும் அவதாரம் செய்ததாகவும் காணப்படுகிறது.

பழைய புராணங்களில் பிள்ளையார் பிரமசாரிக் கடவுளாகவே காணப்படுகிருர். பிற்கால நூல்களில் சித்தி, புத்தி யென்னும் இரு சத்திகளுண்டென்று சொல்லப்படுகிறது. அறிவிற்கும் வெற்றிக்கும் அவர் தலைவரென்றே கருதப்படுகிறது. காணுபத்தியக் கோட்பாட்டின்படி பிள்ளையாருடைய தேவி பிள்ளையாருக்குப் பின்னுலே எழுந்தருளுகிருர். கணபதியை வழிபடுவோர் சத்தியோடு கூடிய பிள்ளையாரையே வணங்குகின்றனர். சத்தியோடு கூடிய பிள்ளையாரின் திருவுருவங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன: உச்சிட்ட கணபதி, மகா கணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி, இலட்சுமி கணபதி என்பவைகளே. மகா கணபதியென்னும் அருள் வடிவத்தில் பத்துக் கரங்களும் செம்மை நிறமுமுடையவராகிருர். நான்கு கைகளும் மஞ்சள் நிறமும் முக்கண்ணுமுடையவர் ஆரித்திராகணபதியார். உச்சிட்ட கணபதியார் நான்கு கரங்களோடு கூடியவர்.

இவ்வாறு பிள்ளையாரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோருமுளர். இறை வழிபாட்டில் ஈடுபடுவோர் உள்ளம், உடம்பு, வாயாகிய மூன்றினுலும் வணங்க வேண்டும். "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என்று நாவுக்கரசர் நெஞ்சையே முதல் முதலாகத் தொண்டு செய்ய வரும்படி வேண்டுகிருர். மனஞ் சேராத உடற்ருெண்டாகிய திருக்கோவிலைத் துப்பரவு செய்தல், பூங்கா வைத்தல் முதலியனவும், வாய்த்தொண்டாகிய தேவாரம், பாடல் முதலியனவும் வெறும் உடற்பயிற்சியும் வாய்ப்பயிற்சியுமாகவே முடியுமென்று அனுபூதிமான்கள் கருதுகின்றனர். ஓரளவு இறைவனையுணர்வதற்குச் சிறந்த கருவியாகும்.

> "சித்தமொன்றிச் செய்கழலுன்னிச் சிவனென்று
> நித்தலு மேத்தத் தொல்வினை நம்மேனில்லாவே."
>
> — தேவாரம்

மனம்வைத்துக் கடவுளுடைய திருவடிகளை வணங்க நாம் செய்த வினைகள் நீங்குமென்று திருஞானசம்பந்த சுவாமிகள் புத்திமதி கூறுகிருர். திருவடிகளை வழிபட நாமவருக்கு அடைக்கலப் பொருளாவோம். இறைவனே நாம் செய்யும் வினைகளின் பயன்களையெடுத்துச் சுமப்பவனுகிருர். எம்பிரான் ஆண்டானுக நாமடிமையாக "நான்" "எனது" என்ற உணர்வற்றுப்போக, இறையுணர்வொன்றே நமக்குண்டாகும். மனமொன்றித் திருவடி வணங்கலே பேரின்பத்திற்கு வழிகாட்டுவதாகும்.

எங்களுடைய மனம் இறைவனையே பற்றுவதாகவும், அவன் புகழ்களையே பரவுவதாகவும், அவனுடைய திருவடிகளைப் பணிவதாகவும், பெருமைகளைப் பாடுவதாகவும் அமைந்தால் நமக்கு மேன்மையுண்டு.

பழவினைகள் கொடியவையாக விருந்தாலும் உண்மையான நம்பிக்கையுடன் எம்பிரானுடைய திருவடிகளை வணங்கினுல் அவரருள்புரிவர். தீவினைப் பயனுகிய துன்பத்தை ஆண்டவன் தருவதும் மறக்கருணையின் பாற்பட்டதே. ஆணவ முனைப்பினுல் அரக்கன் கயிலையைப் பெயர்த்தெடுக்க முயலும்போது, மலையைப் பெருவிரலினுலூன்றி யடர்த்தார். ஆணவம் நீங்கப் பெற்றபின் அரக்கன் இறைவனை வழிபட இறைவனும் அருள் கூர்ந்தார்.

> " ஆவாவென வரக்கனலற வடர்த்திட்டு
> தேவாவென அருளார் செல்வர்"
>
> — தேவாரம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிள்ளையார் சுழியும் சிவமயமும்.

புலவர்மணி சோ. இளமுருகனார்

திருமுகம் முதலிய எக்கருமத்தையாயினும் எழுதத் தொடங்குமுன்பு பிள்ளையார் சுழியையும் அதன்கீழே சிவமயம் என்ற சொல்லையும் எழுதுவது தமிழ்நாட்டு மரபு. மரபு — தொன்று தொட்டு வரும் வழக்கம். அம்மரபு, ஆங்கிலேயருடைய கல்வி கலாசாரத்தொடர்புகளினுற் பெரும்பாலும் அழிந்து வருகின்றது. அதற்குக் காரணம், அவை உணர்த்தும் உயர்ந்த கருத்துக்களை அறிந்துகொள்ளாமையேயாகும்.

சித்தாந்த சைவத்தின் சாரமாய் விளங்கும் அவைகளின் மெய்ப்பொருளை விளக்குதல் இந்நாளில் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. நாவலர் பெருமானின் அடிச்சுவட்டிற் செல்கின்ருேம் என்று இறுமாந்திருக்குஞ் சைவர்களிற் பலர் எழுதுந் திருமுகம் முதலியவற்றில் அவற்றை எழுதாது விடுகின்றனர். அங்ஙனம் எழுதுதல் நாகரிகம் ஆகாது என்பது அவர் கருத்துப் போலும்! சைவாசிரியர்களும் சைவத்தொண்டர்களும் இதனைக் குறிக்கொண்டு ஆவன செய்யக் கடவர்.

## மெய்ப்பொருள்

இனி, அவைகள் உணர்த்தும் மெய்ப்பொருளை ஆராய்வாம். மன்னுயிர்கள் தமக்குரிய வினைகளை நுகர்ந்து தொலைத்து அறியாமையினின்றும் நீங்கி விடுதலையடையும் பொருட்டு, அவைகளுக்கு வேண்டப்படும் உடம்பு மனம் முதலிய கருவிகளும், உலகமும், நுகர்பொருள்களும் என்பவற்றைப் படைத்துக் கொடுக்கத் திருவுளங்கொண்ட பேரருட்சிவம், குடிலையைக் கலக்கித் தொழிற் படுத்தும். அப்பொழுது நாதமும் விந்துவும் என இரண்டு தத்துவங்கள் தோன்றும். தத்துவம் — மெய்ப்பொருள். அவை இயைந்து மீண்டுந் தொழிற்படும் போது அறிவு விளக்கத்துக்குரிய சொல்லுலகமும், நுகர்ச்சிக்குரிய பொருளுலகமுந் தோன்றும். எனவே, எல்லாத் தோற்றத்துக்கும் முழுமுதலாய் நிற்பன நாதமும் விந்துவும் ஆகும். அவை முறையே சிவமுஞ் சத்தியும் எனப்படும். நெருப்பிற் சூடு போலச் சிவத்தின் குணமாய் வேற்றுமையின்றி நிற்கும் ஆற்றலே சத்தியெனப்படும்.

## பிள்ளையார் சுழி

பிள்ளையார் சுழி கீறுஞ் சுழியுமாய் அமைந்திருக்கின்றது. கீறு — கோடு. சுழி — வட்டம். கீறு நாதமெனப்படும் சிவதத்துவத்தின் வரிவடிவு. சுழி விந்து எனப்படும் சத்தி தத்துவத்தின் வரிவடிவு. நாதமும் விந்துவும் அருவப்பொருள்கள். அவற்றுக்கு வடிவம் இல்லையாயினும், மெய்யுணர்வு பெற்ற தெய்வச் சான்றோர் தமது அருட்காட்சியிற் கண்ட உருநிலையைச் சுழியும் கீறுமாக வரிவடிவிற் குறித்துக் காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவுணர்வால் உணரப்படுவது உருவென்றும், கட்புலனுலறியப்படுவது வடிவு என்றும் ஆசிரியர் நச்சினுர்க்கினியர் தொல்காப்பியத்திற் கூறுவர். கீறுஞ் சுழியுமான இவையிரண்டும் ஓங்காரத்தின் கூறுகள். வேதம் ஆகமம் முதலிய உண்மை நூல்களும் வடமொழி தென்மொழி முதலிய கடவுண் மொழிகளும் பிறவுமான கலையுலகம் பிறந்து விளங்குவதற்குத் தாரகமாய் உள்ளது அவ்வோங் காரமேயாம்.

"குடிலை யென்னும் தடவயல் நாப்பண்
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை," என்ற சான்றேர் அருண் மொழியுங் காண்க.

## ஓங்கார வடிவம்

அவ்வோங்காரம் பிள்ளையாருடைய வடிவம். பிள்ளையார் சிவத்தின் வேரு காத அருட்சத்தியாதலினுலன்றே, கீறுஞ் சுழியுமான அவ்வடிவத்தைப் பிள்ளை யார் சுழி என்று வழங்கி வருகின்றேம். யானையின் முகமும் இவ்வடிவத்தை இனிது புலப்படுத்துகின்றது. யானையின் தலை வட்ட வடிவமாயும், தும்பிக்கை கீற்று வடிவமாயும் இருத்தலை நோக்குக. பிள்ளையாருக்கு யானை முகம் இருத்த லின் காரணம் இப்போது இனிது புலனுகும்.

கலைகளின் தோற்றத்துக்கு முதலாய் நின்ற விந்து நாதங்களின் வரிவடிவை முன்னர் எழுதுவது இடர் நீங்கும் பொருட்டுப் பிள்ளையாரை வணங்கும் வணக்க மாகவும் முடிகின்றது.

இனி, நாதமும் விந்துவும் சிவமுஞ் சத்தியும் என்று முன்னர்க் கூறினேம். குடிலை அறிவில் பொருள். சிவத்தின் வேருகாத அருட்சத்தி அதனுடன் கலந்து அதனைக் கலக்கித் தொழிற்படுத்தும்வழிச் சிவதத்துவமுஞ் சத்தி தத்துவமுந் தோன்றினவாகலின் அக்குடிலை தூய்மையுடையதாயிற்று. ஆதலின், அது சுத்த மாயை என்றும் தூமாயை என்றும் கூறப்பட்டது.

## தாமரையின் தத்துவம்

இனி, அருட்சத்தியின் வேருகாது, தொழில் வேற்றுமையால் வேறுவேருக நிற்கும் நாமகளுந் திருமகளும் இருக்கும் வெண்டாமரையும் செந்தாமரையும் விந்து நாதங்களையே குறிக்கின்றன. தாமரையின் தண்டு கீற்று வடிவத்தையும் மலர்ந்த பூச் சுழியாகிய வட்டத்தையும் குறித்து நிற்கின்றன. அறிவு, தூய்மை யும் ஒளியும் உடையதாகலின், வெண்டாமரை கலைத் தெய்வத்திற்கு இருப்பிட மாயிற்று "விந்துநாத மீதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி," என்று சான்றேர் கூறுவதுங் காண்க.

மங்கலமும் திருவும் உடையது செம்மையாதலின், அவற்றைத் தருகின்ற திருமகட்குச் செந்தாமரை இருப்பிடமாயிற்று.

இங்ஙனம், அருவப் பொருள்களாகிய நாதத்தையும் விந்துவையும் வடிவப் பொருள்களாகிய யானைமுகம், வெண்டாமரை செந்தாமரைகளில் வைத்து உயர்ந்த தத்துவவுண்மைகளைத் தெய்வச் சான்றேர் தெளிவுபடுத்திய திறம் பாராட்டற் பாலதாம்.

இன்னும், சாணம் மஞ்சட்பொடி என்பவற்றை எடுத்து வடிவஞ் செய்து, அவற்றின் மேலே அறுகம்புல்லின் இதழ்களை இட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்தும். மங்கல கருமங்
வழிபட்டு வருவதும் இவ்வுண்மையை இனிது நிறைகுடத்துக்கும் அதனையே
களுக்கு முடியுடைய தேங்காயைக் கொள்வதும், தேங்காய் வட்ட வடிவுடைய
வைப்பதும் இவ்வுண்மை இனிது புலப்படுத்தும்.
விந்துவையும், அதன் முடி கீற்று வடிவுடைய நாதத்தையும் உணர்த்தும்.

இவ்வாறு வாழ்விலும் தாழ்விலும் நிகழுஞ் சைவச் சடங்குகளிலே, உலகத்
தோற்றத்துக்கு முதலாயும், எம்மறிவுக் கெட்டாது ஒளியுடைய அருவப் பொரு
ளாயும் நிற்கும் அவ்விரண்டு தத்துவங்களையும் பருப்பொருள்களில் வைத்து நினைந்
தும் வாழ்த்தியும் வணங்கியும் வருகின்றோம்.

## ஓங்கார ஓசை

இனி, நாத விந்துக்களின் அமைவான ஓங்காரவோசையே உலகத் தோற்
றத்துக்குக் காரணம் என்றும், அவ்வோங்காரமே மந்திரங்கட்கு முதலென்றும்,
அதுவே சிவமென்றும் சைவநூல்கள் கூறும். சிவத்தின் திருக்கையில் இருக்குந்
துடி எனப்படும் தமருகவோசையே உலகத் தோற்றத்தை உண்டாக்குமெனபது,
"தோற்றந் துடியதனில," என்னும் அருண்மொழியால் அறியப்படும்.

கிறித்த வேதத்திலும், "ஆதியிலே வார்த்தை இருந்தது; அவ்வார்த்தை தேவனிடத்திருந்தது; அவ்வார்த்தை தேவனுயிருந்தது," என்று வருதலும் நோக்குக.

## சிவமயத்தின் விளக்கம்

இனிச் சிவமயம் என்பதை விளக்குவாம். சிவம் என்பது, பேரறிவும் பேரருளும் பேரின்பமும் முதலியனவாகச் சொல்லப்படும் எண்வகையருட் குணங்களை உடையதாய், அறிவில் பொருளாகிய மாயையையும் அறிவுப் பொருளாகிய மன்னுயிரையும் இயக்கித் தொழிற்படுத்தவல்லதாய் அவையெல்லாவற்றை யும் தனக்குள்ளே யடக்கித் தான் பிறிதொன்றில் அடங்காததாய் உள்ள முழு முதற் பொருளாம். மயம் என்பது தன்மை. ஆகவே, சிவத்தின் எண்குணங்களை யும் மன்னுயிர்கள் அடைந்து சிவமாதல் என்பது கருத்து. சிவமாதலே வீடு பேரும்.

## பிறவிப் பயன்

மன்னுயிர்கள் ஆணவத்தால் அறிவிழந்து பொய்யான உலகத்தையும் உலக இன்பங்களையும் மெய்யென்று நம்பி வினைகளைச் செய்து, பிறந்தும் இறந்தும் உழல்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து ஆணவம் கன்மம் மாயை என்பவற்ருற் கட்டுண்டு கிடக்கின்றன. சிவம் அம்மும்மலக் கட்டுக்களைப் பேரருட்டிறத்தால் நீக்கித் தம்மயமாக்கிப் பேரின்பத்தையருளுவார். தம்மைப் போலப் பேரின்ப நிலையினவாக்குதலே சிவமயமாம். அச்சிவமயத்தைப் பிறப்பிப்பதே சிவத்தின் திருவுள்ளக் குறிப்பும் பிறவிப்பயனுமாம்.

ஆகவே, இறைவன் பேரின்பம் வழங்குவதையே நோக்கமாகக் கொண்டு உலகத்தைத் தோற்றுவிக்கும் நிலையில் நாதவிந்துக்களாகவும், பக்குவமெய்திய வுயிர்கட்கு அப்பேரின்பத்தைத் தருகின்ற நிலையிற் சிவமயமாகவும் நிற்றலை யுணர்ந்து கொள்க.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூரணாகுதிக்குரிய திரவியங்களை ஆலய எசமானரும், நித்ந்ய பூசைச் சிவாசாரியாரும், தத்புருட தீட்சாநாமம் பெற்றவருமாகிய சி. சுப்பிரமணியக் குருக்கள் எடுத்து வீதிவலம் வருதல்.



பிரதம கும்ப தீபாராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து கும்பங்களுங் கோபுரவாசலில் வீதிவலம் வர நிற்றல்.

ஆலய விமான கலச
அபிடேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பரத்துவம்

[ பண்டித - வித்துவான், சைவப்புலவர் இ. திருநாவுக்கரசு ]
பரமேஸ்வரக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

## விநாயகர் :

விநாயகர் என்னும் மொழியில் 'வி' என்ற உபசர்க்கம் மேலான எனப் பொருள்தரும். நாயகன், பதி, இறைவன், தலைவன், பிரம்மம் என்பன ஒரு பொருட் சொற்கள். ஆகவே, விநாயகர் 'மேலான தெய்வம்' என்னும் பொருளது. ஆயின், சிவனே பரமபதி. விநாயகர் மேலான தெய்வம் எனில், யார் பரம்பொருள் என்பது வினு. *காணுபத்தியர் விநாயகரே பரமபதி என்பர். சைவர்கள் 'சிவனே' என்பர். வேதாந்திகள் பதி 'பிரம்மமே' என்பர். சித்தாந்த சைவர் சிவனே விநாயகர்; விநாயகரே சிவன் என்பர். பார்வதி பரமேஸ்வரர் மூத்த திருக்குமாரர் ஆதலின் மூத்த விநாயகர் எனப்படுவார் என்றும் அவர் வடிவம் ஞானவடிவமே என்றும் கூறுவர்.

## விநாயகர் பிரணவப் பொருள் :

பிரணவம் வேதத்தின் உட்பொருள். வியாசமுனி வகுத்த நான்கு வேதங்களில் இரண்டாவதாகிய யசுர் வேதத்தினுயிரான காயத்திரி மந்திரத்தின் உட்பொருளாகவுள்ளது பிரணவம். இதனைக் குடிலை என்பர். குடிலை ஓங்காரவடிவானது. ஓம் என்னும் பிரணவம் விநாயகர் முகமாக அமைந்தது. அது ஆனை முகமாக உபசரிக்கப்பட்டது. இத்தத்துவம் ஞானியர்க்கன்றிப் பிரமனுதிதேவர்க்கும் ஏனையோர்க்கும் விளங்கமுடியாதது. அதனாலேயே புராணிகர் விநாயகப் பெருமானுக்கு யானைமுகம் அமைந்தமைக்குக் கதைபுனைந்துள்ளனர்.

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் ......" என்பது தேவாரம்.

உமை பிடிவடிவு கொண்டும் இறைவன் களிறு வடிவு கொண்டும் உலகம் உய்ய மருவி, விநாயகர் அவதரிக்க அருள் செய்தார் என்றும், அதனால் ஆனை முகம் விநாயகர்க்கு ஆயிற்று என்றும் புராணம் கூறும் மாக்கதை ஆகும். ஞான வடிவம் விநாயகருக்கு மட்டும் அன்று. முருகனைக் கந்தபுராணம் "ஞானந்தான் உருவாகிய நாயகன்" எனச் சுட்டுகின்றது. மேலும் முருகனும் ஓங்கார வடிவினன் என அருணகிரியும் கந்தரலங்காரத்து "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு தூங்கார்" என மொழிகின்றார். ஆகவே, சிவன் விநாயகர் முருகன் எனப் பெயரளவில் மூர்த்திபேதங்களேயன்றிப் பதி ஒன்றே;

*காணுபத்தியர் — கணபதியை வழிபடும் மார்க்கத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகசிவன் எனக் கற்பிக்கப்படினும்
மோனசிவன், யோகசிவன், ஞானசிவன், விநாயகர். சிவசக்தி ஐக்கிய சொரூபம்
'பிரமம்' ஒன்றே. ஞானசிவசொரூபம் பசு ஞான பாசஞானங்கள் நீங்கப்பெற்ற
முருகன். ஆதலின், மூவரும் ஒருவரே. நிலையெய்திப் பேரின்பத்துள்ளே
ஆன்மாக்கள் தன்னிழலாம் பதியோடு அத்துவித
திளைக்கும்.

## அத்துவித முத்தி :

முத்தான்மாக்கள் இறைவனேடு ஒன்ருய்
வாசனமலம் நீங்கப்பெற்ற
